அன்பளிப்பு 40P

# களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளை தாங்கிவரும் பத்திரிகை 10-06-1994

உள்ளே...

1. சுதந்திரத்தைத் தேடி - மேஜர் யாழிசை
2. சமாதானம் ஏன் பிறக்கவில்லை
3. சிறுகதை - சிறுபிள்ளை வேளாண்மை
4. சீனாவின் ஆயுத வர்த்தகம்: தென்னாசிய...
5. தமிழீழ அரசும் அதன் நிறுவனங்களும் (அண்மையில் தமிழீழம் சென்று திரும்பிய ஒருவரின் நேரடி அனுபவங்கள்)
6. பெரும் எடுப்பிலான படைக்கலக் கொள்வனவு
7. எந்த ஓர் விடுதலைப் போராட்டமும் வெல்லுமென நிரூபித்த மண்டேலா

# குடாநாடு மீது தாக்குதல்கள் அதிகரிப்பு

## சர்வதேச யுத்த விதிகளுக்கு முரணான குண்டு வீச்சுக்கள்

சிறீலங்கா பாதுகாப்புப் படைகள் வைகாசி 26, 27ம் திகதிகளில் குடாநாடெங்கும் மக்கள் குடியிருப்புகளை நோக்கி, பீரங்கித் தாக்குதல்களையும் செல் தாக்குதல்களையும் விமானக்குண்டு வீச்சுக்களையும் நடாத்தியுள்ளன. சர்வதேச யுத்த விதிகளுக்கு முரணான வகையில், "மக்கள் மேல் முற்றுகை யுத்தம்" நடாத்தி 'இனஅழிப்பு' செய்து வரும் சிறீலங்கா அரசாங்கம் தற்போது எவ்வித தயக்கமுமின்றி யுத்தக் குற்றச் செயல்களில் பகிரங்கமாக ஈடுபட்டு வருகின்றது.

பொன்னாலை, காரைநகர், வடமராட்சி கிழக்கு கரையோரப் பகுதிகளில் சிறீலங்காக் கடற்படையினர் தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர். அதேவேளை புக்காரா விமானங்கள் குண்டுகளை வீசியதாகவும் கெலிகளில் இருந்து கண்மூடித்தனமாக மக்கள் குடியிருப்புக்கள் மீது ரவைகள் தீர்க்கப்பட்டன எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதற்கிடை வைகாசி 21 இல் கோப்பாய் வடக்கே இடம்பெற்ற குண்டுவீச்சினால் மூன்று பொதுமக்கள் கொல்லப்பட்டு ஏழு வீடுகள் சேதமடைந்ததாக மற்றொரு செய்தியொன்று கூறுகிறது.

குடத்தனை, நாகர்கோயில் பகுதிகளில் வைகாசி 25ம் திகதி மாலை 6 மணி முதல் இரவு 9 மணிவரை, இரு புக்காரா தரைத் தாக்குதல் விமானங்களும் இரு உலங்குவானூர்திகளும் கலிபர் குண்டுவீச்சுத் தாக்குதல்களை தொடர்ச்சியாக மேற்கொண்டன என யாழ்ப்பாணச் செய்திகள் கூறுகின்றன.

### வசாவிளானில் இராணுவத்தினர் பலி

வசாவிளானுக்கு மேற்கே சிறீலங்கா பாதுகாப்பு முன்னரங்க

தொடர்ச்சி 15ம் பக்கம் ....

# "கிழக்கில் பெரும்பகுதி புலிகளின் கட்டுப்பாட்டில்"

## யூ.எல்.முகையதீன் முஸ்லீம் காங்கிரஸ் எம்.பி.

"திருகோணமலையில் 50 வீதமும் அம்பாறைப் பிரதேசத்தில் 20 வீதமும் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது. மட்டக்களப்பில் 40 வீதத்திற்கு மேற்பட்ட பகுதி அவர்களிடமே உள்ளது. இந்நிலையில் சிறீலங்கா அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு முன்வைக்கப்படுவது அவசியமானது. சிறீலங்காப் பாராளுமன்றத்தில் எனது கன்னிப் பேச்சில் தமிழர்களின் பிரச்சினை தீர்க்கப்பட்டாலே முஸ்லீம்களின் பிரச்சினை தீரும் என்பதையும், யுத்தத்தை தீர்வாக முன்வைக்காமல் அரசியல் தீர்வையே முன்வைக்க வேண்

தொடர்ச்சி 15ம் பக்கம் ....

# ஐரோப்பிய பாராளுமன்ற அறிக்கையை மாற்றி அமைப்பதற்கு என்னாலான முயற்சி செய்வேன்

## ஐரோப்பிய பாராளுமன்ற இலங்கைப் பிரிவின் தலைவி அனிதா பொலக் வாக்குறுதி

"அண்மையில் வெளியிடப்பட்ட ஐரோப்பிய பாராளுமன்ற அறிக்கை பற்றி புதிய ஐரோப்பிய பாராளுமன்றத்தில் எடுத்துக் கூறி, அதனை மாற்றியமைத்து தமிழர்களுக்கு நியாயம் கிடைக்கக் கூடியதான அறிக்கை ஒன்றை வெளியிட என்னாலான முயற்சிகளை மேற்கொள்வேன்"

இவ்வாறு ஐரோப்பிய பாராளுமன்றத்தில் சிறீலங்காப் பிரிவுக்குத் தலைவியாக உள்ளவரும் அண்மையில் சிறீலங்காவுக்கு உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலண்டன் திரும்பியவருமான திருமதி அனிதா பொலக், இலண்டன் வெம்பிளி தெற்குத் தொகுதியில் வைத்து தமிழ் மக்களுக்கு வாக்குறுதி அளித்தார்.

"கடந்த பங்குனி மாதமளவில் சிறீலங்காவின் தூதுக்குழுவொன்று, பிரஸல்ஸ் வந்து ஐரோப்பிய பாராளுமன்றத்தைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு ஒரு பக்கச் சார்பான விளக்கங்களைக் கொடுத்து விட்டுச் சென்றதன் பின்பே, இவ்வறிக்கை தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. ஆயினும் இதனைப் பற்றிய விவாதமோ அல்லது ஆய்வுகளோ ஐரோப்பிய பாராளுமன்றத்தில் நடத்தப்படாமல் அவசரம் அவசரமாக இது வெளியிடப்பட்டுள்ளதாக அறிகிறேன். இது சட்ட மூலமோ அல்லது சட்டமோ அல்ல. ஆயினும் இதனை சில நாடுகளோ அல்லது ஆட்களோ தாம் எடுக்கும் முடிவுகளுக்கு ஆதாரமாக காட்டக்கூடிய சந்தர்ப்பம் உள்ளது. எனவே புதிய பாராளுமன்றத்தில் இவ்வறிக்கையை மாற்றியமைப்பதற்கான என்னாலான முயற்சிகளைச் செய்வேன்" என திருமதி அனிதா பொலக் கூறினார்.

அத்துடன் ஐரோப்பாவின் பல்வேறு நாடுகளிலும் பரந்துவாழும் தமிழர்கள், தமது ஐரோப்பா பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் இவ்வறிக்கை பற்றிய தங்கள் கருத்துக்களை எடுத்துக் கூறி, அதனை மாற்றியமைக்குமாறு வேண்டுகோள் விடுப்பது நல்லது எனவும் கருத்து வெளியிட்டுள்ளார். ■

# தங்கு நிலையற்ற தனி அரசொன்றிற்கான அத்திவாரத்தை கட்டி எழுப்பவேண்டும்!

## வேளாண் மன்னர் விருது வழங்கும் வைபவத்தில் தலைவர் பிரபாகரன்

"எமது தன்னாட்சி உரிமைப் போராட்டம் தமிழீழத் தனியரசை நிறுவும் இலட்சியத்தைக் கொண்டது. இந்தத் தனியரசை நிர்மாணிப்பதற்கு ஒரு தன்னிறைவான பொருண்மியக் கட்டமைப்பு அவசியம் எனவேதான்; அரசியல் விடுதலை என்ற எமது குறிக்கோளுடன் பொருளாதார விடுதலையும் ஒன்றிணைந்து நிற்கிறது. நாம் நிர்மாணிக்கப் போகும் நாடு, தங்குநிலையற்றதாக, தன்காலில் தரித்து நின்று வளர்ச்சி பெறக்கூடியதாக அமையப் பெறவேண்டும். அதற்கான அத்திவாரத்தை நாம் இப்பொழுதிருந்தே கட்டியெழுப்ப வேண்டும்" இவ்வாறு கடந்த மாதம் 'வேளாண் மன்னர்' விருதுகளை வழங்கும் வைபவத்தில் உரையாற்றிய தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் தெரிவித்தார்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஒழுங்கு செய்த இந்நிகழ்ச்சிக்கு அந்நிறுவனத்தின் பொறுப்பாளர் திரு. ரவி தலைமை தாங்கினார். இவ்விழாவில் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தைச் சேர்ந்த ஏனைய பொறுப்பாளர்களும், பணியாளர்களும் கலந்து கொண்டனர்.

இவ் வைபவத்தில் தேசியத் தலைவர் பிரபாகரன் ஆற்றிய உரையின் முழு விபரம் வருமாறு :

எமது விடுதலைப்போராட்ட வரலாற்றில் காலத்திற்குக் காலம், நாம் பெரும் நெருக்கடிகளையும், சவால்களையும் எதிர்கொண்டு வருகிறோம். பெரும் துன்ப துயரங்களுக்கு முகம் கொடுத்து வருகிறோம். எமது மக்களின் உறுதிப்பாட்டை உடைத்துவிடவேண்டும் என்ற ஒரே நோக்கில், சிங்களப் பேரினவாதம், எமது மக்கள் மீது, எண்ணற்ற கொடுமைகளை இழைத்து வருகிறது; பெரும் அநீதிகளைப் புரிந்து வருகிறது. இந்தக் கொடூரமான அடக்குமுறைகளை எல்லாம், மிகவும் துணிவுடனும், தளராத உறுதியுடனும், வியக்கத் தக்க முறையில் எமது மக்கள் எதிர்கொண்டு வந்திருக்கிறார்கள்.

### மக்கள் மீது தாங்கொணா சுமையை சுமத்தியுள்ள பொருண்மிய தடைகள்

கடந்த நான்கு ஆண்டுகளாக தமிழீழ தேசம் மீது, ஒரு திட்டமிட்ட பொருண்மிய தடையை சிங்கள அரசு திணித்துவருகிறது. தமிழீழ மக்களின் பொருண்மிய வாழ்வைச் சிதைத்து அவர்களது, நாளாந்த சீவியத்தை சீர்குலைக்கும் நோக்கில் இத்தடைகள் விதிக்கப்பட்டன. தமிழினம், தனதுகாலில், தனித்து வாழமுடியாது; சிங்கள தேசத்தில் தங்கி வாழவேண்டும், என்ற நிலையை உருவாக்கி, தமிழரின் தன்னாட்சிப் போராட்டத்திற்கு சாவுமணி அடிக்கும் நோக்கிலும் இந்தப் பொருண்மியப் போர் தொடுக்கப்பட்டது.

இந்தப் பொருண்மியத்தடை எமது மக்களின் வாழ்வு நிலையில் என்றுமில்லாத பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது என்பது உண்மை. போர் அனர்த்தங்களுடன், பொருண்மிய அழுத்தங்களுமாக, எமது மக்கள் தாங்கொணாச் சுமைகளை தாங்கி நிற்க நிர்ப்பந்திக்கப்பட்டனர். எனினும் இந்தப் பெரும் பளுவின் விளைவாக, எமது மக்கள் மத்தியில் ஒரு புதிய விழிப்புணர்வும் ஏற்படத் தவறவில்லை. தடைகளால் விளைந்த பாதிப்பும், அதனால் எழுந்த பற்றாக்குறையும், அந்தப் பற்றாக்குறையால் பிறந்த தேவைகளுமாக, ஒட்டுமொத்தத்தில் சுயசார்புப் பொருளாதாரத்தின் அவசியத்தையும், முக்கியத்துவத்தையும் எமது மக்களுக்கு நன்கு உணர்த்தியது. அந்நியனின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து போகாது, எமது மண்ணில், எமது மண்

தொடர்ச்சி 7ம் பக்கம் ....

# பொலிசாரும் சிங்களவரும் சேர்ந்து முஸ்லீம்களின் வள்ளங்களை எரித்தனர்

வண்ணாத்தி வில்லில் உள்ள காரைதீவு முஸ்லீம் மீனவர்களுக்குச் சொந்தமான சுமார் 2 கோடி ரூபா பெறுமதியான மீன்வாடிகள், வள்ளங்கள், வலைகள், போட் மோட்டர்கள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் ஆகியன சிறீலங்காப் பொலிசாராலும் சிங்களவர்களாலும் அண்மையில் எரித்து நாசமாக்கப்பட்டுள்ளன.

இவ்வள்ளங்கள் எரிக்கப்பட்ட இடத்தில் இருந்து பத்து யார் தூரத்திலேயே பொலிஸ் நிலையம் உள்ளது. கசன் மரிக்கார் காலித்தீன் என்பவர் சிங்களவர்களும், பொலிசாரும் சேர்ந்தே இந்த தீவைப்புக்களை நடாத்தியதை தன் கண்ணால் கண்டதாகச் சாட்சியம் கூறியுள்ளார்.

இப்பிரதேசத்தில் 575 முஸ்லீம் குடும்பங்களும் 75 சிங்களக் குடும்பங்களும் வசித்து வருகின்றன. ஆயினும் சிங்களப் பொலிசார் காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை மட்டுமே முஸ்லீம்களை மீன்பிடிக்க அனு

தொடர்ச்சி 15ம் பக்கம் ....

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**



# நான்கு ஆண்டுகளாக...

எதிர்வரும் ஆனி 11ம் திகதியுடன், சிறீலங்காவின் சிங்கள பௌத்த பேரினவாத அரசாங்கம் தமிழீழ மண்மீதும், மக்கள் மீதும் இரண்டாவது கட்ட ஆக்கிரமிப்பு யுத்தத்தைத் தொடங்கி நான்கு ஆண்டுகள் பூர்த்தியாகின்றது.

இந்த யுத்தத்தைத் தொடங்குகையில் 'தமிழீழ விடுதலைப்புலிகளை ஆயுத பலாத்காரத்தால் ஒடுக்குதல், தமிழீழ மக்களை முற்றுகைக்கு உள்ளாக்குவதன் மூலம் அவர்களது போராட்ட மனவுறுதியைச் சீர்குலைத்து அடிபணிய வைப்பது' எனும் இரண்டு இராணுவ நோக்கங்களைச் சிறீலங்கா கொண்டிருந்தது. ஆயினும் இந்த இரண்டு இராணுவத் தந்திரோபாயங்களும் விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டதும் அல்லாமல் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் எனப்படும் மீட்கப்பட்ட பிரதேசங்களில் தமிழீழ மக்களின் இறைமையை விடுதலைப் புலிகள் உறுதிப்படுத்திக் கொண்டனர். இலங்கைத் தீவின் தமிழர் தாயகமான வடக்கிலும் கிழக்கிலும் பெரும்பாலான பகுதி புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது என்பதை உலகறியும். இப்பிரதேசங்களில் சர்வதேச வழமைக்கு ஏற்ப "தமிழீழ அரசு நோக்கிய அரசை" (Defacto Government of Tamil Eelam) விடுதலைப் புலிகள் உருவாக்கி பரிபாலித்து வருகின்றனர். சட்டவாக்கம், சட்ட அமுலாக்கம், நிர்வாகம் என்கிற மொன்டிஸ் கியூவின் வலுவேறாக்கங்களை தமிழீழத் தேசிய அரசில் தெளிவாகக் காணக்கூடிய வகையில், தமிழீழக் காவல் துறை, தமிழீழ நீதித்துறை, தமிழீழ நிர்வாகம் என்பன செயற்பட்டு வருகிறன.

தமிழீழ அரசும் அதன் இறைமையும் தெளிவாக வெளிப்படத் தொடங்கியதும் அதனை அழிப்பதற்கான வழிமுறைகளில் ஆக்கிரமிப்பாளரான சிறீலங்கா அரசாங்கம் செயற்பட்டு வருகிறது. இதுவே 1991 ஆவணி முதல் அமுலாக்கப்படும் மக்கள் மீதான பொருளாதாரத் தடை, தொடர்ச்சியாக சிறீலங்கா தொடுத்துவரும் மக்கள் மீதான வான்வழி -கடல்வழி தாக்குதல்கள், இராணுவ முற்றுகைகள், தரைநகர்வு முயற்சிகள் போன்ற இனஅழிப்புச் செயற்பாடுகளாக வெளிப்பட்டு வருகிறது. இவற்றை தமிழீழ தேசிய பாதுகாப்புக்கு பொறுப்பான இராணுவமாகிய விடுதலைப் புலிகள், தமது கெரில்லாத் தாக்குதல்கள் -மரபுவழிச் சண்டைகள் மூலம் தடுத்து நிறுத்தி வருகின்றனர்.

1972 இல் அரசற்ற நாட்டினமாக்கப்பட்ட தமிழீழ மக்கள் ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து தம்மை விடுவிப்பதற்கு, சர்வதேச சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மேற்சொன்ன வழிமுறைகளைப் பயன்படுத்தி போராடி வருவது மக்களதும் மனிதர்களதும் உரிமைகள் எனும் சாசனத்தின் 20(2)ஆம் பிரிவுக்கு ஏற்ப சர்வதேச சட்ட விதிகளுக்கு அமைந்த சட்டரீதியான செயற்பாடாகும்.

ஆயினும், சிறீலங்கா அரசாங்கம் தான் நடத்திவரும் இனஅழிப்பு முயற்சிகளுக்குச் சர்வதேச அங்கீகாரத்தைப் பெறும் நோக்கில் சட்டரீதியான விடுதலைப் போராட்டத்திற்கு 'பயங்கரவாதம்' எனும் அடைமொழியைக் கொடுத்து உண்மைக்குப் புறம்பான பிரச்சாரம் செய்து வருகிறது. ஆனால் பயங்கரவாதம் பற்றி ஆய்வு செய்யும் புத்திஜீவிகள், எழுதி வெளியிட்ட -வெளியிட்டுவரும் எந்தவொரு நூலிலும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தையோ அல்லது தமிழீழ விடுதலைப் புலிகளையோ பயங்கரவாதத்தின் உதாரணங்களாக எவ்விடத்திலும் குறிக்கவில்லை என்பது இங்கு அவதானிக்கப்பட வேண்டிய விடயம்.

மேலும் இந்த நான்கு ஆண்டுச் சம்பவங்களையும் கூர்மையாக அவதானிக்கும் சர்வதேச சமூக அறிஞர்கள், தமிழீழ மக்களை அரசற்ற நாட்டினம் (Nation without State) எனத் தெளிவாக அடையாளம் காட்டிவருகின்றனர். இதனால் தமிழர்களின் சுயநிர்ணய உரிமை சர்வதேச சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, விரைவில் சர்வதேச நாடுகளின் அங்கீகாரத்தைப் பெறக்கூடிய சூழ்நிலை விரைவுபட்டு வருகிறது. இதுவே, இவ் அங்கீகாரத்தை வழங்கக் கூடிய தொகுதியாகக் காணப்படும் 'தமிழீழ அரசு நோக்கிய அரசு'ப் பகுதியை பாரிய யுத்தமொன்றின் மூலமாவது அழித்துப் போட வேண்டும் எனும் துடிப்பை சிறீலங்காவுக்கு ஏற்படுத்தியுள்ளது.

ஆனால், தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் "யுத்தம் தமிழ் மக்கள் மேல் திணிக்கப்பட்டது" என்பதையும், "தமிழீழ மக்கள் பாதுகாப்புடனும் சமத்துவத்துடனும் வாழக்கூடிய நீதியான தீர்வே தமிழர்களின் தேவை" என்பதையும், "தமிழர் தாயகத்தினை பூகோள ரீதியாக அங்கீகரித்த சமஸ்டி ஆட்சிமுறை முன்வைக்கப்பட்டால் பரிசீலிக்கத் தயார்" எனவும் தமது பேச்சாலும் நல்லெண்ணத் தூதுவர்களுக்கு அளித்த பேட்டிகளாலும் எடுத்துக்கூறி தமிழர்களின் நிலைப்பாட்டையும் அவர்களுக்கு சமாதானத்தின் மேலுள்ள அக்கறையையும் வெளிப்படுத்தி வருகிறார். ஆயினும் சிறீலங்கா தமிழர்களின் அமைதிக்கான அறைகூவல்களை அலட்சியம் செய்து, நான்கு ஆண்டுகளாக இராணுவத் தீர்வையே, தேசிய இனங்களுக்கிடையிலான முரண்பாட்டுக்கு தீர்வாக முன்வைத்து வருகிறது. இதுவே இலங்கைத் தீவில் இரத்த ஆறும் உயிர்ப்பலிகளும் பொருளாதாரச் சேதங்களும் நாளாந்த வாழ்க்கையாவதற்கு அடித்தளமாக உள்ளது. ஆகவே சமாதானத்தை விரும்பும் எவரும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சிறீலங்கா அரசாங்கம் பேச்சுவார்த்தைக்குப் போகக் கூடிய நல்லெண்ண சூழ்நிலையை உருவாக்குவதன் மூலமே, இந்த நான்கு ஆண்டு கால கொடிய யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரலாம். பௌத்த,சிங்கள பேரினவாத வெறித்தன்மையினையே ஆட்சியை அமைப்பதற்கும் தொடர்வதற்குமான குறுக்குவழியாக என்றும் கருதும் சிறீலங்கா அரசாங்கத்தை வழிக்குக் கொண்டுவருவது இலகுவான காரியமல்ல. நிறைய சர்வதேச அழுத்தங்களும், நெருக்குதல்களும் கொடுக்கப்பட்டால் மட்டுமே இது சாத்தியமாகும். இதற்காக உழைக்கவேண்டியது புலம்பெயர்ந்துவாழும் தமிழர்களாகிய நமது கடமை. ■

# சுதந்திர வர்த்தக வலயமென்ற பேரில் திருமலையில் சிங்களக் குடியேற்றங்கள் ஊக்குவிப்பு

திருகோணமலை துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமான அறுநூறு ஏக்கர் காணியில் சுதந்திர வர்த்தக வலயம் ஒன்றை நிறுவுவதற்கு, சிறீலங்கா ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க சிறீலங்கா அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளார். இதில் உடனடியாக இரண்டாயிரம் பேருக்கும், பின்னர் 50,000 பேருக்கும் வேலை வாய்ப்பு வழங்குவதாகக் கூறி சிங்களவர்களை மேலும் திருகோணமலையில் குடியேற்ற சிறீலங்கா ஜனாதிபதி சதிச்செயலில் ஈடுபட்டுள்ளார்.

முன்பு பிரிமா மாஆலை அமைக்கப்பட்டு முழுவதும் சிங்களவர்களுக்கே வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டது அனைவரும் அறிந்ததே.

திருகோணமலை தமிழீழத் தலைநகராக இருப்பதை மாற்றக் கூடிய வகையில், இப்பிரதேசத்தின் சனத்தொகை விகிதாசாரத்தில் சிங்களவர் தமிழரை விட அதிகளவில் அதிகரிக்கக் கூடிய வகையில் சிறீலங்கா ஜனாதிபதி திட்டங்களைத் தீட்டி வருகிறார். இச்சுதந்திர வர்த்தக வலயம் சிறீலங்கா ஜனாதிபதியின் செயலாளர் தலைமையிலான குழு ஒன்றினாலேயே நிர்வகிக்கப்பட இருக்கிறது.

### திருகோணமலையில் புலிகளின் தாக்குதல்

இதற்கிடையில் திருகோணமலை புல்மோட்டை சென் மைக்கல் வீதியூடாக டிராக்டரில் சென்றுகொண்டிருந்த இராணுவத்தினர் மீது, விடுதலைப் புலிகள் மறைந்திருந்து தாக்கியதில் ஐந்து இராணுவத்தினர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்தனர்.

மேலும் வைகாசி 24ம் திகதி அதிகாலை திருகோணமலை கல்பொத்த பகுதியில் ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது, விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலால் இரண்டுஇராணுவத்தினர் கொல்லப்பட்டு ஒருவர் காயமடைந்ததாகத் தெரிய வருகிறது.

இது ஒருபுறமிருக்க ஏறாவூர் சித்தாண்டியில் உள்ள இராணுவ பதுங்கு குழிமீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட திடீர் தாக்குதலில், அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த சிங்கள இராணுவத்தினர் உயிரிழந்ததாகச் செய்திகள் கூறுகின்றன. ■

# வடபகுதிக்கு கிடைத்த அன்பளிப்பு இராணுவ தேவைக்காக பறிமுதல்

வடபகுதியின் தேவைக்காக அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றினால் அன்பளிப்பு செய்யப்பட்ட பல்வைத்திய அலகு ஒன்று, இராணுவத்தினரின் தேவைக்காகப் பயன் படுத்தப்பட்டு வருகிறது. வடபகுதி மக்களிற்கு நடமாடும் பல்வைத்திய அலகு மூலமாக பற் சிகிச்சை வசதிகளை ஏற்படுத்தும் நோக்குடன் சிறுவர் பாதுகாப்பு நிதியம் என்ற சர்வதேச அரச சார்பற்ற நிறுவனத்தினால் வடபகுதிக்கு மேற்படி அலகு எடுத்துவரப்பட இருந்தது

மேற்படி நடமாடும் பற் சிகிச்சை அலகில் பற் சிகிச்சைக்கான சகல மருத்துவ உபகரணங்கள், மற்றும் தளபாடங்களும் அடங்கியிருந்தன.

இச்சிகிச்சை அலகை வடபகுதிக்கு எடுத்து வருவதற்கு சிறீலங்கா இராணுவத்தினர் அனுமதி மறுத்துள்ளனர். அத்துடன், இச்சிகிச்சை அலகை தடுத்து வைத்து தற்பொழுது தமது தேவைக்காகப் பயன்படுத்தி வருகின்றனர். அனுராதபுரம், பொலநறுவை ஆகிய பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்களுக்கு மேற்படி சிகிச்சை அலகு பயன் படுத்தப்பட்டு வருவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. ■

# யுத்த நிறுத்தம் ஏற்படும் சூழலை அரசாங்கமே உருவாக்க வேண்டும்

*■ பிரபல சிங்களப் பத்திரிகை ஆசிரியரான காமினி நவரத்தினா*

"யுத்த நிறுத்தம் ஏற்படுவதற்கு அரசாங்கத்திற்கு விருப்பம் இருந்தால், அதற்கான சூழ்நிலையை அரசாங்கம் தான் ஏற்படுத்த வேண்டும்" இவ்வாறு சற்றடேறிவியூ இதழின் ஆசிரியராக இருந்தவரும். பிரபல சிங்களப் பத்திரிகையளருமான காமினி நவரத்தினா கூறியுள்ளார்.

கொழும்பிலிருந்து வெளியாகும் 'யுக்திய' பத்திரிகைக்கு பேட்டியளித்த அவர் மேலும் கூறுகையில்; விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய நிலை இப்போது அரசுக்கு ஏற்பட்டுள்ளது. இன்று கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்கள் விடுதலைப் புலிகளுடனான பகைமை காரணமாக மட்டுமே அரசாங்கத்துடன் சேர்ந்துள்ளன. எனவே விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சு மட்டுமே இப்போது அவசியமானது. விடுதலைப் புலிகள் பலவீனமடைந்து உள்ளனர் என்பது தவறானதாகும். அவர்கள் பலவீனமாக இருப்பின் இராணுவத்தால் ஏன் தாக்கமுடியாமல் இருக்கின்றது? இதில் இருந்து இராணுவம் தான் விடுதலைப் புலிகளைவிட பலவீனமாக இருப்பது தெரிகின்றது.

தற்போதைய புதிய தளபதி தாக்குதல்களுக்கு தலைமை ஏற்க முடியாது. நான் தற்போது, விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பேச்சுநடத்த வேண்டும் என்பதையும். அதற்கான சூழ்நிலை ஏற்படவேண்டுமாயின் இரு சாராரும் யுத்த நிறுத்தம் செய்யவேண்டும் என்பதையும் எதிர் பார்க்கின்றேன். விமானக் குண்டு வீச்சினால் அப்பாவி மக்களே அதிகளவில் உயிரிழக்கின்றனர்.

இராணுவம் மிகவும் பலவீனமான நிலையில் இருப்பது வெளிப்படையாக உணரப்படுகின்றது. தென்மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் அரசுக்கு ஒரு பாடமாக இருக்கிறது. அண்மையில் ஜனாதிபதி விஜேதுங்காவை தனிப்பட்ட முறையில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினேன். அவர் எனதுவேண்டுகோளுக்கு விருப்பம் தெரிவித்தார். தென் மாகானசபைத் தேர்தல் முடிவுகள் அரசியலில் ஒரு பூகம்பத்தையே ஏற்படுத்தியுள்ளது. எதிர்க்கட்சித்தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவையும் சந்தித்து நான் பேச்சுவார்த்தை நடத்தினேன். அவரும் வடக்கு-கிழக்கு யுத்தத்திற்கு அரசியல் தீர்வு காணப்படுவதையே விரும்புகின்றார் எனவும் தெரிவித்தார். ■

# வடபகுதி பின்தங்கிய பகுதி மட்டுமல்ல பாதிக்கப்பட்ட பகுதியும்

*- பண்டிதரத்ன*

"இலங்கைத் தீவின் வடபகுதி கல்வியில் பின்தங்கிய பகுதியாக மட்டுமல்ல, பாதிக்கப்பட்ட மாவட்டமாகவும் கணிக்கப்படுவதற்கு நியாயம் இருக்கிறது" இவ்வாறு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் பண்டிதரத்ன தெரிவித்துள்ளார்.

ஆனால் இதே பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுதான் மின்சாரமின்மை, போசாக்கின்மை போன்ற பல கஸ்டங்களுக்கு மத்தியில் கல்வி பயிலும் வடபகுதி மாணவர்களுக்கு, கொழும்பு போன்ற வசதிகள் உள்ள பிரதேசங்களை விட அதிக புள்ளிகளை பல்கலைக்கழக அனுமதிக்கு விதித்து வருகிறது. இனவேறுபாட்டு உணர்வால் செயற்படும் தன்மை சிறீலங்கா அரசாங்கத்தின் கொள்கை என்பதை பண்டிதரத்னவின் கூற்றுத் தெளிவாக்கியுள்ளது. ■

# கடற்படை வலயத்தை நீக்க பாதுகாப்பு அமைச்சு மறுப்பு

*— அமைச்சர் பி.தயாரட்ண*

தலைமன்னாருக்கும், திருகோணமலைக்கும் இடைப்பட்ட கடற்பகுதியில் உள்ள தடைவலயத்தை நீக்க, பாதுகாப்பு அமைச்சு தொடர்ந்து மறுத்து வருவதாகக் கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன. இது தொடர்பாக புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் பி. தயாரட்ண கருத்து வெளியிடுகையில்; கடல்வலயத் தடையை அகற்றுவது தொடர்பாகப் பாதுகாப்பு அமைச்சுத்தான் தீர்மானிக்க வேண்டும். எப்போது இத் தடையை பாதுகாப்பு அமைச்சு அகற்றும் எனக் கூறமுடியாது. இது முற்றிலும் பாதுகாப்பு அமைச்சுடன் சம்பந்தப்பட்ட விடயம், பாதுகாப்பு அமைச்சுடன் புனர்வாழ்வு அமைச்சு பேச்சுவார்த்தைகள் எதையுமே நடத்தவில்லை என அவர் குறிப்பிட்டார். ■

# மன்னார்த் தீவில் புலிகள் தாக்குதல்

## ■ இரு பொலிசார் பலி, ஐவர் காயம்
## ■ ஐவரைக் காணவில்லை என அரச தரப்பு அறிவிப்பு

மன்னார்த் தீவில் பொலிஸ் நிலையம் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் அண்மையில் நடாத்திய தாக்குதலில் இரண்டிற்கும் மேற்பட்ட பொலிசார் பலியாகினர். ஏனையோர் தப்பியோடினர். இவர்களிடமிருந்த ஆயுதங்கள் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன.

அண்மையில் 'இராமையங்கல்' என்ற இடத்தில் இராணுவத்தினருடன் இடம்பெற்ற திடீர் மோதலின் போது, வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மேஜர் பாலையா, கப்டன் மில்டன் ஆகிய போராளிகளின் நினைவாகவே இத்தாக்குதல் நடைபெற்றது.

மன்னார்த் தீவில் பள்ளி முனையில் அமைந்திருந்த பொலிஸ் நிலையம் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் தாக்குதலை ஆரம்பித்தனர். 20 நிமிடங்களில் இப் பொலிஸ் நிலையம் முற்றாகத் தாக்கி அழிக்கப்பட்டது. இத்தாக்குதலில் இரண்டிற்கும் மேற்பட்ட பொலிசார் கொல்லப்பட்டனர். ஏனையோர் தப்பி ஓடிவிட்டனர்.

இதேவேளை, மன்னாரில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியினுள் அமைந்திருந்த பொலிஸ் நிலையம் ஒன்றை விடுதலைப் புலிகள் தாக்கி அழித்ததில் இரு பொலிசார் பலியானதாகவும், ஐந்து பொலிசார் படுகாயமடைந்ததாகவும், மேலும் ஐந்து பொலிசார் காணாமல் போனதாகவும் கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இத்தாக்குதலின் போது விடுதலைப்புலிகள் தரப்பில் ஒரு போராளி வீரச் சாவைத் தழுவிக் கொண்டார்.

பள்ளிமுனைப் பொலிஸ் நிலையத் தாக்குதலில் கைப்பற்றப் பட்ட ஆயுதங்கள் :-

| | |
|---|---|
| 203 பிஸ்டல் | -1 |
| ரி56 - 1 துப்பாக்கி | -1 |
| ஏ. கே ரவைக் கூடு | -1 |
| ஜே. ஆர் ரக கைக்குண்டுகள் | -8 |
| ஐ. எம் ரவைகள் | -6452 |
| பராலைற் | -2 |
| ஏ. கே கோல்சர் | -1 |
| ஏ. கே. எல். எம். ஜி கோல்சர் | -1 |
| தண்ணீர்க்கான் | -9 |
| றெயின் கோட் | -10 |
| இராணுவ சப்பாத்துச் சோடி | -10 |
| இராணுவத் தொப்பி | -1 |
| பரட் தொப்பி | -1 |
| இராணுவப் பட்டி | -1 |

# தோப்பூர்பால பொலிஸ் காவலரண் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல்

திருகோணமலை மாவட்டம் மூதூரில் பொலிஸ் காவலரண் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட திடீர் தாக்குதலில் இரண்டு பொலிசார் கொல்லப்பட்டனர். அவர்களிடமிருந்து ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

இரவு 9 மணியளவில் பாலத் தோப்பூருக்கும், தோப்பூருக்கும் இடையில் தோப்பூர்பாலத்திலிருந்த பொலிஸ் காவலரண் ஒன்றின்மீது இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதலின்போது விடுதலைப்புலிகளின் தரப்பில் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

| | |
|---|---|
| ரி 56-1 ரக துப்பாக்கி | -3 |
| வோக்கி | -1 |
| ரி 56 மகசின் | -15 |
| ஏ. கே கோல்சர் | -4 |
| நடுத்தர ரவைகள் | -418 |
| றெயின் கோட் | -6 |
| ரோச் | -1 |

என்பன விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன. ■

# வன்னியில் புலிகள் அதிரடி

## ■ 5 படையினர் பலி - பலர் படுகாயம் ■ புதிய காவலரண்மீது தாக்குதலென அறிவிப்பு

வன்னி மாவட்டத்தில் மணியர் காவலரண் பகுதியில் விடுதலைப் புலிகள் அண்மையில் நடாத்திய அதிரடித் தாக்குதலில் 5ற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர்.

காலை 6-10 மணியளவில் இக் காவலரணிலிருந்து 250 யார் முன்பாக தடைகளை அகற்ற வந்த 25 ற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் மீதே விடுதலைப் புலிகள் இவ் அதிரடித் தாக்குதலை நடாத்தினர்.

10 நிமிடங்கள்வரை இடம் பெற்ற இத்தாக்குதலில் 5ற்கும் மேற்பட்ட சிறீலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஏனையோர் காயங்களுடன் தப்பி ஓடிவிட்டனர். இத் தாக்குதலை சிறீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் ஊர்ஜிதம் செய்துள்ளன.

இதே வேளை, விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் அண்மையில் உருவாக்கப்பட்ட இராணுவ நிலை ஒன்றே இலக்கானதாக இராணுவ அதிகாரிகளை மேற்கோள்காட்டி பி. பி. சியின் கொழும்புச் செய்தியாளர் ஜோர்ஜ் ஆர்னி தெரிவித்தார். செட்டிகுளத்தில் மேற்கொள்ளப்பட்ட படையினரின் ஒப்பரேசன் ஜயமகா இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து புலிகள் இத் தாக்குதலை நடத்தியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இத் தாக்குதல் இராணுவத்தினரைக் கவலைக்குள்ளாக்கும் தாக்குதல் எனவும் 10 தினங்களுக்கு முன்பே இப்பகுதியில் இராணுவத்தினரின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்றும் பி. பி. சி கருத்துத் தெரிவித்தது.

இத்தாக்குதலின்போது விடுதலைப் புலிகளால் இராணுவத்தினரிடமிருந்த ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. இத்தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் சேதம் எதுவும் இல்லை.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

| | |
|---|---|
| 60 எம். எம் மோட்டார் | -1 |
| ரி 56 - 2 ரக துப்பாக்கி | -1 |
| ரி 56 -1 ரக துப்பாக்கி | -1 |
| ரி 56 புதிய மொடல் துப்பாக்கி | -1 |
| 60 எம். எம் எறிகணை | -16 |
| ஏ. கே ரவைக்கூடுகள் | -3 |
| நடுத்தர ரவைகள் | -855 |
| சிறிய கிளைமோர் | -1 |
| வயர் றோள் | -1 |
| வெடிக்க வைக்கும் கருவி | -1 |
| தண்ணீர்கான் | -3 |
| தண்ணீர்க்கான் கோல்சர் | -4 |
| ஏ. கே எல். எம். ஜி கோல்சர் | -1 |
| றெயின் கோட் | -1 |
| மில்றி பெலிட் | -3 |
| கிற் பாக் | -2 |

# வடக்கு-கிழக்கு மக்களின் பெயரில் கொழும்பிலுள்ளவர்கள் நிதி மோசடி

கொழும்பிலுள்ள செல்வாக்கு மிக்க தமிழர்கள் சிலரும் சிங்களவர் சிலரும் இணைந்து தமக்கிடையே சில அமைப்புக்களை ஏற்படுத்தி, வடக்கு-கிழக்கு நிலைமையைக் காரணம்காட்டி வெளிநாடுகளிலிருந்து பணத்தினைப் பெற்று தமது சுயதேவைகளுக்காக பயன்படுத்துவதாக தெரியவருகின்றது.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது. வடக்கு கிழக்கு பகுதிகளில் தமிழ் மக்களின் நிலையைக் காட்டி புனர்வாழ்வு மற்றும் நிவாரணம் போன்ற பணிகளில் ஈடுபடுவதாகக் கூறி, இப்பகுதியில் நிலவும் சூழலைப் பற்றி எடுத்துரைத்து, பெறப்படும் பெருமளவு பணத்தில் சிறிதளவு கூட உண்மையில் சம்பந்தப்பட்டவர்களால் வடக்கு-கிழக்கு பகுதிகளில் பயன்படுத்தப்படுவதில்லை. அண்மையில் மட்டக்களப்பிற்கு விஜயம்செய்த அவுஸ்திரேலிய தூதுவராலய அதிகாரி ஒருவர், இதுபற்றி வெளிப்படையாகக்கூறி தமது மன வேதனையை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை மட்டக்களப்பு பகுதியில் செயற்படும் சர்வதேச தொண்டர் அமைப்புக்கள் சில, உள்ளூர் தலைமையைக் கொண்டுள்ள தொண்டர் அமைப்புக்களின் நடவடிக்கைகளுக்கும் இராணுவ உதவியுடன் முட்டுக்கட்டை போட்டு வருவதாகவும் கூறப்படுகிறது. அரசாங்கத்தின் உதவியோடு உள்ளூர் தலைமையைக்கொண்டுள்ள சிறிய தொண்டர் அமைப்புக்களின் சேவைகளை கட்டுப்படுத்தும் இத்தகைய அமைப்புக்களின் செயற்பாடு குறித்து, மக்கள் விசனம் அடைந்துள்ளனர் எனத் தெரியவருகின்றது. ■

மட்டு. தெகிலாமுனை

# கிராமத்திற்குள் புகுந்து இராணுவத்தினர் அட்டகாசம்

கொக்கட்டிச்சோலை முகாமிலுள்ள சிறீலங்கா இராணுவத்தினர் தெகிலாமுனை கிராமத்திற்குள் புகுந்து பல பொதுமக்களை அடித்து துன்புறுத்தியதுடன் அப்பகுதியைவிட்டு வெளியேறுமாறும் மிரட்டியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொக்கட்டிச்சோலை முகாமைச் சேர்ந்த சிறீலங்கா இராணுவத்தினர் காஞ்சிரன்குடா தெகிலாமுனைக் கிராமத்திற்குள் புகுந்து அங்குள்ள மக்களைக் கைது செய்ததுடன், வீதிச் சோதனைகளிலும் ஈடுபட்டனர்.

பின்பு கைதுசெய்த மக்களைத் தாக்கியுள்ளனர். இதன்போது ஆறு பிள்ளைகளின் தந்தையான மாணிக்கப்பிள்ளை கனகரத்தினம் என்பவரைத் தாக்கியதில் இவரது கை, கால்கள் உடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தெகிலாமுனைக் கிராமத்தை சுற்றிவளைத்து அட்டகாசம் புரிந்த இராணுவத்தினர் அங்கிருந்து மக்களை வெளியேறுமாறு மிரட்டிவிட்டுச் சென்றுள்ளனர். ■

# லயனல் பெர்னான்டோ சிங்கள ஆசிரியர்களை நியமிக்கிறார்

கிழக்கு மாகாணத்தில், சிங்கள ஆசிரிய நியமனங்களை வடக்கு-கிழக்குப் பகுதிக்கான சிறீலங்கா அரசாங்கத்தின் புதிய ஆளுனரான லயனல் பெர்னான்டோ ஊக்குவித்து வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழ்ப்பிள்ளைகளுக்கு சிங்களம் படிப்பிப்பதற்கென விசேடமாக இந்நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழர்களைச் சிங்கள மயப்படுத்தும் பௌத்த சிங்கள பேரினவாத அரசாங்கத்தின் இப்புதிய திட்டம் வலுக்கட்டாயமான முறையில், இராணுவத்தின் ஆக்கிரமிப்பிலுள்ள பகுதிகளில் வாழும் தமிழ்க் குழந்தைகளுக்கு சிங்களத்தை திணிப்பதற்கான முறையாகும். பெற்றோர் விரும்பாவிட்டாலும் கூட, பள்ளிக்கூடங்களில் குழந்தைகள் சிங்களப் பாடத்துக்கு போகவேண்டுமென நிர்ப்பந்திக்கப்படுவதாகவும் செய்திகள் உறுதிப்படுத்துகின்றன. ■

# மட்டக்களப்பு கிராமங்கள் அதிரடிப்படையால் சுற்றிவளைப்பு

மட்டக்களப்பு கிராமங்களை சிறீலங்கா விசேட அதிரடிப்படையினர் சுற்றிவளைத்து அங்குள்ள மக்களை துன்புறுத்துவதுடன் கைது செய்தும் வருகின்றனர். கிராமங்கள் பகுதி பகுதியாக சுற்றிவளைக்கப்பட்டு மக்கள் கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்.

அண்மையில் வீட்டுத்தேவைக்கு உணவுப் பொருள்களை எடுத்து வந்த ஒரு பொதுமகனை மண்முனை விசேட அதிரடிப்படையினர் கூடுதலாக உணவுப் பொருள்களை எடுத்துவந்தார் எனக் கூறித்தாக்கிவிட்டு விடுதலை செய்தனர். இரண்டு பிள்ளைகளின் தந்தையாகிய வேலுப்பிள்ளை ராஜா (வயது 32 மகிழடித்தீவு, கொக்கட்டிச்சோலை) என்னும் இவர் பின்னர் நஞ்சருந்தி மட்டக்களப்பு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

மேலும், மட்டக்களப்பிலுள்ள புதுக்குடியிருப்பு கிராமம் சிறீலங்கா விசேட அதிரடிப்படையினரால் பகுதி பகுதியாக சுற்றிவளைக்கப்பட்டு 75க்கும் மேற்பட்ட பொது மக்கள் கைது செய்யப்பட்டு முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டனர். பின்னர் அடையாள அட்டை பரிசீலிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

கொக்கட்டிச் சோலை கிராமத்தைச் சேர்ந்த விசேட அதிரடிப் படையினர், அக்கிராமத்தில் உள்ள பொது மக்களை அழைத்துச் சென்று, தாங்கள் ஊருக்குள் வந்தால் எவரும் ஓடக் கூடாது என்றும், ஓடினால் சுடப்படுவார்கள் என்றும், அச்சுறுத்திய பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

மேலும் ஆரையம்பதி முதலாம் குறிச்சி, செல்வநகர் ஆகிய பகுதிகள் விசேட அதிரடிப்படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு 75க்கு மேற்பட்ட பொதுமக்கள் அனைவரும் ஓரிடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரணையின் பின் விடுவிக்கப்பட்டனர். ■

# மீண்டும் கொட்டுக்குளம் - கித்துலூட்டு பகுதிகளில் விமானத் தாக்குதல்

திருகோணமலையில், கொட்டுக்குளம், திருகோணமலை வடக்கு, கித்துலூட்டு பகுதிகளில் சிறீலங்கா விமானப்படையினர் கண்மூடித்தனமான தாக்குதல்களை நடத்தியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இத்தாக்குதல்களின் போது, நான்கு அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் பல குடிமனைகளும் முற்றாக அழிக்கப்பட்டதாகச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

கிழக்கை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதாகத் தம்பட்டம் அடித்துக்கொள்ளும் சிறீலங்கா நடாத்தும் இக்கண்மூடித்தனமான தாக்குதல்கள், கிழக்கினை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாத நிலையிலுள்ள சிறீலங்கா அரசு அப்பாவிமக்களை பலிவாங்குவதையே தெளிவாக எடுத்துக்காட்டுவதாக அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். ■

## ஏறாவூர் பொலிசார் கொலை சுற்றிவளைப்பில் முஸ்லீம்கள் கைது

ஏறாவூரில் பொலிசார் ஒருவர் பஸ்சில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டு, அவரது ஆயுதம் பறித்துச் செல்லப்பட்டதையடுத்து, இப்பகுதி சுற்றி வளைக்கப்பட்டுத் தேடுதல் நடாத்தப்பட்டது.

அதைத் தொடர்ந்து இப்பகுதியில் பல முஸ்லீம்கள் படையினரால் கைது செய்யப்பட்டனர். கொலைக்குரிய முஸ்லீம் இளைஞர்களுக்கும் தொடர்பு இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரிலேயே, முஸ்லீம்கள் படையினரால் கைதானதாகத் தெரிவிக்கப்படுகிறது. ■

# எந்த ஓர் விடுதலைப் போராட்டமும் வெல்லுமென நிரூபித்த மண்டேலா

தென்னாபிரிக்க கறுப்பினத் தலைவர் நெல்சன் மண்டேலா, ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் இவ்வேளையில், அவர் முன் குவிந்துள்ள பொறுப்புக்களையும், கடமைகளையும் 'வெரித்தாஸ்' வானொலி தனது ஆய்வுரைக் கண்ணோட்டத்தில் சுருக்கமாக விளக்கியுள்ளது. அவ் ஆய்வுரைக் கண்ணோட்டமே இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவில் கறுப்பினத்தலைவர், இந்த நூற்றாண்டின் மாபெரும் விடுதலைப் போராட்ட வீரர் நெல்சன் மண்டேலா ஜனாதிபதியாக பதவி ஏற்கும் நிகழ்ச்சியை மனக்கண் முன் கொண்டு வருகையில் தேகம் சிலிர்க்கின்றது. இந் நாளை தரிசிக்க தென்னாபிரிக்க நாடு ஒரு நூற்றாண்டு காலம் போராட வேண்டியிருந்தது. எந்த ஒரு விடுதலைப் போராட்டமும் வென்றே தீரும் என்பதை தனது சிறை அனுபவம் மூலம் நிரூபித்தவர் நெல்சன் மண்டேலா.

மண்டேலா அறிவித்திருக்கும் புதிய அரசில், அவருடன் சிறை சென்றவர்கள், உரிமைகோரி முன்னெடுத்துச் சென்றவர்கள் என பலருக்கு வாய்ப்புக்கள் வழங்கப்பட்டிருப்பது பாராட்டுக்குரிய அம்சம். இந்திய வம்சாவழி மக்களை சார்ந்த ஐந்து பேரை 17 பேர் கொண்ட தனது அமைச்சரவையில் இடம் பெறச் செய்துள்ளார். இதன் மூலம் தான் கறுப்பின நிறவெறியன் அல்ல என்பதையும் நிறவெறி களையப் பாடுபடுவர் யாராயினும் அவர்களுக்குரிய மதிப்பும் மரியாதையும் வழங்கப்படும் என்பதையும் மண்டேலா வெளிப்படுத்தியுள்ளார்.

வெள்ளையின தீவிர கம்யூனிசவாதி ஜோஸ்லோவை, நெல்சன் மண்டேலா தமது அமைச்சரவையில் இணைத்திருப்பது மண்டேலாவின் கொள்கைத் தெளிவைக் காட்டுகிறது. தமது கட்சியைக் கடுமையாக எதிர்க்கும் சுலு இனத்தவர்களில் மூவரை மண்டேலா தனது புதிய அரசில் இணைத்து புதிய அமைச்சரவை, நிறங்களை இனங்களை சமயங்களை கடந்த ஒன்று என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார். அமைச்சரவையில் ஒரேயொரு பெண் இடம் பெற்றுள்ளார். இது அதிகரிக்கப்பட்டிருக்கவேண்டும். மேலும் ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் கட்சியின் தேசிய தலைவரான டோபோ பேகி (51) முதல் உதவி ஜனாதிபதியாகிறார். இதன் மூலம் மண்டேலாவிற்கு பின் ஜனாதிபதியாகவோ அல்லது கட்சியின் உயர் தலைவராகவோ இவர் இருப்பார் என்பதை மண்டேலா உறுதி செய்துள்ளார்.

இதே வேளை வெள்ளையின அரசுடன் கடுமையான பேச்சுவார்த்தை நடத்திய ஆபிரிக்க தேசிய காங்கிரசின் தற்போதைய பொதுச்செயலர் ராமோபோசோ அமைச்சராக்கப்படாமல் இருப்பது கேள்விகளை எழுப்பியுள்ளது. ஏனெனில் வரும் நாட்களில் மண்டேலாவின் பின், யார் தலைவர் என்ற போட்டி நடக்கும் பட்சத்தில் டோபோவிற்கு உயர் பதவியும் ரமோபோவிற்கு பதவியின்மையும் கட்சியில் குழப்பத்தை உண்டு பண்ணலாம். இதன் மூலம் மண்டேலாவின் பின், ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் ஒரே தலைமையின் கீழ் உறுதியாக செயற்படுமா என்ற கேள்விகளை இது தோற்றுவித்துள்ளது.

நாட்டின் மொத்தம் 9 மாநிலங்களில் ஒரு மாநிலத்தில் வெள்ளையினத்தவரின் தேசியக் கட்சி அரசு அமைக்கவிருப்பதும் கோசுலு பிராந்தியத்தில் இன்காட்டா கட்சி ஆட்சியை பிடித்திருப்பதும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் சந்தித்த ஆரம்பகால பின்னடைவுகள். பிற ஏழு மாநிலங்களிலும் தேசிய அளவிலும் அரசு அமைக்கும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கறுப்பினத்தவர்கள் சுமந்து நிற்கும் கனவுகளை செயற்படுத்த தவறினால், 1999 இல் நடைபெறப் போகும் அடுத்த தேர்தலில் ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் தோல்வி கண்டாலும் ஆச்சரியப் படமுடியாது. எனவே இக்கட்சி கவனமாக செயற்பட வேண்டிய நிலை உள்ளது.

நெல்சன் மண்டேலாவின் தலைமையிலான புதிய அரசுக்கு முன், குவிந்த பிரச்சினைகள் ஒன்று இரண்டல்ல ஏராளம். காலம் காலமாக, நூற்றாண்டு நூற்றாண்டுகளாக வெள்ளையினவாதிகள் கறுப்பினத்தவர்களை அடிமைப்படுத்தியதால் தென்னாபிரிக்க கறுப்பின மக்கள் தற்போது கல்வியின்மை, அறியாமை, வீடின்மை, நிலமின்மை, தொழிலின்மை, வறுமை, நோய், குக்கிராம வாழ்க்கை என்பவற்றை கொண்டுள்ளனர். வறுமைக் கோட்டின் கீழ் கறுப்பின மக்கள் அநேகர் உள்ளனர். எங்கிருந்தோ வந்து குடியேறிய வெள்ளையினத்தவர் நமது நாட்டில் சொகுசாக வாழ நமக்கு மட்டும் ஏனிந்த நிலை என தென்னாபிரிக்க கறுப்பினம் கேட்பது நியாயமே. எனவே வெள்ளையின மக்கள் போல் உணவு, உடை, உறையுள், சுகாதாரம் என பல துறைகளில் கறுப்பின மக்களின் நியாயமான சமூக நீதியுடன் கூடிய அபிலாசைகளை நிறைவேற்ற வேண்டிய மாபெரும் கடமையும் பணியும் மண்டேலாவின் முன் குவிந்துள்ளன. இந்த ஆசைகளை



நிறைவேற்ற வேண்டிய கட்டாயம் மண்டேலா அரசையே சேரும். வந்து குவியும் வெளிநாட்டுதவிகள், வெள்ளையின மக்கள் ஆதரவு, கறுப்பின மக்களின் ஒத்துழைப்பு, நாட்டில் அமையும் தேசிய அரசு என்ற நான்கு அம்சங்களையும் மண்டேலா சரியாகப் பயன்படுத்தி புதிய தென்னாபிரிக்காவை மலரச் செய்ய அவரால் முடியும் என நம்புவோம்.

கறுப்பின மக்களின் கனவுகள் கருகினால், மண்டேலாவின் புதிய அரசு கறுப்பின மக்களாலேயே புறக்கணிக்கப்படும் என்பது உறுதி, விடுதலைப் போராட்டம் என்பது வேறு, நீதியான நிர்வாகம் சுபீட்சமான எதிர்காலத்தை உறுதி செய்யும் அரசு என்பது வேறு. விடுதலைப் போராட்டத்தில் சாதனை படைத்த மண்டேலா தென்னாபிரிக்க அரசு நிர்வாகத்திலும் சாதனை படைக்கட்டும். ■

நன்றி: வெரித்தாஸ்

# மிதவாதியான மண்டேலா ஆயுதப் போரை நம்பினார்

**— மே தின உரையில் பாலகுமாரன்**

மிதவாதியாக இருந்த ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலா 1961ல் நடைபெற்ற படுகொலைகளைத் தொடர்ந்து வன்முறையாளராக மாறினார். இதை அவர் பகிரங்கமாகவே அறிவித்தார். அந்த நாட்டின் சம்பவங்களை நாமும் எண்ணிப்பார்க்க வேண்டும் இவ்வாறு யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் கலந்து கொண்டு தமிழீழ கல்விக்கழகத்தை சேர்ந்த பாலகுமாரன் பேசினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; இந்த நேரத்திலே நான் ஓர் முக்கியமான செய்தியை கூறிவைக்க விரும்புகிறேன். உங்களுக்குத் தெரியும், நாங்கள் இன்றைக்கு இந்த நிகழ்வினை நடாத்திக்கொண்டிருக்கும் போது உலகிலே ஒரு நாட்டிலே அந்த மக்கள் தமது விடிவை எண்ணி மகிழ்கிறார்கள் என்று. தென்னாபிரிக்கா என்ற நாட்டிலே ஒரு பெரும் போராட்டம் நடந்து அந்த மக்கள் தமது விடிவிற்கு மாறுகின்ற நாள் இது. அந்த நாட்டின் சில சம்பவங்களை இங்கு நாம் எண்ணிப்பார்க்க வேண்டிய கட்டாயம் உள்ளது. உங்களுக்குத் தெரியும், அங்கே நெல்சன் மண்டேலா என்பவர் 27 வருடங்கள் சிறையிலே இருந்து இன்று வெளியிலே தமது மக்களுடன் சேர்ந்து மகிழ்ந்து கொண்டிருக்கிறார். அவருடைய வரலாற்றைப் பாருங்கள். ஆரம்பத்திலே அவரும் எங்கள் பழைய மிதவாத தலைவர்கள் போல்தான் பேச்சுவார்த்தைகள், சத்தியாக்கிரகம் என்று சொல்லி 1912 ம் ஆண்டில் இருந்து 1961ம் ஆண்டுவரை ஒரு வித்தியாசமான போராட்ட வடிவத்தில் அவரது கட்சி செயல்பட்டது.

ஆனால் 1961ம் ஆண்டுவரை நடந்த படுகொலைகளுக்குப் பின்னர், அவர் தீர்க்கமான முடிவொன்றை எடுத்தார். உலக மக்களுக்கே அறைகூவல் விடுத்து அவர் கூறினார்; இனி மேல் நான் ஆயுதப்போராட்டத்தையே விரும்புகின்றேன், நான் ஒரு நாசகார சக்தியாக மாறுவேன், நான் வன்முறையைத் தான் நாடுவேன், எனது மக்களுக்காக அதைத்தவிர வேறு வழியில்லை என்றார். அவர் அப்படி கூறியதற்காக அவரை சிறை வைத்தார்கள். சிறையிலிருந்து 27 வருடங்கள் போராடினார். தனது கட்சியினரை ஆயுத பாணிகளாக்கினார். தானும் அல்ஜீரியா சென்று ஆயுதப் பயிற்சியும் பெற்றார். அவர் இன்று உலகத்தின் கண்ணுக்கு ஒரு காந்தியாக சித்தரிக்கப் படுகிறார். இன்று அதுவல்ல உண்மை. அவர் மிகத் தெளிவாக கூறியிருக்கிறார், எந்தக் கட்டத்திலும் விட்டுக் கொடுக்க முடியாது என்று. உங்களுக்குத் தெரியும் மிக அண்மைக்காலமாக இனவாத சிங்கள அரசுகள் எல்லாம் ஒரு கோரிக்கை விடுத்து வருகிறார்கள். வன்முறையை கைவிடுங்கள், ஆயுதங்களை கையளியுங்கள், தலைவரை பேசவாருங்கள் என்று. அது போலத்தான் . மண்டேலாவிடம் தென்னாபிரிக்க அரசு கூறியது, உன்னை வெளியே விடுகிறோம் வன்முறைகளை கைவிடவேண்டுமென்று.

ஆனால் அவர் மிகத்தெளிவாக கூறினார், நான் எப்பொழுதும் எனது கோரிக்கையை விடமாட்டேன். நான் சுதந்திரமானவனாக இருந்தாலே அரசுடன் பேசமுடியும். நான் அடிமையாக இருந்து பேசமுடியாது. எந்தக் கட்டத்திலும் நான் சுதந்திரமானவனாக இருந்தால் மட்டுமே பேசமுடியும் என்று கூறினார்.



இன்று அந்த நிலைமை மாறியுள்ளதை நீங்கள் பார்க்க முடியும். எங்களுடைய தலைவரையும், எமது போராளிகளையும், எமது மக்களையும் இரண்டாந்தரமாக மதித்து, தமது கால்களால் மிதித்து பேச்சுவார்த்தைக்கு வருமாறு விடுத்த கோரிக்கையை நாம் நெல்சன் மண்டேலாவின் இந்தக் கூற்றுடன் ஒப்பிட்டுப் பார்க்க முடியும். அவர் மிகத் தெளிவாகக் கூறினார், எந்தக்கட்டத்திலும் எந்தவொரு நிபந்தனைக்கும் உட்பட்டு நான் செயற்பட மாட்டேன். என்னுடைய கௌரவத்தை இழந்து எனது மக்களின் நலன்களை அடைவு வைக்க முடியாது எனக் கூறினார். அதனால்தான், அவ்வாறு போராடிய மக்களின் விடிவு பெற்ற கதை இன்று எமக்கு உற்சாகத்தைத் தருகிறது. ■

## யேர்மனியில்

# நுண்கலைக் கல்லூரி ஆரம்பம்

டோட்முன்ட் நகரில் 14.05.1994 இல் தமிழர் கலை, பண்பாட்டுக் கழகத்தினர் நுண்கலைக் கல்லூரிஒன்றைத் திறந்து வைத்தனர். BENDICT SCHOOL, HOHLELUFT -20, BRUECKSTR இல் சனிக்கிழமை தோறும் நடைபெறும் பயிற்சி வகுப்புக்களில் கர்நாடக சங்கீத வாய்ப்பாட்டு, மிருதங்கம், தபேலா, வயலின், வீணை, சிற்பம், ஓவியம் ஆகிய பிரிவுகள் இயங்கும்" என கலை, பண்பாட்டுக் கழக பொறுப்பாளர் தெரிவித்துள்ளார். அவர் அங்கு உரையாற்றுகையில், "தமிழீழத்தில் நமது பாரம்பரியக் கலைகளைக் கற்று, பின் அதனைத் தொடர முடியாத சூழலில் புலம்பெயர்ந்து வாழும் கலை ஆர்வலர்களையும், தமிழ்க் கலைகளைக் கற்க விரும்பும் புதியவர்களையும் கருத்தில்கொண்டு ஆரம்பிக்கப் பட்டதே இந்த நுண்கலைக் கல்லூரி" எனக் குறிப்பிட்டார்.

குத்துவிளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்த மிருதங்க வித்துவான் பேசும்போது, "மிருதங்கம் பயிலவும் பாண்டித்தியம் பெறவும் வயதெல்லை கிடையாது. இசைக்கு சுவை சேர்க்கும் ஒரு இசைக்கருவியே மிருதங்கம்" என்றார்.

ஓவியக்கலை பயிற்றுவிக்கும் ஆசிரியர் பேசுகையில், "சிறுவர்களுக்கு ஓவியம் பயிற்றுவிக்கும் போது, அவர்களுக்கு பயிற்றுவிப்பதிலும் அதிகமாக, அவர்களிடம் நான் கற்றுக்கொள்ளுகின்றேன். அதேவேளை ஓவிய நுணுக்கங்களைப் புரிந்துகொள்ள புரிந்துணர்வுள்ள வயது அவசியமாகின்றது" எனக் குறிப்பிட்டார்.

தபேலாக் கலைஞர் பேசும்போது "எந்த ஒரு தமிழ்க் கலையை கற்பதற்கும் முன் தமிழைக் கற்க வேண்டும். தமிழ் மூலமே தமிழ்க் கலையை முழுமையாகக் கற்கமுடியும்" என்றார்.

ஆலோசனை வழங்கிப் பேசிய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க யேர்மன் கிளைப் பொறுப்பாளர், "இப்பொழுது நாங்கள் விதையை நட்டிருக்கின்றோம். இது விருட்சமாகி வளரவேண்டியதன் அவசியத்தை நீங்கள் அறிவீர்கள். இந்த நுண்கலைக் கல்லூரியை வளர்க்கவேண்டிய பொறுப்பும் கடமையும் உங்களுடையதே" என்றார். ■

# எமது விடுதலைப் போராட்டம் எந்த நாட்டிலும் தங்கி நிற்கவில்லை

— இளம்பரிதி

எமது விடுதலைப் போராட்டம் எந்த ஒரு நாட்டினதும் உதவியை நாடி நிற்கவில்லை. விடுதலைப் போராட்டம் யாருடைய உதவிகளையும் எதிர்பார்க்காமல் எமது சொந்த முயற்சியிலேயே நின்று வருகிறது. எமது போராட்டம் உலகத்தில் ஒரு புதிய கோட்பாட்டை எடுத்துள்ளது. சர்வதேச ரீதியில் எமது போராட்டம் உயர்ந்து வளர்ந்து நிற்கிறது.

அல்வாய் வடக்கு சிற்றூர் பொறுப்பாளர் திரு கிண்ணியன் தலைமையில், புலோலி கிழக்கு உத்திராவத்தை ஆலய முன்றலில், சித்திரை மாதங்களில் வீரச்சாவடைந்த மாவீரர்கள் நினைவாக பருத்தித்துறை வட்டத்தில் நடைபெற்ற மாவீரர் கூட்டத்தில், யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பருதி முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், இந்திய இராணுவம் இங்கு நிலைகொண்டிருந்த போது, அன்று இருந்த இந்தியத் தூதுவர் டிக்சிற், எமது போராட்ட வளர்ச்சியை சின்னாபின்னமாக உடைக்க முற்பட்டவர். அதற்காக இந்தியப் படையைத் தயார் செய்தவர். ஆனால் எமது போராட்டம் உடைந்தோ, அழிந்தோ போகவில்லை. ஆனால் இன்று ஓய்வு பெற்றுவிட்ட அந்தத் தூதுவர் புலிகளை வெல்ல முடியாது. தமிழ் மக்களின் ஏகோபித்த தலைவர் திரு. வே. பிரபாகரன் தான் என்று அண்மையில் பத்திரிகைகளுக்கு அறிக்கை கொடுத்திருந்தார். இப்பொழுது டிக்சிற் காலம் கடந்த ஞானத்தைப் பெற்றிருக்கிறார் என்றுதான் கூறமுடியும். இது ஒருவகையில் பார்க்கும்போது உலகநாடுகளில், எம் மீது ஒரு எதிர்ப்பை உண்டுபண்ணுகின்ற நடவடிக்கையாகவும் இருக்கலாம் என கருதமுடிகிறது.

ஆயுதப் போராட்டம் மூலம்தான் எமது இலக்கை நாம் பெற்றுவிட முடியும். இந்த உண்மை கடந்தகால அரசியல் வாழ்க்கை மூலம் எடுத்துக் காட்டப்படுகிறது. மூதாதையர் முன்னர் நடாத்திய போராட்டங்களில் ஆயுதங்களை ஏந்தினார்களா? சிங்கள எதிர்ப்புப் போராட்டம், கச்சேரியில் மறியல் போராட்டம், உண்ணாவிரதப் போராட்டம் என்பன அகிம்சை வழியில் நடைபெற்றன.

தமிழீழம் பிறப்பதை இந்தியா விரும்பவில்லை. தமிழீழம் என்று ஒன்று உருவாகினால் தனது நாட்டிற்கு ஆபத்து என தூதுவர் டிக்சிற் கூறுகிறார். இந்த டிக்சிற்றின் கருத்து ஆபத்தானது. இதில் நாங்கள் சரியான நிலைப்பாட்டை எடுக்கவேண்டும்.

வடபுலத்தில் சிங்கள இராணுவம் பாரிய யுத்தத்தை நடாத்தத் திட்டமிட்டு தயார்படுத்தி வருகிறது. தமிழனுக்கு அடித்தால் தான் டி. பி. யின்பதவி நீடிக்கும். செல்வாக்கு நிலைக்கும். அதே போல், ஜெரி டி சில்வாவும் பதவியில் நீடித்துக் கொள்ள முடியும். இதனை வைத்து சிறீலங்கா அரசு தமிழ் மக்களைத் தாக்க முயற்சிக்கிறது. எதிரி எங்கள் மீது எடுக்கப் போகின்ற படையெடுப்பு தற்காலிக வெற்றிக்காக, எங்கள் மீது அனர்த்தங்களை ஏற்படுத்த முயல்கிறது. இதற்கு நாங்கள் இடம்கொடுப்போமேயானால், எதிரி நிரந்தர வெற்றிக்கு நகருவான். இதற்கு நாங்கள் விட்டுக் கொடுக்க முடியுமா? ஆட்பலம் இல்லாத நிலையில் வெற்றிகொள்ள முடியாது. மக்கள் பலமாக நிற்பார்களேயானால் எங்களுக்குப் பலம் ஏற்படும்.

எமது போராட்டத்தின் கவசம் மக்கள். தென் தமிழீழத்திலே எமது போராளிகளுக்கு அங்குள்ள தமிழ் மக்கள் இயன்றவரை உதவுகின்றனர். இராணுவ முகாம்கள் அடுக்கடுக்காக இருக்கின்ற போதிலும், அங்குள்ள மக்களின் உதவியினால் எமது போராளிகள் அப்பகுதியில், பல இராணுவத்தினர், பொலிசாரை அழித்து வருகின்றனர். எமது போராட்டம் ஆரம்பிக்கும் போது எம் மக்களிடம் நம்பிக்கையீனம் ஏற்பட்டது. ஆனால் தற்போது எமது மக்களிற்கு எமது போராட்ட வடிவம் நன்றாகப் புரிகிறது என்றார்.

மற்றும் பயிற்சிப் பள்ளி ஆசிரியர் திரு. மு. வே. வாஞ்சிநாதன், பருத்தித்துறை வட்ட மகளிர் பொறுப்பாளர் செல்வி யாழரசி, யாழ். மாவட்ட மாவீரர் பொறுப்பாளர் திரு. எழிலன் ஆகியோரும் நினைவுரை நிகழ்த்தினர். ■

## தமிழர் புனர் வாழ்வுக் கழக சர்வதேச பணிமனை வேண்டுகோள் !

சென்ற இதழில் (27-5-94) " 1000 ஆதரவற்ற குழந்தைகளைத் தத்தெடுக்கும் தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தின் புதிய திட்டம் " என்ற தலைப்பில் பிரசுரிக்கப்பட்ட கட்டுரை தொடர்பாகவே, லண்டன் தமிழர் புனர் வாழ்வுக் கழகப் பணிமனை இவ் வேண்டுகோளை விடுவித்துள்ளது.

"ஆதரவற்ற 1000 தமிழீழக் குழந்தைகளை பராமரிக்கும் தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தின் செயற்திட்டத்திற்கு, சர்வதேச பணிமனை எவ்வாறு உதவ திட்டமிட்டுள்ளது " என்ற விபரத்தை அது வெளியிட்டுள்ளது.

அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, பப்புவாநியூகெனியா போன்ற நாடுகளில் வாழும் தமிழர்களின் உதவியுடன் 400 குழந்தைகளையும், ஐரோப்பிய நாடுகளில் வாழும் தமிழர்களின் உதவியுடன் 600 குழந்தைகளையும் பராமரிப்பதற்கான திட்டங்களை தாம் தயாரித்து ஆரம்பிக்கக் தொடங்கியுள்ளதாக அதில் கூறப்பட்டுள்ளது.

இது தொடர்பாக உதவ விரும்பும் தமிழர்கள்,

செயலாளர்,
தமிழர் புனர் வாழ்வுக் கழகம்,
சர்வதேசப் பணிமனை,
79 HOE STREET,
LONDON E-17.

என்ற முகவரியுடன் அல்லது 081-521 1313, 081-520 5876, 071-582 4635 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

# சிறீலங்காவின் உண்மையான ஆட்சியாளர்கள் பாதாள உலகப் பயங்கரவாதிகளே !

☐ சிறீலங்கா தென்மாகாண அமைச்சர் அமரசிறி தொடங்கொட

"ஊழியர்களை தொழில்களிலிருந்து பலவந்தமாக வெளியேற்றினர். மூளைசாலிகளையும் கலைஞர்களையும் அடித்து நொருக்கினர். தொழிலாளர்கள் தாக்கப்பட்டனர். பல்கலைக் கழகங்களை காலவரையின்றி மூடினர். மாணவ, மாணவிகளை சட்டவிரோதமான முறைகளில் தண்டித்தனர். இளைஞர்கள் கொலைசெய்யப்பட்டனர். இத்தனையையும் செய்து வந்த பாதாள உலக சமூகவிரோதிகளே நாட்டை மறைமுகமாக ஆட்சிசெய்து வந்துள்ளனர் என்பது வெளியாகும் சம்பவங்களூடாக நிருபணமாகி வருகிறது". இவ்வாறு சிறீலங்காவின் தென்மாகாணசபையின் முதலமைச்சர் அமரசிறி தொடங்கொட கம்புறுப்பிட்டிய பஸ்கொடையில் அளிக்கப்பட்ட வரவேற்பு வைபவத்தில் பேசுகையில் கூறியுள்ளார்.

இவர் தொடர்ந்து பேசுகையில், "சிலர் பல்வேறு பெயர்களை வைத்து அப்பாவி இளைஞர்களை சண்டியர்களாகவும், கொள்ளைக்காரர்களாகவும் மாற்றி அவர்கள் மூலம் தங்கள் காரியங்களைச் சாதித்துவிட்டு இன்று அந்த இளைஞர்களைக் காட்டிக்கொடுக்க முயல்கின்றனர்" என்றார்.

### துப்பாக்கி திரும்புகின்றது.

"சனசக்தி எனக்கூறி மக்களை ஆயுதங்களால் ஆட்சிசெய்து வந்த காடைத்தனமான அரசியல் யுகத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்கு, முதலாவது வெற்றி வெடிமுழக்கம் வைத்த தென்பகுதி மக்களை முழுநாடுமே இன்று கௌரவிக்கின்றது. கடந்த பதினேழு ஆண்டுகளாக மக்களை நோக்கி திரும்பி இருந்த துப்பாக்கிரவைகள் இப்போது தென்மாகாண மக்களின் வாக்குகளால் ஆட்சியாளர்களை நோக்கி திரும்பியிருக்கின்றன" எனவும் கூறினார். ■

# நட்டஈடு வழங்க நீதிமன்றம் தீர்ப்பு தகவல் கொடுக்க தவறியதாக சிறீலங்கா வழக்கு

பண்டாரவளை பிந்துனுவெவாவில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் 25 வயதான பாலிப்போடி சுந்தரலிங்கம் என்பவர் தொடுத்த அடிப்படை மனிதஉரிமை மீறல் மனுவில், நட்டஈடாக 75,000 ரூபா வழங்கும்படி சிறீலங்கா அரசுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இவர் 22. 10. 92 ல் வயலில் வேலை செய்து கொண்டிருந்த போது இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டார். கையும், காலும் கட்டப்பட்டு பதுங்குகுழி ஒன்றில் போடப்பட்டு தடியால் மூன்று தினங்கள் விட்டுவிட்டுத் தாக்கப்பட்டுள்ளார். இரண்டு நாட்களாக உணவும், தண்ணீரும் வழங்கப்படாதிருந்துள்ளார். பெற்றோல் நிரப்பப்பட்ட "சொப்பிங்" பையை தலையில் கட்டிவிட்டு நெருப்பை மூட்டி புகையை சுவாசித்து மூச்சுத் திணறுமாறு வதைக்கப்பட்டுள்ளார். இவரின் ஆண்உறுப்புக்கூட கடுமையாகத் தாக்கப்பட்டிருப்பதாக, வைத்திய அறிக்கைகள் தெரிவித்துள்ளன.

இவருடைய மனுவை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டதை அடுத்து, சென்றமாதம் 16ம் திகதி இவருக்கு நீதிமன்றம் வழங்கிய பணநட்டஈட்டை கிடைக்கச் செய்யுமாறு, சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு இவரின் சட்டத்தரணி கடிதம் அனுப்பியுள்ளார்.

அதற்குப் பதிலாக இவர்மேல், விடுதலைப்புலிகள் பற்றி தகவல் தரத்தவறினார் எனும் குற்றச்சாட்டில் சிறீலங்கா சட்டமாஅதிபர் வழக்கு தாக்கல் செய்துள்ளார். இவரிடம் ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றில் பெருவிரல் அடையாளம் கையெழுத்தாகப் பெறப்பட்டு, இப்புதிய வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவர் விடுதலைப்புலிகளின் வயலில் வேலை செய்துள்ளார் எனவும், அந்நேரம் இவரை வயலில் வேலை செய்வித்த வெங்காயன் எனும் விடுதலைப் புலி பற்றி 1. 9. 92 க்கும் 22. 10. 92 க்கும் இடையில் பொலிசுக்கு தகவல் கொடுக்கத் தவறியுள்ளார் எனவும் அந்த ஆங்கில குற்றப்பத்திரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது.

பல மாதங்களாக விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர், அடிப்படை மனித உரிமைமீறல் மனு தாக்கல் செய்து நட்டஈடு நீதிமன்றத்தால் தீர்க்கப்பட்டதும், சிறீலங்கா அரசாங்கம் இப்புதிய வழக்கைத் தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ■

# பௌத்த மகாசங்கம் எடுக்கும் முடிவில்தான் நாட்டின் எதிர்காலம் உண்டு

— சிறீலங்கா ஜனாதிபதி பகிரங்க அறிவிப்பு

"நாட்டில் சமாதானத்தையும், உறுதிப்பாட்டையும் கருதி செயல்பட வேண்டிய நிலையில் நாம் இன்று இருக்கின்றோம்; பொறுப்புடன் செயலாற்ற வேண்டியுள்ளது. இந்த சவாலை எதிர்கொள்ள தகுதியான ஒருவர் தேவை என்பதை நீங்களும் ஏற்றுக்கொள்வீர்கள் எனக்கருதுகிறேன். இந்தத் தேர்தல் ஆண்டில் நீங்கள் எடுக்கும் முடிவின் கீழ்தான் எமது நாட்டின் எதிர்காலம் அமைதி, சமாதானம் என்பன நிலைபெறும் என்பதைப் புதிதாகச் சொல்ல வேண்டியதில்லை."

இவ்வாறு சிறீலங்கா ஜனாதிபதி விஜேதுங்க சகல பௌத்த விகாராதிபதிகளுக்கும் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் கூறியுள்ளார். ■

# கிளாலி மூலமான பயணம் அரச ஊழியர் நாட்டம்

அரசாங்க உத்தியோகத்தர்கள், பல்கலைக் கழக மாணவர்கள் கப்பல் மூலமான பயணத்தில் ஈடுபடுவதில் சமீப காலமாக நாட்டமின்றிக் காணப்படுகின்றனர். வழமையாக கப்பல் மூலம் கொழும்புப் பயணத்தை மேற்கொள்ளும் இவர்கள், அண்மை காலமாக கிளாலி மூலமான பயணத்தையே அதிகம் விரும்புகிறார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. கப்பல் மூலமான பயணத்தில் ஏற்படும் சிரமங்கள், தாமதங்கள் ஆகியவை இதற்குக் காரணமாகச் சொல்லப்படுவதுடன், கப்பல் பயணத்திற்கு பயணிகள் ஒவ்வொருவரும் முன்கூட்டியே யாழ் செயலகத்தில் பணத்தைச் செலுத்த வேண்டும் என்ற கட்டளையும் இதற்கான காரணம் எனச் சொல்லப்படுகின்றது. நாகதேவன்துறை கடற்படை முகாம் தகர்க்கப்பட்டதாலும், சமீப காலமாக இக் கடற்பரப்பில் கடற்படையினரின் தாக்குதல் சம்பவங்கள் எதுவும் இல்லாததாலும், குறிப்பிட்ட திகதியில் சிரமமின்றிப் பயணம் செய்ய முடிவதாலும் இந்த அதிகாரிகள் கிளாலி ஊடாகக் கொழும்பிற்கான பயணத்தை மேற்கொள்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. ■

# சிறையில் கற்பழிக்கப்பட்டதை மறைக்க சிறீலங்கா முயற்சி

கிழக்கு மாகாணத்தில் சந்தேகத்தின் பேரில் சிறீலங்காப் பாதுகாப்புப் படைகளின் சுற்றிவளைப்பின் போது கைதான 28 வயது இளம்பெண் ஒருவர், சப்-இன்ஸ்பெக்டரால் கற்பழிக்கப்பட்ட விடயம் வெளிவந்ததும் அதனை மறைக்க சிறீலங்கா பாதுகாப்புப் படைகள் பெருமுயற்சி செய்கின்றன.

இப்பெண் திடீரென மட்டுநகர் சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டார். இவரை விடுதலை செய்யும்படி இவருடைய தாயார் தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனு நீதிமன்றத்தில் விசாரணையில் இருக்கும் போதே இவர் விடுதலையானார்.

ஆயினும் சட்டவிரோத கைது, தடுத்து வைப்பு, மனிதாபிமானமற்ற முறையில் நடத்தியமை எனும் குற்றச்சாட்டுகளின் பேரில் பொலிசார் மீது நஸ்டஈடு கோரி இவரது தாயார் மற்றொரு வழக்கைத் தாக்கல் செய்யவிருப்பதாகத் தெரிகிறது. ■

# சுதந்திரத்தைத்தேடி



"அக்கா... அக்கா... என்ன பலமான யோசனையில இருக்கிறியள்"?

"இந்த ஒற்றைப் பனையைப் பற்றித்தான் மனோ".

"ஓம். பாவம் என்னக்கா! தனியாச் சோகத்தோட நிக்குது" என்று கூறியபடி நெற்றியைச் சுருக்கிக் கண்களைப் படபடப்பாக்கி சிறுபிள்ளை போல சக தோழிமுன் வந்து நிற்பாள் யாழிசை. சிறிது நேரத்துக்குத்தான். உடனேயே கலகலப்பாகி, துள்ளிக் குதிக்கத் தொடங்கி விடுவாள்.

அமைதியான முகம். அதில் புன்னகை நிதமும் இருக்கும். வயதுக்கு மீறிய அனுபவ முதிர்ச்சி. குழந்தை போன்ற மனது. துருதுருத்த கண்கள். சுறுசுறுப்பு. இன்னும் சொல்லப்போனால், சொல்லிக்கொண்டே செல்லலாம்.

அவள் ஒரு முழுமையான விடுதலைப்புலி. பத்தாவது வகுப்பில் பரீட்சை எடுப்பதற்கு முன்னர் கல்வியை இடைநிறுத்திவிட்டு, 1990 இன் ஆரம்ப காலப் பகுதியில் தன்னை இவ்விடுதலைப் போராட்டத்துடன் இணைத்துக் கொண்டவள். இராணுவ ஆக்கிரமிப்பினால் சிதைந்துபோய்க் கிடக்கும் காங்கேசன்துறை இவளை ஈன்றெடுத்ததற்காக பெருமைகொள்ளும். திருலோகசிங்கத்துக்குச் செல்லப் பெண்ணாக செல்வராணியாக 1972 இல் பிறந்தவள்தான் யாழிசை. இரு பெண் சகோதரிகளையும் உறவெனக்கொண்டவள். தாயின் பாசத்துக்கும் அன்புக்கும் பாத்திரமாக வீட்டில் வளைய வந்தவள்.

இயக்கத்தில் இணைந்த பின்னர் தனது கடமைகளில் அவள் சிறிதளவும் தளருவதில்லை. பொறுப்பாளர் சொன்ன வேலையைச் சரிவரச்செய்து முடிக்கும்வரை பொறுப்பாளர் முன் வரத்தயங்குவாள்.

லெப். கேணல் ராஜனின் கீழ், அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியில் கல்வி கற்றாள். பரீட்சை நடைபெறும் சமயங்களில் தனது திறமையைக் காட்டத் தவறுவதில்லை. மிகவும் துடிதுடிப்புக் கொண்ட இவள் பொறுப்பாளரின் சிறிய தண்டனைகளுக்கு அடிக்கடி ஆளாவாள். இவளது செயலினால் பாதிப்பைவிட, சிரிப்புத்தான் அதிகமாகத் தோன்றும். கல்லூரியைப் பொறுத்தவரை ஞாயிறு தவிர்ந்த மற்றைய நாட்களில் சப்பாத்துக்களை கட்டாயம் அணிந்திருக்க வேண்டும். ஞாயிறு அதனைக் கழுவிச் சுத்தமாக வைத்து, திங்கள் அணிந்துகொள்ள வேண்டும்.

ஞாயிறு நாட்களில் மட்டும்தான் ஓய்வாக இருந்து ஒன்றாக அமர்ந்து சந்தோசமாக உரையாடுவார்கள்; விளையாடுவார்கள். அன்று ஞாயிறு. ஒரு மாடிவீட்டிலே இவர்களின் முகாம் இருந்தது. கீழே பொறுப்பாளர் இருந்ததை அறிந்தோ, அறியாமலோ ஞாயிறுதானே என்ற எண்ணத்தில், துடிதுடிப்புக் குணம்கொண்ட யாழிசை, பெட்டி ஒன்றை எடுத்துத் தாளம் போட்டபடி பாடத்தொடங்கிவிட்டாள்.

தோழிகள் அனைவரும் சுற்றி உட்கார்ந்து ரசித்துக்கொண்டிருந்தனர்.

அழகாகத் தாளம் தட்டி அவள் பாடிய பாடல்...

"நான் பிறந்த நமது மண் எங்களதே...
நாம் தவழ்ந்த புழுதி மண் எங்களதே..."

மிக இனிமையாக, தாளம் பிசகாமல் அழகாகப் பாடும் திறமைகொண்டவள்.

இவர்களது சத்தம் பொறுக்க முடியாத பொறுப்பாளர் மேலே வந்துவிட்டார். மூலையில் கிடந்த சப்பாத்துக்களே கண்ணில் தெரிய கழுத்தில் சப்பாத்துக்களைக் கட்டிக்கொண்டு ஓடும்படி உத்தரவிட, சிரித்துக் கொண்டே கழுத்தில் சப்பாத்தினை மாலையாக அணிந்தபடி பாடிப்பாடியே ஓடினாள். பின்னால் சக தோழிகளும்.

இவ்வாறு, தான் செய்யும் குறும்புகளுக்குக் கிடைக்கும் தண்டனையைக்கூட சந்தோசத்துடன் செய்து முடித்துவிட்டு, பொறுப்பாளர் முன் குழந்தைபோலச் சிரிப்பாள். பொறுப்பாளரின் கோபம் பட்டெனப் பறக்க, சமாதான ஒப்பந்தம் ஒன்று அங்கு திடீரென உருவாகும்.

சிலவேளைகளில் தனது குடும்பத்தை நினைத்து சிறிது கலங்குவாள். ஆனால் உடனேயே பழைய நிலைக்கு மாறிவிடுவாள் போராட்டத்தில் தந்தையின் பங்கு மிகப்பெரியது.

1975 இல் துரோகி துரையப்பா சுட்டுக் கொல்லப்பட்டவேளை, ஆக்கிரமிப்பாளர்கள் ஊர்ஊராய் ஊர்வலம் வந்தனர். உளவுப்படைகள் உலாவின. கூடவே இருந்து குழிதோண்டும் பலர் இணைந்திருந்தனர். எனினும் துணிந்த உள்ளம்கொண்ட தந்தை, தண்டனை வழங்கித் திரும்பிய விடுதலைப் புலிகளைத் தனது கட்டுமரத்தின் துணையுடன் மறுகரை சேர்த்தார்.

இதற்காக, இவர் காட்டிக்கொடுக்கப்பட்டு அன்றைய பழைய பூங்கா இராணுவ முகாமில் வைத்து இரண்டு நாட்கள் கடுமையான சித்திரவதைகளை ஏற்க நேர்ந்தது. இதேபோல, இவரின் மூத்த மகனும் வடமராட்சி 'ஒப்பரேசன் லிபரேசனின் 'போது பிடிக்கப்பட்டு ஒன்றரை மாதங்கள் பூசாமுகாமில் சித்திரவதை அனுபவித்தான். தந்தையிடமிருந்து எதுவிதமான வாக்குமூலத்தையும் பெறமுடியாத இராணுவம் தனது சித்திரவதையின் பாதிப்பைமட்டும் உணரும்படி விட்டுவிட்டது.

தனது சகதோழியிடம் யாழிசை அடிக்கடி தனது தந்தையைப் பற்றிக் கூறுவாள். அவரின் உடல் நிலையை நினைத்து கவலைப் படுவாள். திருமணத்தை எதிர் நோக்கியபடி இருக்கும் அக்காவைப் பற்றி நினைத்துக்கொள்வாள். இத்தனைக்கும் மேலாக தனது உயிரான தம்பியை நினைத்துக் கலங்குவாள்.

1991 ஆம் ஆண்டு ஆடி மாதம் பத்தாம் திகதி ஆனையிறவுப் போர். புலிகள் தமது மரபுவழி முறையில் மாபெரும் யுத்தத்தில் ஈடுபட்டிருந்தனர்.

ஆனையிறவுப் பக்கம் யாழிசையின் குழுவும் கட்டைக்காட்டுப் பக்கம் தம்பி நவீனனின் குழுவும். ஆனால் இவ்விடயம் அவள் வீரத்தழும்பு பெற்றுத் திரும்பி வரும்வரை தெரியாது. அப்போரின் போது எத்தனையோ போராளிகளின் உடல்களை இம்மண் அணைத்துக்கொண்டது. அதில் தனது தம்பியும் ஒருவன் என்பதை பல நாட்கள் கழித்தே அறிந்துகொண்டாள் யாழிசை.

அன்று மைதானத்தில் பயிற்சி நடந்துகொண்டிருந்த நேரம் ராஜனண்ணா யாழிசையை அழைத்து தம்பியின் விடயத்தைக் கூறவும் கண்கள் இரண்டும் குளமாக, மைதானத்தை விட்டு வெளியேறி தனது அறைக்குச் சென்று, வேதனை தீரும் வரை வாய்விட்டு அழுதாள். புலிகள் அழுவதில்லைத்தான். ஆனால் அவர்களுக்கும் இதயம் என்று ஒன்று உள்ளது. அதில் பாசம், பந்தம் அனைத்து உணர்ச்சிகளும் நிறையவே உண்டு. இதற்கு அவள் மட்டும் விதிவிலக்கல்ல.

என்றும் புன்னகையுடன் துடிதுடிப்புடன் வளையவரும் யாழிசை, அன்று அழுத காட்சி எங்கள் அனைவரையுமே அழவைத்துவிட்டது. யாருக்கு யார் ஆறுதல் கூறுவது என்று தெரியாத நிலை. அவள் அடிக்கடி கூறுவாள் "அக்கா என்ர தம்பியோட போட்டிபோட்டுத்தான் இயக்கத்துக்கு வந்தனான். ஆனா அவனும் எனக்குப் பின்னால வந்திட்டான். வீட்டுக்கு ஒரு ஆள் போதும் எண்டு நான் சொன்னாச் சொல்லுவான், இல்லை, ஒரு ஆம்பிளையும் பொம்பிளையும் கட்டாயம் இருக்கவேணும் எண்டு என்னோட சண்டை பிடிப்பான். இயக்கத்துக்கு வந்ததுக்கு ஒருக்காலும் அவனைக் காணேல்லை. கண்டால் கட்டிப்பிடிச்சு மாறி மாறிக் கொஞ்சவேணும் போல ஆசையாக இருக்கக்கா. ஆனா எங்க நிக்கிறான் எண்டுதான் தெரியல்ல" என்று தனது பாச உணர்வினை சகதோழியிடம் பகிர்ந்து கொள்ளுவாள்.

**மேஜர் யாழிசை / மனோ**



**செல்வராணி திருலோகசிங்கம்**
*மானிப்பாய் மேற்கு, கட்டுடை.*
*(காங்கேசன்துறை)*
**பிறப்பு: 1972-07-12**
**வீரச்சாவு: 1993-09-29**

அவளின் தம்பி சிறுவயதிலேயே தீக்காயங்களுக்கு ஆளானவன். உடலிலும் முகத்திலும் அதன் அடையாளங்கள் தழும்புகளாகத் தெரியும். இதனால்தான் மற்றைய சகோதரர்களைவிட யாழிசை அவனிடம் கூடுதலாகப் பாசம் வைத்திருந்தாளோ? சக போராளியின் துன்பத்தில் சரிபங்குகொள்ளும் அவள், வேதனை தாளாது அன்று அழுத அழுகை சொல்லமுடியாதது.

"எங்களைப்போல உலகத்தில ஒருத்தராலையும் சந்தோசமா இருக்க ஏலாதக்கா" என்று துள்ளிக் குதித்தபடி திரிந்த யாழிசைதான் அன்று துவண்டு அழுதாள். இவ்விடயத்தை பெற்றோருக்குத் தெரிவிக்கச் சென்ற வேளை இறுகிய முகத்துடன் தனது வேதனையை பெற்றோர் பார்க்கக்கூடாது என்ற நிலையில் தைரியமாய் நின்று அவர்களுக்கு ஆறுதல் கூறியவளும் யாழிசைதான்.

இவளின் சுபாவம் மக்களுடன் பழகும்போது மிகவும் வித்தியாசமானதாகத்தான் இருக்கும்.

யாழ். நகரின் கரையோரப் பிரதேசம் ஒன்றில் ஆமியின் வரவை எந்நேரமும் எதிர்பார்த்தபடி கண்துஞ்சாது புலிகள் காவல் செய்துகொண்டிருந்தனர்.

அங்கு உணவு, மருந்து, ஆயுதங்களைப் பங்கீடு செய்து வழங்கவென அமைக்கப்பட்ட குழுவின் ஒரு பகுதியின் தலைவியாக இருந்தவள் யாழிசை. அந்த வேளையில்தான் மக்களைத் தன்னுடன் இணைத்து, எதிரியின் தாக்குதலை முறியடிக்கவெனப் பல பதுங்கு குழிகளை அமைத்தாள். தனியாக நின்று அவள் அமைத்த பல பதுங்கு குழிகள், அவளது கையின் வலிமையைப் பறைசாற்றியபடி இன்னும் இருக்கின்றன.

இம்மக்கள் அவளைத் தமது சொந்தப்பிள்ளை போலவே உயிராக நேசித்தனர். உணவைச் சமைத்துவைத்துவிட்டு அவளின் வரவுக்காக காத்திருந்தவர்கள் எத்தனையோ பேர்! "என்ர பிள்ளை வரும்" எனக் கூறி, செய்யும் பலகாரத்தில் எடுத்து வைக்கும் தாய்மார்கள் எத்தனையோ பேர்!

அவளும் அப்படித்தான் உரிமையுடன் பழகுவாள். "அம்மா பசிக்குது. எனக்கு என்ன வைச்சிருக்கிறியள். வருவனெண்டு தெரியும் தானே? என்ர பங்கைத் தாங்கோ" என ஆர்ப்பாட்டம் செய்வாள். சமையலறைக்குள் புகுந்து பானையைத் திறந்து, சட்டியைத் திறந்து, தேவையானவற்றை எடுத்து தன்னுடன் வந்த பிள்ளைகளுக்கும் கொடுத்து மீதியைத் தான் உண்ணுவாள்.

இவள் மிகவும் உரிமையுடன் பழகும் ஒரு வீடு பிரதான வீதியில் இருந்து பிரியும் சிறிய ஒழுங்கையில் அமைந்திருந்தது. ஒழுங்கையில் கால் வைக்கும் போதே "அம்மா" என்று சத்தமிட்டபடிதான் வருவாள். வரும் போது மூன்று நான்கு போராளிகளையும் அழைத்துக்கொண்டுதான் பெரும்பாலும் வருவாள். சத்தத்திலேயே "மனோதான் வாறா" என்று அம்மக்கள் உணர்ந்து விடுவார்கள்.

"அம்மா நீங்க சரியா எங்கடை அம்மா மாதிரித்தான் இருக்கின்றீர்கள்" என்பாள். சிறு குழந்தைபோல அடம்பிடித்து "சோறு குழைச்சுத் தாங்கோ அப்பதான் சாப்பிடுவேன்" என்று கையை நீட்டியபடி, குழைத்துக்கொடுக்கும் உணவை வெகுவாக ருசித்து உண்பாள்.

மக்களுடன் உரையாடும் போதுகூட அவளது சிந்தனை, பேச்சு அனைத்திலும் போராட்டத்தின் வளர்ச்சி, தேவை அதற்குச் செய்யவேண்டிய பங்களிப்பு என்ன என்பது பற்றியே அமைந்திருக்கும். அனாவசியமான வார்த்தைகள் அவள் வாயிலிருந்து வருவது கிடையாது. அவளின் மேல் பாசம் வைத்ததன் விளைவாக அவளிடம் புகைப்படம் கேட்ட சகோதரிகள் எத்தனையோ பேர்! இதற்கு அவள் கூறுவாள்;

"நான் செத்தாப் பிறகு கட்டாயம் பேப்பரில என்ர படம் வரும். அதைவெட்டி மாலை போட்டு வையுங்கோ," என்று கண்களைச் சிமிட்டியபடி, "சீரியசாத்தான் சொல்லுறன். விளையாட்டில்ல, சீரியஸ் எண்டா சீரியஸ் தான்" என்று அடிக்கடி கூறி வைப்பாள்.

வேதனையுடன் நிற்கும் அவர்கள் "இப்படிச் சொல்லாதையும் மனோ" என்று கடிந்து கொண்டாலும் கூட,

"சீரியசாத்தான் சொல்லுறன். நான் செத்து பெட்டியில் கிடக்கேக்க, ஆராவது வந்து பக்கத்தில நிண்டு அழுங்கோ, எழும்பிக் காலால நல்ல உதை தருவன்" என்று சிரித்தபடி கூறிமுடிப்பாள்.

"உங்களுக்கு லீவு தந்தா எங்கட வீட்டில வந்து நில்லுமன், பிள்ளை" என்று அன்புடன் கேட்கும் தாயிடம்,

"வருவன். ஆனா உங்கட வீட்டில இல்லை. இன்னொரு வீட்டிலதான் நிற்பன்" என்று கண்ணை இடுக்கியபடி கூறுவாள்.

அவளின் பேச்சில் கூட, மனித வாழ்க்கையின் இன்பதுன்ப ஆசை பந்தங்களின் ஒருதுளி அசைவைக்கூட காணமுடியாது. எந்நேரமும் 'அடிபடவேணும். ஆமியை விழுத்தவேணும்' என்று கதைத்தபடிதான் இருப்பாள்.

தனது பிள்ளைகளுடன் அவள் ஒரு தாயைப் போலவே பழகிக் கொள்வாள். அளவு கடந்த அன்பு வைத்திருக்கும் அவள், தனக்கு கீழ் உள்ள பொறுப்பாளர்களிடம் அடிக்கடி கூறும் விடயம் "பிள்ளைகளோட நல்லா அன்பா பழகுங்கோ. அதுகளின்ர மனம் நோகக் கதைக்காதேங்கோ. அது போராட்டத்தில இருந்து பிள்ளைகளை விலகிச் செல்ல வைச்சுப்போடும். தவறு செய்யும் பிள்ளையைக்கூட அன்பாலதிருத்தப் பாருங்கோ" எனப் புத்திமதி கூறுவாள். அதேவேளை அதனை அவளும் கடைப்பிடிக்கத் தவறுவதில்லை.

எவ்வளவு கோபம் வந்தாலும்கூட ஏக வசனத்தில் பேசியறியமாட்டாதவள். "செய்யிறதை ஒழுங்காச் செய்யவேணும். குறிப்பறிஞ்சு செய்யவேணும்" அவளின் வாயில் அடிக்கடி வரும் வார்த்தைகள் இவை.

"அடிபடவேணும். அடிபட்டுத்தான் சாக வேணும்" என்பதை செயல்வடிவிலும் காட்டி விட்டாள். அவள் சென்ற களங்கள் அனேகம். பலாலி, கோட்டை, கொக்காவில், பின் ஆனையிறவு. இங்குதான் இவளின் இதயம் இன்னொரு இதயத்தால் சிறைப்பிடிக்கப்பட்டது.

அதன் பின்னர் பலவேகயா, மண்கிண்டிமலை எனக் கூறிக் கொண்டே போகலாம். அனைத்திலும் குழுத்தலைவியாக இருந்து செயற்பட்டாள். போரின் நுணுக்கங்களைத் துல்லியமாக அறிந்து கொண்டாள். இக்கட்டான சூழ்நிலைகளிலும் கூட தேவையற்ற வார்த்தைகளை உதிர்க்காது பொறுமையுடன், அதே நேரம் கவனத்துடனும் குழுவை நடத்திச் செல்லும் திறமைமிக்கவள்.

தொடர்ச்சி 14ம் பக்கம் ....

# தாயக மண்ணில் பொன் விளைவித்த வேளாண் மன்னர்கள்

வட தமிழ்ப் பகுதியில் கடந்த கால நெற் செய்கையில் நீர்பாய்ச்சுகையின் கீழும், மழையை நம்பிய நெற்செய்கையின் கீழும் நெற்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளிடையே தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தனித்தனியாக நடத்திய வேளாண் மன்னர் போட்டியில் ஆறு வேளாண் மன்னர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தெரிவான இந்த வேளாண் மன்னர்களுக்கு தங்கப்பதக்க பரிசும் பாராட்டு சான்றிதழ்களும் தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரனால் வழங்கப்பட்டன. அதிக விளைவு பெற்ற வேளாண் மன்னர்கள் யாழ், வன்னி, முல்லை, மன்னார், ஆகிய மாவட்டங்களிலிருந்து தனித்தனியாக தெரிவு செய்யப்பட்டனர். இவர்களின் விபரம் வருமாறு:

### யாழ் மாவட்டம்

திரு. கதிரவேலு சற்குணராசா தொட்டிலடி சங்கானையைச் சேர்ந்த இவர் பி. ஜீ. 350 இன நெல்லை பயிரிட்டு ஒரு ஏக்கருக்கு சராசரியாக 105 புசல் விளைவு பெற்று 1993-1994 ஆம் ஆண்டின் யாழ்ப்பாண வேளாண் மன்னராக தெரிவுசெய்யப்பட்டார்

### கிளிநொச்சி மாவட்டம்

திரு. சண்முகம் பாலேந்திரன் பண்டிசுட்டான் கண்டாவளையை சேர்ந்த இவர் பி. ஜீ. 500-1 இன நெல்லை நீர்பாய்ச்சுகை நெற்செய்கையின் கீழ் பயிரிட்டு 165·7 புசல் நெல்லை ஒரு ஏக்கருக்கு சராசரி விளைவாக பெற்று 1993-94 ஆம் ஆண்டின் கிளிநொச்சி வேளாண் மன்னராக தெரிவானார்.

திரு. சி. சிவஞானம், இராமநாதபுரம் கிளிநொச்சியைச் சேர்ந்த இவர் மழையை நம்பிய பயிர்ச் செய்கையில் ஏ. ரி 51 இன நெல்லை பயிரிட்டு 174. 64 புசல் விளைவினை சராசரியாகப் பெற்று வேளாண் மன்னர் விருது பெற்றுள்ளார்.

### முல்லை மாவட்டம்

திரு. கந்தையா முத்துக்குமாரு, இறம்பைக்குளம் நெடுங்கேணியை சேர்ந்த இவர் பி. ட பிள்யூ 351 இன நெல்லினை நீர்ப்பாய்ச்சுகை நெற்செய்கையில் பயிரிட்டு சராசரி 176. 4 புசல் ஏக்கர் ஒன்றுக்கான விளைவாகப் பெற்று இம்மாவட்டத்தில் வேளாண் மன்னராக தெரிவாகினார்.

திரு. வேலுப்பிள்ளை சிவபாதம் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த இவர், மழையை நம்பிய நெற்செய்கையில் பீ, ஜீ 500-1 இன நெல்லினை பயிரிட்டு ஏக்கர் ஒன்றிற்கு 103-9 புசல் விளைவை பெற்று இம் மாவட்டத்தின் வேளாண் மன்னராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

### மன்னார் மாவட்டம்

திரு. யோசெப் சகாயராசா பெரேரா கற்கிடந்தகுளத்தைச் சேர்ந்த இவர், நீர் பாய்ச்சுகை நெற்செய்கையின் கீழ் பீ. ஜீ 11-11 இன நெல்லை பயிரிட்டு ஒரு ஏக்கருக்கு சராசரியாக 188•75 புசல் விளைவு பெற்று மன்னார் மாவட்டத்திற்கான வேளாண் மன்னராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். ■


கதிரவேலு சற்குணராசா (யாழ்ப்பாணம்)


சண்முகம் பாலேந்திரன் (கிளிநொச்சி)


சி.சிவஞானம் (கிளிநொச்சி)


கந்தையா முத்துக்குமாரு (முல்லை)


வேலுப்பிள்ளை சிவபாதம் (முல்லை)


யோசெப் சகாயராசா பெரேரா (மன்னார்)

# பொருண்மிய விடுதலை

கடந்த இரு தசாப்தத்திற்கு முன்னர் தேசிய இனவிடுதலை என்பதைவிட, வர்க்க விடுதலை என்பதே முதன்மைப்படுத்தப்பட்டது. ஆனால் இன்றைய அரசியல் யதார்த்தம் வர்க்க விடுதலை என்பதைவிட, தேசிய இனங்களின் விடுதலையே முதன்மையானது என்றும், அதுவே முனைப்பான பிரச்சினை என்பதையும் ஏற்றுக்கொண்டுள்ளது. ஆனால் ஒரு தேசிய இனத்தின் விடுதலை என்பது, தனியாக அரசியல் விடுதலை என்பதில் முற்றுப்பெற்றுவிட முடியாது அது அவ்வினத்தின் -அரசின் பொருண்மிய விடுதலையுடனும் தொடர்புபட்டுள்ளது.

இதனையே, வேளாண் மன்னர் விருது வழங்கும் வைபவத்தில் பேசிய தலைவர் பிரபாகரனும் சுட்டிக்காட்டியுள்ளார். **"எமது தன்னாட்சி உரிமைப் போராட்டம் தமிழீழத் தனியரசை நிறுவும் இலட்சியத்தைக் கொண்டது. இந்தத் தனியரசை நிர்மாணிப்பதற்கு ஒரு தன்னிறைவான பொருண்மியக் கட்டமைப்பு அவசியம். எனவேதான் அரசியல் விடுதலை என்ற குறிக்கோளுடன் பொருளாதார விடுதலையும் ஒன்றிணைந்து நிற்கின்றது. நாம் நிர்மாணிக்கப் போகும் நாடு தங்கு நிலையற்றதாக, தன் காலில் தரித்து நின்று வளர்ச்சி பெறக்கூடியதாக அமையவேண்டும். அதற்கான அத்திவாரத்தை நாம் இப்பொழுதே கட்டி எழுப்ப வேண்டும்"** என்பதே தலைவர் பிரபாகரன் சுட்டிக்காட்டிய விடயம் ஆகும்.

மூன்றாம் உலக நாடுகளில் பெரும்பாலானவை நாற்பதுகளின் இறுதியிலும் ஐம்பதுகளினது ஆரம்பத்திலும் காலனித்துவ ஆட்சியில் இருந்து விடுதலை பெற்றுவிட்டன. அக்காலத்தில் சுதந்திரம் பெறாத ஆபிரிக்க நாடுகளும் அறுபதுகளின் மத்திக்கிடையில் 'சுதந்திரம்' பெற்றுவிட்டன. ஆனால் இவர்கள் பெற்ற சுதந்திரமானது எத்துணை நிறைவுடையது? இவர்களால் சுதந்திரம் பெற்று மூன்று, நான்கு தசாப்தங்கள் கடந்தும் எதையும் சுதந்திரமாகச் செய்ய முடிந்ததா? உண்மையில் இந்நாடுகள் பெற்ற சுதந்திரம் என்பது, இந்நாடுகளில் நேரடியாக இருந்து ஆட்சிசெய்த அந்நியர்களை வெளியேற்றியதே ஒழிய, இந்நாடுகளுக்கு சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுக்கவில்லை. அதாவது ஆட்சியாளர்கள் மாறினார்களே ஒழிய சுதந்திரமான செயற்பாடுகள் இடம்பெறுவதற்கான சூழ்நிலை இருக்கவில்லை.

ஏனெனில் இந்நாடுகள் அரசியல் சுதந்திரம் போன்று பொருண்மிய ரீதியான சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்ளவில்லை. இந்நாடுகளின் பொருண்மியம் சுயசார்பு உடையதாக இல்லாது போனதே இதற்குக் காரணமாகும். இதனால் அந்நியர் வெளியேறிய பின்னரும் அவர்களிலேயே தங்கிநிற்க வேண்டிய அவலநிலை உருவானது. இதன் காரணமாக பொருண்மிய சுதந்திரம் மட்டுமல்லாமல், மறைமுகமாக அரசியற் சுதந்திமும் கட்டுப்படுத்தப்பட்டது என்றே கூறமுடியும். இக்கட்டுப்பாடுகளை இன்று ஏகாதிபத்திய அரசுகளும், வேறுசில தேவை கருதி அவர்களின் சார்பில் சர்வதேச நிதி நிறுவனங்களும் செய்து வருகின்றன. இந்நிலையில் **மூன்றாம் உலகநாடுகளின் விடுதலை என்பது இன்னமும் நிச்சயிக்கப்படாத ஒன்றாகவும், பேச்சளவில் 'சுதந்திர நாடுகள்' என்ற ரீதியிலுமே உள்ளன. இந்நாடுகளின் 'கடிவாளங்கள்' மேற்குலக அரசுகளிடமும், சர்வதேச நிதி நிறுவனங்களிடமுமே இன்னமும் உள்ளன. இவற்றில் இருந்து இந்நாடுகள் விடுபடுதல் என்பது அண்மைக்காலத்தில் சாத்தியமாகப் போவதுமில்லை.**

ஆனால் சர்வதேச வர்த்தகமும், போக்குவரத்தும் மிகவும் வளர்ச்சி கண்டுள்ள இன்றைய காலகட்டத்தில் தன்னிறைவான சுயசார்புப் பொருளாதார அமைப்பொன்று தேவைதானா என்ற கேள்வியைச் சிலர் கேட்பதுண்டு. ஆனால் இவ்வாறான கேள்வி ஒரிரு வளர்ச்சி அடைந்த நாடுகளை மனதில் வைத்துக் கேட்கப்படும் கேள்வியாக இருக்குமே ஒழிய, மூன்றாம் உலகின் பொதுப் பண்பிற்குரிய கேள்வியாக இருக்க முடியாது. சர்வதேச வர்த்தகத்தின் வளர்ச்சியும், போக்குவரத்தின் அதிகரிப்பும் ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவக்கூடியவையாக இருக்க வேண்டுமே ஒழிய, அந்நாடுகளை தங்குநிலைப் பொருளாதாரத்திற்கு கொண்டுவந்து விடுவதாக இருக்கக்கூடாது.

அவ்வாறு இல்லாதுவிடில் 'அரசியல் சுதந்திரம்' பெற்றுவிட்டாலும் என்றும் கையேந்தும் நிலையிலேயே இருக்க வேண்டும். இன்று விண்ணிற்கு 'ரொக்கட்டை' ஏவும் தொழில்நுட்பத்தையும் ஏவுகணைத் தொழில்நுட்பத்தையும் பெற்றுவிட்டபோதும், இந்தியா சுயசார்புப் பொருண்மியக் கட்டமைப்பு இன்மையாலேயே மேற்கு நாடுகளினதும், சர்வதேச நிதி நிறுவனங்களினதும் அழுத்தங்களுக்கு உள்ளாவதைத் தவிர்க்க முடியாது உள்ளமை இதற்குச் சிறப்பாக சுட்டிக்காட்டக் கூடியதாகும். இந்நிலையில் **உருவாகப்போகும் தமிழீழத் தனியரசும் இறைமையுடையதாக இருக்க வேண்டுமானால், அது தற்பொழுதே தனக்கென தன்னிறைவுகொண்ட சுயசார்புப் பொருண்மியக் கட்டமைப்பைக் கொண்டதாக உருவாகவேண்டும். இதற்கு தலைவர் பிரபாகரன் குறிப்பிட்டது போன்று, "இயற்கையின் கொடையாக எமக்கு வழங்கப்பட்ட வளங்களை நாம் இனங்கண்டு அவற்றை உச்சப் பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டும்".**

### தங்கு நிலையற்ற...

ணின் வளத்தில் நாம் தங்கிநிற்க வேண்டும் என்ற தேவையையும் உணர்த்தியது.

# உழைக்கும் எம்மக்களின் உதிரத்தால் மறுமலர்ச்சி கண்ட பொருளாதாரம்

இந்த விழிப்புணர்வு எமது மக்களின் உழைப்பாற்றலை முனைப்புறச் செய்தது. உழைக்கும் மக்களின் உதிரத்தால் உரமூட்டப்பட்டு எமது தேசிய பொருளாதார வாழ்வு என்றுமில்லாத மறுமலர்ச்சி கண்டது. நெல் உற்பத்தி, பனைவள உற்பத்தி, கடல்வள உற்பத்தி, கைத்தொழில் உற்பத்தியாக, இன்று பல்வேறு துறைகளில் உள்ளூர் உற்பத்தி உயர்ச்சி கண்டுவருகிறது. எமது மக்களின் அயராத உழைப்பிற்கும், தளராத உறுதிக்கும் சான்றாக, இன்று எமது தேசிய பொருளாதாரம் தனது சொந்தக் கால்களில் எழுந்து நிற்க முனைகிறது. எதிரி திணித்துவிட்ட பொருண்மியத் தடைகள் எமது தேசத்தை முடக்கிவிடவில்லை; பதிலாக எமது தேசத்தின் பொருளுற்பத்தியை முடுக்கிவிட்டிருக்கிறது என்றே சொல்ல வேண்டும்.

எமது தன்னாட்சி உரிமைப் போராட்டம் தமிழீழத் தனியரசை நிறுவும் இலட்சியத்தைக் கொண்டது. இந்தத் தனியரசை நிர்மாணிப்பதற்கு ஒரு தன்னிறைவான பொருண்மியக் கட்டமைப்பு அவசியம். எனவேதான், அரசியல் விடுதலை என்ற எமது குறிக்கோளுடன் பொருளாதார விடுதலையும் ஒன்றிணைந்து நிற்கிறது. நாம் நிர்மாணிக்கப் போகும் நாடு, தங்கு நிலையற்றதாக, தன்காலில் தரித்து நின்று வளர்ச்சி பெறக்கூடியதாக அமையப்பெறவேண்டும். அதற்கான அத்திவாரத்தை நாம் இப்பொழுதிருந்தே கட்டியெழுப்பவேண்டும்.

# இயற்கையின் வளங்களை கொண்டு உச்சப் பயன்பாடு பெறவேண்டும்

தமிழீழம் ஒரு செழிப்பான பூமி. வளங்கள் பல நிறைந்த தேசம். தன்னிறைவான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி, அதனை அபிவிருத்திப் பாதையில் இட்டுச்செல்லக்கூடிய நீர்வளத்தையும், நிலவளத்தையும், மனித தொழிலாக்க வளத்தையும் கொண்டது. இயற்கையின் கொடையாக எமக்கு வழங்கப்பட்ட இந்த வளங்களை நாம் இனங்கண்டு, அவற்றை உச்சப் பயன்பாட்டிற்கு கொண்டுவரவேண்டும். மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில், திறமையான திட்டமிடுதலின் அடிப்படையில், உற்பத்தியைப் பெருக்கவேண்டும். வேளாண்மையும், கைத்தொழிலுமே பொருண்மியக் கட்டுமாணத்திற்கு அடித்தளமானது. தன்னிறைவான பொருளாதார வாழ்வுக்கு ஆதாரமானது. இந்த இரு துறைகளையும் கட்டி வளர்ப்பதில் நாம் முக்கிய கவனம் செலுத்தவேண்டும். இந்த இலக்கில் எமது அமைப்பான, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஆக்கபூர்வமான பல வேலைத் திட்டங்களை செயற்படுத்தி வருகிறது. இந்த முயற்சிகள் வெற்றி பெற எனது ஆசிகள்.

உழைக்கும் மக்களை ஊக்கப்படுத்தி, அவர்களின் ஒத்துழைப்போடு உற்பத்தியைப் பெருக்கும் முயற்சிகளை தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. இதன் ஒரு முக்கிய அம்சமாக, வேளாண்மைத்துறையிலும் போட்டியை நிகழ்த்தி, 1993-1994-ம் ஆண்டிற்கான 'வேளாண் மன்னர்களைத் தெரிவு செய்திருக்கிறது. எமது தாயகமண்ணில் பொன் விளைவித்து, அபாரமான சாதனை ஈட்டிய உழவர்களுக்கு 'வேளாண் மன்னர்' விருதுகளை வழங்கி கௌரவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். ■

# தமிழீழ அரசும் அ

"எமது தேசியத் தலைவர் ஆயுதம்
தமிழீழத்தின் எல்லாத்துறைகளிலும்
வகையில் எமக்கு உலக அறிவையும்
மனஉறுதியையும், மனிதசக்தியையுபே
ஆனால் அவர் எங்களிடமிருந்து
திறமைகளை வெளிக்கொணர்ந்துள்
ணர்வுள்ள, பொறுப்புடையவர்களாக
தமிழீழ அரசின் நிறுவனங்கள் செய
வெளிநாடுகளிலிருந்து தமிழீழம்
வரவேற்பையும் இக்கட்டுரை விளக்குகி

வெளிநாடுகளிலிருந்து தமிழீழத்திற்குச் சென்று திரும்பும் தமிழீழ மக்களை மட்டுமல்ல, வெளிநாட்டவர்கள் அனைவரையுமே தமிழீழம் கவர்ந்துள்ளது. எல்லைக் காவல் படை, சுங்க இலாகா, தமிழீழம் போக்குவரத்து ஒழுங்குபடுத்துனர், காவல்துறை உட்பட யாவருமே வாருங்கள் "உங்களை தமிழீழம் வரவேற்கிறது" என்ற வரவேற்புடன் அன்பாக உபசரித்துப் பேசுகிறார்கள். சுங்க இலாகா சோதனை உட்பட யாவையும் மனித அபிமானத்துடன், - நீங்கள் எமது உடன்பிறப்புக்கள் என்ற வகையில் உரையாடுவதைக் காணும் வெளிநாட்டிலிருந்து தாய் நாடு சென்று திரும்பும் தமிழீழ மக்களிற்கு ஆச்சரியமாக இருக்கிறது. வெளிநாடுகளில் அவர்கள் கேட்பது அறிந்தவற்றைவிட 100 மடங்கு திறமாகவும் நேர்மையாகவும் நடைபெறுகின்றன. ஐரோப்பிய நாடுகளில் காணப்படுவது போன்ற நிர்வாக ஒழுங்கு, நேர்மை, நிர்வாகக் கோவை பயன்படுத்தும் முறைகள் இயற்கையைப் பேணுவது, இயற்கைச் சுற்றம், சுகாதாரம் என்பன கடைப்பிடிக்கப்படுகின்றன. தமிழீழம் சென்று திரும்பும் நம்மவர்களிடம் வெளிநாடுகளில் வசிக்கும் தமிழீழ மக்களை ஒருமுறை வந்து தமிழீழத்தைப் பார்த்துவிட்டுச் செல்லுமாறு கூறுங்களென அன்புடன் அழைப்பு விடும்பொழுது, வெளிநாட்டிலிருந்து சென்று திரும்பும் எம்மக்களின் மனம் உருகிவிடுகிறது.


## புடமிடப்பட்ட தங்கங்கள்

ஒவ்வொரு விடுதலைப் போராளியிடமும் கதைகொடுத்தால் அவர்கள் நாங்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளைப் பற்றி எங்களிடம் கேட்கும் கேள்விகளைக்கண்டு, எங்கே நாம் அவர்களிடம் மாட்டிவிடுவோமா என்று அஞ்சத் தோன்றுகிறது. அந்தளவிற்கு உலக அரசியல் , உலக நாடுகளின் சரித்திரம் இயற்கை வளங்களை அறிந்தவர்களாக அவர்கள் காணப்படுகின்றனர். உதாரணமாக அவுஸ்திரேலியாவிலிருந்து சென்றவர் என்பதைச் சொன்னால், அவர்கள் அவுஸ்திரேலிய சரித்திரப் பிரசித்தமான இடங்களைப் பற்றிக் கேட்கிறார்கள். அந்நாட்டின் மூல வளங்களைப் பற்றி கேட்கிறார்கள். அந்நாட்டின் மூலப்பொருட்களிலிருந்து பண்டங்கள் எவ்வாறு தயாரிக்கப்படுகிறது என்ற முறைமைகளைக் கேட்கிறார்கள். ஜேர்மனியிலிருந்து வந்தோம் என்றால் இரண்டாவது உலக மகாயுத்தத்தின் பின் எவ்வாறு ஜேர்மனி கட்டி எழுப்பப்பட்டது. யுத்த காலத்தில் மக்கள் எவ்வாறு பண்டங்களைச் சேகரித்து வைத்தார்கள். அங்கு யூதர்களிற்கு நடந்த கொடுமை அவர்கள் கொடுமைப்படுத்திய இடங்களைப் பார்த்தீர்களா? போன்ற கேள்விகளை அம்புகளாக்கி விடுகிறார்கள். வெளிநாடுகளிலிருந்து தமிழீழம் சென்ற எங்களை அங்கு போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் பதின்மூன்று வயதுச் சிறுவர்கள் கேட்கும் கேள்விகள் எம்மைச் சிந்திக்கத் தூண்டிவிடுகிறது. அவர்கள் கேட்டதன் பின்தான் எங்களிற்கே ஆர்வம் வந்தது, நாங்கள் வாழும் வெளிநாடுகளைப் பற்றி நாம் கட்டாயம் அறிந்திருக்க வேண்டும் என்று. அல்லது நாம் நிரந்தரமாகத் தமிழீழம் வரும்பொழுது அவர்களின் இத்தகைய கேள்விகள் எங்களை வெட்கித்தலைகுனிய வைத்துவிடும். குறிப்பாக ஜேர்மன் நாட்டில் ஜேர்மனியர்களுக்கு எவ்வாறு நாட்டுப்பற்று காணப்படுகிறதோ அதைவிட மேலாகவே தமிழீழத்தில் உள்ளவர்களிடம் நாட்டுப்பற்று காணப்படுகின்றது.

அங்குள்ள போராளிகள் ஒவ்வொருவரும் தங்களின் தலையில், 'தமிழீழ மண்மீட்பு' என்ற ஒரு பெரும்பொறுப்பு இருப்பதாக உணர்ந்து செயல்படுகிறார்கள். எதையாவது வெளிநாட்டிலிருந்து கொண்டு போனால், அது எவ்வாறு செய்யப்பட்டுள்ளது என ஆராய்கிறார்கள். "ஐயா இந்தப் பொருள் தயாரிப்பதற்காக ஒரு 'புறஸ்பெக்ட்' இருக்கும். அதனை அனுப்பிவிடுங்கள். எம்மிடம் சிறந்த மனித சக்தி இருக்கிறது. எம்மால் ஏலாதது என்று ஒன்றில்லை. ஒரு முறை அதனை இங்கு செய்ய முயற்சித்துப் பார்ப்போம். நாங்கள் இங்கு தயாரிக்கும் பொருட்கள் எமது தேவையைப் பூர்த்தி செய்வதாக மட்டும் இருக்கக் கூடாது. சுதந்திரத்தின் பின் சிங்கள நாட்டிற்கு ஏற்றுமதி செய்து எமது அன்னியச் செலவாணியை பெருக்குவதாகவும் இருக்க வேண்டும்" என்கிறார்கள்.

## பொருண்மிய மேம்பாடு

உறுதிமிக்க தமிழீழத்தில் துளிர்விடும் இளம் தளிர்களில் ஒன்றாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் செயற்பாடுகள் காணப்படுகின்றன. தோல்பதப்படுத்தும் ஆலையில் பல இரசாயன பொருட்கள் இல்லாத பொழுதும், மூலவளங்களை நன்கு பயன்படுத்தி அதன் இயற்கையைக் கொண்டு தோல்களைப் பதப்படுத்தி அவற்றிற்கு வர்ணம் பூசும் முயற்சியில் வெற்றிகண்டுள்ளனர். எமது போராட்டத்திற்கு தோல் பொருளின் முக்கியத்துவம் கண்டும், எமது மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கத்திற்கும் இம்முயற்சியில் வெற்றி காணப்பட்டுள்ளது. தமிழீழத்தில் எந்தப் பொருளும் தேவையற்றதாகக் கருதப்படாமல் வீணாகிவிடாது எமது இயற்கைச் சூழலுக்கும், சுகாதாரத்திற்கும் உட்பட அவற்றைப் பயன்படுத்துவதில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் முன்நிற்கிறது.



ஆக்கி வாயு உற்பத்தியில் பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் சக்திப் பகுதி

எமது நாட்டின் அத்தியாவசிய தேவைகளை எமது சுய உற்பத்தி மூலம் பூர்த்திசெய்ய வேண்டும். எம்மிடம் கிடைக்கும் மிகக் குறைந்த பொருளாதார வசதியுடன் நாம் முழுக்க முழுக்க நம்பிக்கை வைத்திருக்கும் உறுதியுள்ள மனித சக்தியின் உதவியுடன் சுயதேவை உற்பத்தியை ஆரம்பித்து, அதில் நிறைவு கண்டுவருகிறது பொருண்மிய மேம்பாட்டுக்கழகம். வெளிநாட்டுத் தானிய விதைகளை எமது மண்ணில் பரீட்சித்து குறுகிய காலத்திற்குள் அதிகளவு பயனைப் பெறும் ஆராய்ச்சியிலும் ஈடுபட்டுள்ளது. குறிப்பாக சூரியகாந்தி விதையில் இருந்து எண்ணெய் பெறுதல், சோயா உற்பத்தி, ஜேர்மனியில் உற்பத்தியாகும் சீனிக்கிழங்கு போன்ற இன்னும் பல தானியங்கள் எமது தாய்மண்ணில் பெரும் வெற்றியைத் தந்துள்ளன. ஜேர்மனிய நாட்டில் இரண்டாவது யுத்த காலத்திலும், யுத்தம் முடிவுற்ற கால ஆரம்பத்தி லும் இதுபோன்ற முயற்சி காணப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இயற்கையுடன் போட்டியிட்டு கால நிலைக்கு ஏற்றவாறு உற்பத்திகள் பெருக்கப்பட்டு வருவதற்கு எடுத்துக் காட்டாக எலுமிச்சை, தோடை போன்றவை வறட்சிக் காலத்தில் அதிகளவு பலன்களைத் தருவதில்லை என்பதால், வறட்சிக் காலத்திலும் அதிக பலன்தரும் விளாமரம் போன்றவற்றில் இம்மரங்களை ஒட்டி, வரட்சிக் காலத்தில் நிறைந்த பலன்களைப்பெற வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

உப்பின் விலையேற்றம் குறிப்பிட்ட சில காலத்தில் 30 ரூபா வரை உயர்ந்து காணப்பட்டது. இந்நிலமையில் மக்கள் சுத்தப்படுத்தப்படாத இடங்களில் ஆங்காங்கே காணப்படும் அழுக்குப்படிந்த உப்புகளையும் பாவனைக்கு எடுக்க முற்பட்டனர். இதனைத் தடுத்து மக்களை நோய் வாய்ப்படுவதிலிருந்தும், விலைவாசி ஏற்றத்திலிருந்தும் பாதுகாப்பதற்காக ஆறுமாதகால குறுங்காலத்திட்டம் வகுக்கப்பட்டுப் பாத்திகட்டி உப்பு விளைவிக்கப்பட்டது. ஆறுமாதகால முயற்சியின் பின் தற்பொழுது உப்பின் விலை 30 ரூபாவிலிருந்து 8 ரூபாவாகக் குறைந்துள்ளது. இது போன்றே முட்டையின் விலையும் 15 ரூபாவரை அதிகரித்துக் காணப்பட்டது. மின்சாரத்தின் மூலம் கோழி முட்டையிலிருந்து குஞ்சுபெறும் இயந்திரங்கள் இல்லாமையினால் கோழி, கோழிமுட்டை ஆகியனவற்றின் விலை அதிகரித்தன. தமிழீழத்திற்கு வெளியிலிருந்து பல இனக் கோழிக் குஞ்சுகள் பெறப்பட்டு, குறுகிய காலத்திற்குள் அவை வளர்ந்து பயன் தரத்தக்க வகையில் கோழித்தீனிக




சுற்றாடலைப் பாதுகாப்பதில் தமிழீழ மக்களுடன் விடுதலைப் புலிகள்

# ன் நிறுவனங்களும்

> ...துவதற்கு மட்டும் கற்றுத்தரவில்லை. ...ல்லா வளங்களையும் பயன்படுத்தும் ...ற்றுத் தந்துள்ளார். நாங்கள் எமது ...ங்கள் தலைவருக்குக் காட்டினோம். ...ளுக்கே தெரியாமல் ஒளிந்திருந்த ... எங்களை விசுவாசமிக்க கடமையு...பாக்கியுள்ளார்".
> ...ும் விதம் பற்றிய சிறப்புக்களையும், ...்வோருக்கு கிடைக்கும் அன்பான ...து.

ளைத் தயாரித்து, அவற்றின் மூலம் அக்குஞ்சுகள் வளர்க்கப்பட்டு முட்டையிடும் பருவத்தில் பொதுமக்களுக்கு வீட்டுப்பண்ணைத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டன. இம்முயற்சி ஆறுமாத காலத்திற்குள் பலனளித்தது. தற்பொழுது கோழி முட்டையின் விலை 15 ரூபாவிலிருந்து 5 ரூபாவாகக் குறைந்துள்ளது. இது போன்றே தேனீவளர்ப்பு உற்பத்தியும் பெரும்வெற்றியைத் தந்துள்ளது.



விளா மரத்தில் எலுமிச்சை, தோடை மரங்களை ஒட்டும் முயற்சியில் பொருண்மிய மேம்பாட்டுக்கழகத்தினர்.

இலங்கை அரசால் தமிழீழப் போராட்டத்தை நசுக்கிவிடும் வகையில் கொண்டுவரப்பட்ட பொருளாதாரத் தடையை உடைத்து, தமிழீழ வேளாண்மையில் வெற்றிகண்ட மக்களை மேலும் ஊக்குவிக்குமுகமாக இவ்வாண்டு மே மாதம் தமிழீழத்தில் வேளாண்மைதினம் கொண்டாடப்பட்டது. இதில் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் நேரில் கலந்துகொண்டு விவசாய உற்பத்தியில் முழுமுயற்சியுடன் போராடி வெற்றிகண்ட விவசாயிகளுக்கு விருதுகள்

**புதியவன்**

வழங்கிக் கௌரவித்தமை உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்களின் மத்தியில் பெரும் மதிப்பையும், வரவேற்பையும் பெற்றுள்ளது.

## வழிகாட்டும் தலைமை

இது பற்றித் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. ரவி கருத்துத் தெரிவிக்கையில், எமது தேசியத் தலைவர் ஆயுதம் ஏந்துவதற்கு மட்டும் கற்றுத்தரவில்லை. தமிழீழத்தின் எல்லாத் துறைகளிலும், எல்லா வளங்களையும் பயன்படுத்தும் வகையில் எமக்கு உலக அறிவையும் கற்றுத் தந்துள்ளார். நாங்கள் எமது மனஉறுதியையும், மனிதசக்தியையுமே எங்கள் தலைவருக்குக் காட்டினோம். ஆனால் அவர் எங்களிடமிருந்து எங்களுக்கே தெரியாமல் ஒளிந்திருந்த திறமைகளை வெளிக்கொணர்ந்துள்ளார். எங்களை விசுவாசமிக்க கடமையுணர்வுள்ள, பொறுப்புடையவர்களாக உருவாக்கியுள்ளார். இன்று நாங்களே எங்களைப் பார்த்து அதிசயிக்கும் அளவிற்கு எங்களை வடித்தெடுத்த சிற்பிதான் எங்கள் தேசியத் தலைவர். இதில் ஒரு சம்பவத்தைக் கூறவிரும்புகிறேன். தமிழீழம் இசைக் கூடத்தில் வசந்தி என்னும் போராளி சிறந்த பாடகியாக விளங்குகிறார். அவர் போராட்டத்தில் எதிரியின் தாக்குதலுக்குள்ளாகியவர். தமது கை, கால்கள் வளங்காத நிலைக்கு ஆளாகினார். மன உறுதி தளராதவராக மீண்டும் போராட்டத்திற்குச் செல்லவேண்டும் என்ற ஆவேசம் உள்ளவராகக் காணப்பட்டார். அவரது கைகால்களை வளங்கவைக்க வேண்டும் என்பதில் பல மருத்துவர்கள் முயற்சிகளை மேற்கொண்ட பொழுதும் அவையாவும் பலனளிக்கவில்லை.

தேசியத் தலைவர் வசந்தியின் குரல் வளத்தைக் கண்டு, அவரது திறமையை வெளிக்கொண்டு வரவேண்டும் அதற்காக அவரை இசையில் ஈடுபடுத்துவதன் மூலம் அவரது கை, கால்களையும் குணப்படுத்திவிடலாம் என்றார். அவ்வாறே அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் பயன் வெற்றியளித்தது. இன்று வசந்தி தமிழீழ இசைக் கூடத்தின் சிறந்த பாடகி. அவர் பாடும்பொழுது அவரை அறியாமலேயே அவரது கை, கால்கள் செயற்படுகின்றன. அவர் தானாகவே ஒலிவாங்கியை கையிலெடுத்து, தன்னை மறந்து பாடும் அளவிற்கு அவரது உடல் நிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

எமது கலைக் கூடப் பொறுப்பாளர் ஆரம்பத்தில் படத்தை வரைந்து தலைவரிடம் காட்டிய பொழுது, தலைவர் அதனை இவ்வாறு வரையவேண்டுமென பல கருத்துக்களைக் கூறி காட்டிக்கொடுத்ததோடு அவரது திறமைகளைக்கண்டு சிற்பங்களைச் செதுக்குவதில் ஆர்வம் காட்டுமாறு கூறி அதற்கான வழிவகைகளைச் செய்துகொடுத்தார். இன்று அவர் தமிழீழப் போராட்ட வரலாறுகளை சிற்பமாகச் செதுக்கி தமிழீழ மாதிரிக் கலைக் கூடத்தையே உருவாக்கியுள்ளார். இவரது சிற்பவேலைகளைப் பார்த்த யாரும் பாராட்டாமல் சென்றதில்லை.

## தமிழீழ இசைக்கூடம்

வளர்ந்துவரும் தமிழீழ இசைக் கூடத்தின் கட்டிட வேலைகள் ஆரம்பமாகியிருக்கிறது. தேசியத் தலைவரின் மாதிரி வடிவமைப்பில் உருவாக்கப்பட்டு போராட்ட சூழ்நிலையில் எதிரியின் தாக்குதலுக்கு உட்படாத வகையில், இயற்கை அமைப்புடையதாகவும் தமிழீழப் பாரம்பரியத்தை எடுத்துக் காட்டுவதாகவும் உருவாகிக்கொண்டிருக்கிறது.

## தமிழீழத் தேசியக்கல்வி

தமிழீழத்தில் தேசியத் தமிழ்க் கல்வித்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. சிங்கள இனவாத அரசினால் திட்டமிட்ட முறையில் தமிழீழ வரலாறு, தமிழரின் பாரம்பரியங்கள் என்பன தமிழ்ப் பாடநூல்களில் அகற்றப்பட்டும் ஒதுக்கப்பட்டும் வந்துள்ளன. இதைத் தவிர்க்கும் முகமாக தமிழீழ வரலாற்றுள் தமிழர் பண்பாடுகள், தமிழ் மண்ணின் பெருமை, பாரம்பரியங்கள் ஆகியவற்றை மீண்டும் தமிழ்ப் பாடநூல்களில் இடம்பெறச் செய்யப்பட்டுள்ளது. இன்று தமிழ் மொழியில் அதிகளவு அன்னிய மொழிச் சொற்பிரயோகங்கள் வந்துள்ளமையால் தமிழின் தனித்துவம் இல்லாது போகிறது. அதனால் சுத்தத் தமிழ் சொற்பிரயோகங்களை பெரும்பான்மையாகக் கொண்டு தமிழ்ப் பாடநூல்கள் தயாரிக்கப்பட்டுள்ளது. தமிழீழக் கல்விதுறையின் பொறுப்பாளர் திரு. இளங்குமரன் பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், தமிழீழ அறிஞர்கள், இலக்கியகர்த்தாக்கள் ஆகியோரை ஒன்றுகூட்டி பலமுறை ஆய்வுகள் நடாத்தியதன் அடிப்படையில் இத்திட்டம் வெளிவந்துள்ளது. கடந்த ஆண்டு த. பொ. தா (தமிழ்ப்பொதுத் தராதரப்) பரீட்சை ஒன்றை நடாத்தியதில் 58,000 மாணவர்கள் இதில் பங்குகொண்டுள்ளனர். இப்பரீட்சையில் திறமைச் சித்தி பெற்றவர்களிற்கு அவர்களின் குடும்ப நிலைமை காரணமாக மேற்படிப்புக்கென 3000 ரூபா வரை தமிழீழத் தேசியத் தலைவரால் பண உதவி வழங்கப்பட்டுள்ளது.

## தமிழீழ நீதிபரிபாலனம்

தமிழீழ அரச நிறுவனங்களின் செயற்பாடுகளுக்காக தமிழீழ நீதி பரிபாலனத்துறையால் சட்ட ஆக்கக் கோவைகள் உருவாக்கப்பட்டு, அதன் ஒழுங்கு விதிகளுக்கமைய அவை நிர்வகிக்கப்படுகின்றன. தமிழீழத்தில் இயங்கிவரும் தமிழீழ நீதிமன்றம், தமிழீழ உயர்நீதிமன்றம் ஆகியவற்றில் கடமையாற்றும் வழக்கறிஞர்களில் சிறீலங்கா நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் எடுத்த 136 சட்டத்தரணிகளும் கடமையாற்றுகிறார்கள். இவர்கள் தமிழீழ நீதி பரிபாலனத்துறையின் சட்ட ஒழுங்கு விதிக்கமைய சத்தியப்பிரமாணம் எடுத்த பின்னரே கடமையாற்றுகின்றனர். தமிழீழ அரசதரப்புச் சட்டத்தரணிகள், நீதிபதிகள், உயர்நீதிபதிகள் ஆகியோர் தமிழீழ சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்த நிலையில் தமிழீழச் சட்டக்கல்லூரியில் பயின்றவர்களாகவும் காணப்படுகின்றனர். நீதிமன்றங்களில் தீர்ப்பளிக்கப்பட்டு அவை மேல் நீதிமன்றத்திற்கு முறைப்பாடு செய்யப்படலாம். மேல் நீதிமன்றத்திலும் குற்றவாளியெனத் தீர்ப்பு வழங்கப்பட்ட ஒருவர் தமிழீழத் தேசியத் தலைவருக்கு கருணைமனு விண்ணப்பிக்கலாம்.

தமிழ் நிர்வாக வளர்ச்சி கண்டு சிங்கள அரசாங்கமும், வெளிநாட்டின் அரசசார்பற்ற நிறுவனங்களும் தமது செயற்பாடுகளை தமிழீழ நிர்வாகத்தின் ஊடாகச் செய்கிறார்கள். குறிப்பாக இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்கடன் உதவித்திட்டங்கள், வெளிநாட்டு அரசசார்பற்ற பொதுநிறுவனத்தின் கண்காணிப்பில் இயங்கும் மடு அகதிகள் முகாம் என்பன தமிழீழ அரச நிறுவனத்தினரிடமே தற்பொழுது ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவற்றிலிருந்து சிறீலங்கா அரசானது, இலங்கைத் தீவு இரு வேறு நாடுகள் என்ற உண்மையை உணர்த்துகிறது. ■



தமிழீழ நீதிமன்றமொன்றில் பொதுமக்களுடன் சட்டத்தரணிகள்

## தமிழீழத்தில் செயற்படும்

# தொண்டர் நிறுவனங்களின் மறுபக்கம்

**வடக்கு - கிழக்கில் மேற்கொள்ளப்பட்டுவரும், சிறீலங்காவின் இராணுவ நடவடிக்கையினால் பாதிப்புற்றுவரும் மக்களுக்குச் சேவையாற்றும் பணியில் 20 இற்கும் மேற்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. அவற்றுள் சில, தமக்குக் கிடைக்கின்ற நிதிவளங்களை பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமாக வழங்கி தம்மால் இயன்ற சேவைகளை அளித்து வருகின்றன. ஆனால் சில நிறுவனங்கள் எம் மக்களின் கண்ணீருடன்கூடிய அவல வாழ்க்கையைப் பயன்படுத்திப் பெறும் நிதிவளங்களில் மிகக் குறைந்தளவினை மட்டுமே நிவாரணமாக வழங்கிவிட்டு, பெரும்பகுதியை தமது சுயநலத்திற்காகவும், தமது நிர்வாகத் தேவைகளுக்காகவும் பயன்படுத்தி வருவது அறியப்பட்டுள்ளது. அதேவேளை இன்னும் சில நிறுவனங்கள், வட -கிழக்கில் எந்தவித சேவைகளையும் வழங்காமல், அதைச் சாட்டாகக் காட்டிப் பெறும் நிதிகளை முழுமையாகவே மோசடி செய்தும் வருகின்றன. இத்தகைய அரச சார்பற்ற நிறுவனங்களின் நடவடிக்கைகளை வெளிப்படுத்தும் கட்டுரையே இது.**

மூன்றாம் உலக நாடுகளில் இன்று மக்கள் மத்தியில் அதிகளவு செல்வாக்குப் பெற்றுவரும் சக்திகளில் அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களும் ஒன்று. இந்த அரச சார்பற்ற நிறுவனங்கள் குறிப்பிட்ட நாடுகளில் வாழும் மக்களின் அபிமானத்தைப் பெற்றுக் கொள்கின்ற விடயத்தில், மேற்படி நாடுகளின் அரசியல் சக்திகளுடன் போட்டிபோடும் அளவுக்கு வளர்ந்து வருவதை அவதானிக்க முடிகிறது.

இந்த நிறுவனங்களின் வளர்ச்சிக்கும், அவற்றின் செயற்பாட்டு விரிவாக்கத்திற்கும் மேற்படி நாடுகளில் நிலவும் சமூக மற்றும் அரசியல் சூழ்நிலைகளும் சில சமயம் சாதகமாக அமைந்துவிடுகின்றது. இவ்வாறான தமக்குச் சாதகமான சூழ்நிலைகளைப் பயன்படுத்தி இந்த நிறுவனங்கள் தமது செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன.

**இலங்கையைப் பொறுத்தவரையிலும் இவ்வாறான சூழ்நிலைகளிலேயே அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் செயற்பட்டு வருகின்றன. வடக்கு -கிழக்குப் பகுதிகளில் தமிழ் மக்களுக்கு எதிராக கடந்த பல ஆண்டுகளாக சிறீலங்கா அரசு மேற்கொண்டுவரும் இராணுவ நடவடிக்கைகளும், அதனால் ஏற்பட்ட விளைவுகளும் தான் இன்று அரச சார்பற்ற நிறுவனங்களின் முக்கிய மூலதனம் என்று கூறுமளவிற்கு நிலைமை மாறிவிட்டது. அத்துடன் தென்பகுதி அரசியல் சூழ்நிலைகளால் ஓரம் கட்டப்பட்ட அடிமட்ட மக்களின் அவல நிலையும் இந்த நிறுவனங்களின் வளர்ச்சிக்கு அவ்வப்போது தீனிபோட்டுக் கொண்டிருக்கின்றன.**

## இது ஒரு செய்தியாளரின் பார்வை

வட கிழக்குப் பகுதி மீது சிறீலங்கா அரசு கடுமையான பொருளாதாரத் தடையை விதித்துவிட்டு பாரிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அரசின் இந்த நடவடிக்கைகள் காரணமாக மேற்படி பகுதிகளில் வாழும் மக்களுக்கு ஏற்பட்டு வரும் பாதிப்புக்கள் மிக அதிகம். சமூக, பொருளாதார, கல்வித்துறை ரீதியாகவும் மற்றும் சுகாதார, மருத்துவத்துறை சார்ந்தும் ஏகப்பட்ட பாதிப்புக்களை இப்பகுதி மக்கள் அனுபவித்து வருகின்றனர்.

இவ்வாறான பாதிப்புக்களுக்கு முழுமையான நிவாரணம் வழங்கவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர்வாழ்வளிக்கவும் சிறீலங்கா அரசு இதுவரை தயாராக இல்லை. எதிர்காலத்திலும் அது சாத்தியமாகப் போவதில்லை. இவ்வாறான சூழலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேண்டிய சில அத்தியாவசிய சேவைகளையும், உடனடி நிவாரண வேலைகளையும் கணிசமான அளவில் அரச சார்பற்ற நிறுவனங்கள் மேற்கொண்டு வருகின்றன. இந்த வேலைகளை வடகிழக்கில் இயங்கிவரும் நிறுவனங்கள் உட்பட இப்பகுதியில் இயங்காத சில நிறுவனங்களும் உள்ளூர் நிறுவனங்களின் ஊடாக உதவித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றன. இதே போன்று ஏனைய பகுதிகளிலும் பல்வேறு காரணங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் இந்த நிறுவனங்கள் தமது உதவிக்கரங்களை நீட்டி வருகின்றன. இந்த நிலையில் பாதிக்கப்பட்டு மேற்படி நிறுவனங்களினூடாக உதவி பெற்றுவரும் மக்களின் அபிமானம் இந்த அரசசார்பற்ற நிறுவனங்களின் பக்கம் செல்வதற்கு நியாயமுண்டு.

**அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாட்டையும், அவற்றின் வளர்ச்சியையும்கண்டு சிறீலங்கா அரசு அச்சமடையுமளவுக்கு தற்போது நிலைமை உருவாகியிருப்பதாக அவதானிகள் பலர் கூறுகின்றனர். இதனாலேயே அவற்றின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவும் அந்த நிறுவனங்களின் செயற்பாடுகளைக் கண்காணிக்கவும் அரசு முயற்சித்து வருகிறது.**

பொதுவாக அரசசார்பற்ற நிறுவனங்களின் இலக்குகள் இரண்டு வகையாகக் காணப்படுகின்றன. ஒன்று வெளிப்படையாக புலப்படக் கூடியவையாகவும், குறிப்பிட்ட நிறுவனத்தின் யாப்பு விதிகளில் தெளிவாக வரையறுத்து கூறப்பட்டவையாகவும் இருக்கும். இது எப்பொழுதும் இந்த நிறுவனத்தின் செயற்பாட்டு எல்லைகட்குட்பட்ட மக்களின் நலன் பேணுபவையாக தோற்றமளிக்கும். மற்றையது மறைமுக இலக்காக இருக்கும். இது குறிப்பிட்ட நிறுவனத்தின் யாப்பு விதிகளில் குறிப்பிடப்பட்ட மக்கள் நலன்பேணும் இலக்குகளையுடைய செயற்பாடுகளினூடாக அடையப்படுபவையாக இருக்கும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமளித்தல் என்ற போர்வைக்குள் அனேகரது கண்களுக்கு புலப்படாத வகையில் புதைந்து கிடக்கும். இந்த இலக்குகள் பொதுவாக குறிப்பிட்ட சமூகத்துக்கு நீண்டகால அடிப்படையில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியவையாகவே உள்ளன. பெரும்பாலும் அரசியல் மற்றும் பொருளாதார இலக்குகளாகவே இருக்கும்.

பொதுவாக அரச சார்பற்ற நிறுவனங்களின் பொருளாதார பலம் பெரும்பாலும் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நிதி உதவியாகத்தான் இருந்து வருகின்றது. குறிப்பிட்ட நாட்டில் வாழும் மக்களுக்கு இராணுவ அரசியல் ரீதியாக ஏற்படும் பாதிப்புக்களுக்கு அல்லது சூறாவளி, வெள்ளப் பெருக்குப் போன்ற இயற்கையின் பாதிப்புகளுக்கு நிவாரணமளிக்கப் போவதாகவும் கூறி, பெறக்கூடிய அனைத்து வகையான நிதி உதவிகளையும் பெற்றுக்கொள்வதில் அரச சார்பற்ற நிறுவனங்கள் எப்பொழுதும் பின்நிற்பதில்லை. இந்த நிறுவனங்கள் இவ்வாறான நிதி உதவிளைப் பெற்றுக்கொள்வதற்காக தமது கொள்கைத் திட்டங்களிலும் வேலைத் திட்டங்களிலும் கூட அடிக்கடி மாற்றங்களைச் செய்வதற்கும் இந்த நிறுவனங்கள் தயங்குவதில்லை.

1992 ஆம் ஆண்டு பிறேசில் நாட்டின் தலைநகரான 'றியோடி ஜெனேரோ'வில் நடைபெற்ற அகில உலக சூழல் பாதுகாப்பு மாநாட்டின் சில தீர்மானங்களுக்கமைய, ஐரோப்பிய நாடுகள் சூழல் பாதுகாப்புத் திட்டங்களுக்கு நிதி உதவி வழங்குவதில் ஆர்வம் காட்ட ஆரம்பித்தன. இதைத் தொடர்ந்து பல அரச சார்பற்ற நிறுவனங்கள் தமது கொள்கைத் திட்டங்களின் வரம்புகளையும் கடந்து சென்று சூழல் பாதுகாப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் அதிகளவு நிதி உதவிகளையும் பெற்றுக்கொண்டுள்ளன.

**மேலும், மூன்றாம் உலக நாடுகளின் அரசாங்கங்கள் தமது நாட்டுக்கு கிடைக்கும் வெளிநாட்டு உதவிகளை நாட்டு மக்களின் நலனுக்கு செலவிடுவதற்குப் பதிலாக தமது அரசியல், இராணுவ நோக்கங்களுக்காக செலவிட்டுவருவதை அவதானிக்க முடிகிறது. இதனைத் தடுப்பதற்காக மேற்படி நாடுகளுக்கு உதவி வழங்க முன்வரும் வெளிநாடுகள் தமது உதவிகளை அந்த நாட்டில் செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊடாகவே வழங்குவதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றன.**

இவ்வாறான சூழ்நிலைகளைப் பயன்படுத்தி பெற்றுக்கொள்ளக் கூடிய அதி உச்ச நிதி உதவிகளைப் பெற்றுக்கொள்வதில் அரச சார்பற்ற நிறுவனங்கள் காட்டும் அதீத ஆர்வம் போன்று, மேற்படி நிதி உதவிகளை முழுமையாகப் பயன்படுத்தி பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமளிப்பதில் காட்டப்படுகிறதா என்ற கேள்விக்கு விடைதேடுவது சிரமமாகவே உள்ளது. இந்த விடயத்தில்தான் சில அரசசார்பற்ற நிறுவனங்களின் கோரமான முகத்தை அவதானிக்க முடிகிறது. வடக்கு கிழக்குப் பகுதிகள் மீது சிறீலங்கா அரசு மேற்கொண்டுவரும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இப்பகுதியில் வாழும் மக்கள் தினசரி சிந்தும் இரத்தத்தையும், கண்ணீரையும் முக்கிய மூலதனமாகக் காட்டிப் பெற்றுக் கொள்ளப்படும் நிதி உதவிகளைக்கொண்டு அந்த மக்களது துன்ப துயரங்களை துடைக்க முயற்சிக்கும் போதுதான் சில அரசசார்பற்ற நிறுவனங்கள் மோசடியின் அத்தியாயங்களைப் படைக்க ஆரம்பிக்கின்றன. ஒரு தடவை இந்த மோசடியின் அத்தியாயங்களைப் புரட்டிப் பார்த்தாலே போதும், ஊழலின் உச்சக்கட்டத்தை உணர்ந்து கொண்டு விடலாம். உலகில் உள்ள மோசடியின் வகைகளைத் துல்லியமாகத் தெரிந்து கொள்வதற்கு இவைபோன்ற ஒரு சில நிறுவனங்கள் போதும்.

**கணேசலிங்கம்**

**"யாழ்ப்பாணத்தின் காலைப் பொழுது ஒரு நாள் அமைதியாகப் புலர்ந்தது. வான் பரப்பில் யுத்த விமானங்களின் இரைச்சல் எதுவும் கேட்கவில்லை. யாழ். நகரம் வழமையான சுறுசுறுப்புடன் இயங்க ஆரம்பித்தது. வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று நகரின் மத்தியில் நின்றுகொண்டது. மோட்டார் சைக்கிளில் இருந்து இருவர் இறங்கிக்கொண்டனர். அதில் ஒருவரின் கையில் இருந்த வீடியோக்கமரா உடனடியாகவே தொழிட்பட ஆரம்பித்தது. நகர மத்தியிலும் நகரத்தின் வீதியோரங்களிலும் பனைமட்டைகளால் அமைக்கப்பட்ட கூண்டுகளில் நாட்டப்பட்டிருந்த மரக்கன்றுகளை நோக்கி அந்த கமரா திரும்பியது. மரக்கன்றுகள் நாட்டப்பட்டிருந்த காட்சி வெவ்வேறு கோணங்களில் அந்தக் கமராவுக்குள் கச்சிதமாகப் புகுத்தப்பட்டது. மரக்கன்றுகளுக்கு நீர் ஊற்றிக்கொண்டிருந்த யாழ். மாநகர சபையின் தொழிலாளர்களை நோக்கியும் இக்கமரா தனது முகத்தைத் திருப்பிக் கொண்டது. இது யாழ் நகரத்தில் கடந்த கோடைகாலத்தின் போது ஒரு குறுகிய நேரத்தில் நடைபெற்ற சம்பவம். இச்சம்பவம் குறித்தும் இச்சம்பவத்தின் பின்னணி குறித்தும் எவரும் அப்போது ஆராயவில்லை. இச்சம்பவத்தை அவதானித்தபடி நகரத்தின் வீதியால் நூற்றுக்கணக்கானோர் சென்றனர். அவர்களில் ஒருவரின் சிந்தனைகூட இச்சம்பவத்தை யிட்டு சற்று வித்தியாசமான பாதைக்குச் செல்லத் தவறிவிட்டது. அத்தனை கண்களிலும் மண்ணைத் தூவிவிட்டு மிகவும் சாதுரியமாக மேற்கொள்ளப்பட்ட மோசடி ஒன்றின் முதற்கட்டமே இது.**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் அரசசார்பற்ற நிறுவனங்களில் ஒன்று என்று தம்மைக் கூறிக்கொண்டு, கொழும்பில் தங்கியிருக்கும் ஒரு சில மோசடிப் பேர்வழிகள் இவ்வாறு எடுக்கப்பட்ட வீடியோ பிரதியை தமது மோசடிக்காகப் பயன்படுத்தியுள்ளனர் என்ற செய்தி தற்போது பலருக்கு அதிர்ச்சி தருவதாக உள்ளது. யாழ்ப்பாணத்தில் சூழல் பாதுகாப்புத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதாக சமர்ப்பிக்கப்பட்ட தமது போலியான செயற்திட்டத்துக்கு ஆதாரம் கூறுவதற்காக இவர்கள் இவ்வீடியோப் பிரதியை சமர்ப்பித்துள்ளனர். இதன் மூலம் வெளிநாட்டு நிறுவனம் ஒன்றிடம் இருந்து கணிசமான தொகைப் பணத்தைப் பெற்றுக் கொண்டுள்ளனர் என்ற தகவல்கள் எமக்கு வந்து சேருவதற்கு சற்றுக் காலதாமதமாகிவிட்டது. மரக்கன்றுகள் நாட்டப்பட்ட கூண்டுகளுக்கு முன்னால் நின்று வீடியோ எடுத்ததைத் தவிர, இந்த மரக்கன்றுகளுக்கும் இந்த மோசடிப் பேர்வழிகளுக்கும் இடையில் எந்த உறவும் இல்லை என்பது மட்டும் உண்மையாகும்.

இதுபோன்ற பல போலியான திட்டங்களைச் சமர்ப்பித்து உதவிவழங்கும் கரங்களைத் தம்பக்கம் இழுத்துக் கொள்வதற்கென்று கொழும்பில் ஒரு மோசடிக் கும்பல் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றது. இவர்கள் யாழ்ப்பாணத்தில் தமது அலுவலகம் செயற்படுவதாகக் கூறி போலியான முகவரி ஒன்றையும் வெளியிடுவார்கள். ஆனால் உண்மையில் இந்நிறுவனங்கள் வடக்குக் கிழக்குப் போன்ற பகுதிகள் எங்கேயும் செயற்படுவதில்லை.

இவற்றைவிட வடக்குக் கிழக்குப் பகுதிகளின் நிவாரண, புனர்வாழ்வுத் திட்டங்களுக்கெனக் கூறப்பட்டு பெற்றுக்கொள்ளப்படும் நிதி உதவியில் ஒரு பகுதியை மேற்படி பகுதிகளில் செலவிடுவதும் மிகுதியை ஏனைய பகுதிகளில் செலவிடுவதும், கடந்த காலத்தில் நடைபெற்று வருகின்றன. இவ்வாறான நடவடிக்கையிலும் சில அரச சார்பற்ற நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன.

மேலும் சில அரசசார்பற்ற நிறுவனங்கள் மேற்படி பகுதிகளின் நிவாரணத் திட்டங்களுக்கெனக் கூறிப் பெற்றுக்கொள்ளப்படும் நிதியைப் பயன்படுத்தியே, தமது நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

வடக்குக் கிழக்கில் செயற்படும் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சில அரசசார்பற்ற நிறுவனங்களைத் தவிர, ஏனைய நிறுவனங்கள் ஏதோ ஒருவகையான மோசடியில் ஈடுபட்டுவருவதை உறுதிப்படுத்த அதிகம் சிரமப்படத் தேவையில்லை.

இவற்றைவிட மேற்படி நிறுவனங்களின் செயற்திட்டங்களை ஆழமாக அவதானித்தால் அவற்றில் உள்ள பல்வேறு குறைபாடுகளைப் புரிந்துகொள்ள முடியும்.

**பொதுவாக இந்த நிறுவனங்கள் மேற்கொள்ளும் திட்டங்கள் எதுவும் குறிப்பிட்ட சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துபவையாக இருப்பதில்லை. அத்துடன் நீண்டகால நோக்கில் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துபவையாகவோ அல்லது சமூக மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியவையாகவோ இருப்பதில்லை.**

*தொடர்ச்சி 15ம் பக்கம் . . .*

# சிறுபிள்ளை வேளாண்மை

சிறு கதை

- செங்கை ஆழியான் -

"தம்பி இன்னமும் வரவில்லையே, பிள்ளை"?

வேலுப்பிள்ளை அம்மான் பத்தாவது தடவையாகக் கேட்டுவிட்டார். மாலைக்கருக்கலில் வானத்தில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வௌவால்கள் பறக்கத் தொடங்கியதும், அவர் இருப்புக்கொள்ளாது தவிப்பார். "பேரனை இன்னமும் காணவில்லையே? எங்கு போய் வாறான்?"

திண்ணைக் குந்தில் அமர்ந்து சட்டையொன்றின் கிழிந்த பகுதிகளைத் தைத்துக்கொண்டிருந்த தவமணிக்கு, கிழவனாரின் தவிப்புக்குக் காரணம் புரியும். அவர் சுபாவத்தில் அப்படித்தான். எதற்கும் பதட்டமும் பயமும். அவன் சென்றவிடத்தை எப்படிக் கூறுவது? துடித்துப் போய்விடுவார்.

"இல்லை மாமா... ஏதோ வாசிகசாலைக் கூட்டம் என்றவன். வந்திடுவான், கெதியா வந்திடுவான்". - மனமறிந்த பொய்.

"பார்த்துக்கொண்டு வாறன்..." என்றபடி அவர் கைத்தடியை எடுத்துக்கொண்டு புறப்பட்டபோது தவமணிக்குத் திக்கென்றது. அவர் நிச்சயம் வாசிகசாலைக்குத்தான் போகிறார். அவள் ஒரு வார்த்தைக்குச் சொன்ன பொய். சரவணன் அங்கேயா இருப்பான்?

முற்றத்தில் மேய்ந்துகொண்டிருந்த கோழிகள் மாமரத்தின் பதிந்த கிளைக்கு உந்திப்பறந்தன. தாழ்கிளையிலிருந்து மறுகிளைக்குத் தாவி வசதியாக அமர்ந்துகொள்ளத் தவித்தன.

"தம்பி இன்னமும் வரவில்லையே, பிள்ளை"? கிழவனாரின் குரல் காதுகளில் ரீங்காரமிடுகிறது. மாலை வேளைகளில் அவள், அதற்கு முன் அவள் மாமி -கிழவனாரின் மனைவி -கேட்டுவரும் விசாரிப்பு. உண்மையில் வேலுப்பிள்ளையருக்கு மாலை வேளைக்குப் பின்னர் எவரும் வெளியில் தங்கிவிடக்கூடாது. செல்லவும் கூடாது. அவரும் அப்படித்தான்.

தவமணியின் கணவன் சுப்பிரமணியம், அந்தக் காலத்தில் தமிழரசுக் கட்சியின் பிரதான பேச்சாளன். கட்சியின் எந்தக் கூட்டத்திலும் அவன் குரல் ஒலிக்கும். அவன் பேச்சைக் கேட்பதற்கென்றே ஒரு சனத்திரள் இருந்தது. வன்னிப் பிரதேசத்தின் பட்டிதொட்டிகளில் எங்கும் நிகழும் கூட்டங்களில் அவன் இருப்பான். கட்சியின் பலம் அவன் என பலர் கூறுவதை அவள் கேட்டிருக்கிறாள்.

மாலைவேளை வந்ததும் கிழவர், "தம்பி வந்திட்டானே"? என மனைவியைக் கேட்பார். அந்தக் கேள்வியில் கவலையும் பாசமும் கலந்தொலிக்கும்.

"இல்லை அப்பா, இண்டைக்கு வாடியடியில் கூட்டமாம்..."

கிழவனாரின் முகம் கறுத்து வாடிவிடும்.

"ஊர் கெட்டுக்கிடக்குது... இவன் இப்படித்திரியிறானே? வீட்டில பொஞ்சாதி பிள்ளையிருக்கிறது தெரியாமல்..." என அவர் கவலைப்படுவார்.

அவருடைய உலகம் மிகச்சிறியது. அவர் குடும்பம், அவர் வளவு, அவர் தோட்டம், அவர் வயல்... இவ்வளவும் தாம் அவரின் உலகம். அதற்கப்பால் அவருக்கு எதுவும் தெரியாது.

சுப்பிரமணியம் பேசிப்பேசியே தொண்டனாகவிருந்து செத்துப்போனான். கிளிநொச்சித் தொகுதிக்குப் பாராளுமன்றப் பிரதிநிதியாகத் தேர்தலில் நிற்பதற்கு, நீண்ட காலத்தொண்டனான சுப்பிரமணியத்தை நிறுத்த வேண்டுமென மத்திய செயற்குழுவில் பண்டிதர் கேட்டபோது, "சுப்பிரமணியம் ஒரு தமிழ் வாத்தி..." எனக்காரணம் காட்டித் தட்டிவிட்டு 'கறுப்புக்கோர்ட்' ஒன்றிற்கு அவ்விடம் வழமைபோல ஒதுக்கப்பட்ட அநியாயம் நிகழ்ந்தது. அதன் பின்னர் சுப்பிரமணியம் நொந்துபோனான். அந்த நிகழ்ச்சிக்குப் பின்னர், "தம்பி வீட்டிற்கு வந்திட்டானே"? எனக் கிழவர் கேட்கவேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

பேரன் இப்பொழுது நேரம் கழித்து வீட்டிற்கு வரத்தொடங்கியிருக்கிறான். கிழவனாரின் அடிவயிற்றில் மீண்டும் திகில் பற்றிப்படர்ந்துகொண்டது. மீண்டும் பழைய கேள்வி அங்கு ஒலிக்கத் தொடங்கிவிட்டது.

படலையைத் திறந்துகொண்டு அவர் திரும்பிவருவது தெரிகிறது. தவமணிக்குச் சற்றுக்கலக்கமாக இருந்தது. அவளுடைய பொய் தெரிந்துவிட்டது. அதற்காக அவர் ஏசமாட்டார். அவருக்கு எவரையும் கோபத்துடன் ஏசத்தெரியாது. தனக்குத்தானே சலித்துக்கொள்வார். ஏச்சிலும் பார்க்க அவர் சலிப்பு வேதனையைத்தரும்.

"வாசிகசாலையில் ஒரு கூட்டமுமில்லையாம், பிள்ளை, அவன் உனக்குப் பொய் சொல்லியிருக்கிறான்".

அவள் எதுவும் பேசவில்லை. லாந்தரைக் கொழுத்தி வளைக்கம்பியில் மாட்டிவிட்டாள்.

"எப்படியிருந்தம்? இப்படியாச்சுது... வீடுவாசல் காணி பூமியளை அப்படியே விட்டுவிட்டு இங்க ஓடிவந்திருக்கிறம். கடல்போல வீட்டைவிட்டிட்டு இப்படி இங்க ஒரு திண்ணையில ஒதுங்கவேண்டி வந்திட்டுது. அகதியாகக் கையேந்தி... என்ரவீடு இப்ப எப்படியோ? ஆச்சியின்ர தோட்டம் கொத்தாத்தை வயலெல்லாம் பற்றைக்காடாகியிருக்கும். பாவியள்... நிம்மதியாக இருந்த எங்களை அடிச்சுத் துரத்திப்போட்டான்கள்...".

தவமணி எதுவும் பேசவில்லை. பூநகரியில் அவர்கள் எவ்வளவு மகிழ்ச்சியாகவும் நிம்மதியாகவும் வாழ்ந்தார்கள். அவள் ஓடி விளையாடிய பூமி. அவர்களை வாழவைத்த வயல்கள். திடீரென ஒரு நாள் கௌதாரிமுனைப் பக்கமிருந்து வந்து புகுந்த இராணுவம், அவர்களை அந்தக் கிராமத்தைவிட்டு கடல்கடந்து ஓடி யாழ்ப்பாணத்தில் அகதி நிவாரணத்துடன் வாழவைத்துவிட்டது.

"பிள்ளை... என்ர வீட்டில நான் சாகவேணும்..." என்று கிழவனார் கண்கலங்கினார்.

"அதையே எண்ணிக்கொண்டு ஏன் மாமா கவலைப்படுகிறியள். அங்க திரும்பிப் போகாமலே இருக்கப்போறம்"?

"இனி எங்கை போறது? அரசாங்கத்தோட சண்டை பிடிக்க முடியுமே? உந்தப் பொடியள் தேவையில்லாமல் அரசாங்கத்தோட கொளுவிப்போட்டு இப்படி எல்லாரையும் தவிக்கவிட்டிருக்கிறாங்கள். இவங்களிட்ட நாங்கள் கேட்டனாங்களே எங்களுக்கொரு நாடு வேண்டுமெண்டு"?

அவர் இந்தவாறு பேசத் தொடங்கிவிட்டால் அவரை நிறுத்த முடியாது. எண்பது வயதுப் பழைமை.

அவர் ஏக்கம் அவருக்குப் புரிந்தது. ஒவ்வொரு நாளும் அதிகாலையில் எழுந்ததும் மண்வெட்டியுடன் தோட்டத்திற்குச் சென்று மண்ணைப்பிரட்டி உழைத்துவிட்டு வந்தவர். மாரிமழையின் முதல்துளி நிலத்தில் விழுந்ததும் கலப்பையையும் மாடுகளையும் தயார்நிலையில் வைத்திருப்பவர். ஒரு பெருமழையுடன் ஆடி உழவைத் தேடி ஓடுபவர். மாலைவரை தோட்டத்திலும் வயல்வரம்பிலும் உழைப்பின் நிறைவுடன் திரிந்தவர். இப்படி முடங்கிக்கிடப்பதென்றால்...?

சிலவேளைகளில் கிழவனாருக்கும் பேரன் சரவணனுக்கும் பலத்த வாக்குவாதமே நடக்கும்.

"ஏன்ரா இப்படித்திரியிறாய்? படிப்பைவிட்டிட்டு... கடைசி உன்ர கொப்பர் மாதிரி ஒரு வாத்தியாகவாவது வருவாய் எண்டு நினைச்சன். சரி அதுதான் வேண்டாம். இருக்கிற காணி பூமிகளையாவது ஒழுங்கா எனக்குப் பிறகு பார்க்கக்கூடாதே"?

"அப்பு, உங்களுக்கு ஒண்டும் புரியாது. நீங்கள் அப்படிப் பழக்கப்பட்டிட்டியள். நீங்கள் பிறந்ததே அடிமை நாட்டில... பிரித்தானியர் ஆட்சியில. உங்களுக்குச் சுதந்திரத்தின் மதிப்புத் தெரியாது" என்பான் சரவணன். "படிச்சாப்போல இங்க பல்கலைக்கழகமும் உத்தியோகமும் தேடியே வரப்போகுது? அப்பு, முதலாம் ஆண்டு படிக்கிற பிள்ளைகளில ஒரு இரண்டு சதவீதம்கூட யூனிவேசிற்றிக்குப் போறதில்லை".

"அந்தக் கதையளைவிடு, பேரா... உன் கொப்பா மாதிரிப் பேசாதை. அவன் இவ்வளவு கத்துக்கத்தியும் என்ன கிடைச்சுது? தமிழரசு மேடையில என்ன பேச்சுப் பேசினான்? கொழும்பில சத்தியாக்கிரகம் செய்து அடிவாங்கிக்கொண்டும் வந்தான். சிங்களவங்கள் பொல்லாதவங்கள் கண்டியோ? அப்படியே உன்ர கொப்பரைத் தூக்கிப் பக்கத்தில இருந்த குளத்துக்குள்ள வீசினவங்களாம். அருந்தப்பு. அவனாலேயே எதையும் சாதிக்க முடியவில்லை. இப்ப உந்தப்பொடியளே சாதிக்கப்போகுதுகள்...".

"அப்பு, அப்பாவும் அவரோட சேர்ந்தவையும் பேசிப்பேசியே காலம் கடத்திவிட்டினம். இவர்கள் பேசிப்பேசி தலைவர்மாரின் பாராளுமன்றக் கதிரைகளைக் காப்பாற்றிக்கொடுத்தினம். இப்பத்தைப் பொடியள் பேசுறதில்லை".

"போடா பேரா,. சிறுபிள்ளை வேளாண்மை...".

"சரவணா, அப்புவோட என்ன சண்டை. சாப்பிடவா...". என்று தவமணி அடுக்களைக்குள்ளிருந்து குரல் கொடுப்பாள். அவன் அப்புவைப் பார்த்துச் சிரித்துவிட்டு எழுந்துசெல்வான்.

"அப்புவோட ஏன்ரா வாதாடுகிறாய்.... பாவம் அந்த மனிசன், பூநகரியை விட்டிட்டு இங்கு ஓடி வந்ததிலயிருந்து கலங்கிப்போய் அமைதியிழந்து தவிக்கிறார். உன்ரை அப்பம்மா செத்தபோதுகூட இப்படிக் கலங்கியிருக்கமாட்டார். அந்த மனிசனுக்கு தான் பிறந்து வாழ்ந்த வீட்டில, காணியில சாகவேணுமெண்டு ஒரு விருப்பம்... அது சரிவராதோ என்ற பயம் இப்ப கொஞ்சநாளா...".

"ஓம் அம்மா, முந்தநாள்கூட கனவில சங்குப்பிட்டி, வாடியடி என்றெல்லாம் புசத்தினவர். விட்டிட்டுப் போங்கடா, போங்கடா என்றும் கத்தினவர்...".

சாப்பிட்டுவிட்டுப் போன சரவணன் இன்னமும் வீட்டிற்குத் திரும்பவில்லை. அவன் இனி மூன்று நான்கு மாதங்கள் திரும்பி வரமாட்டான் என்று கிழவரிடம் எப்படிச் சொல்வது? துடிதுடித்துப் போய்விடுவார். ஏக்கத்தில் ஏதாவது நடந்துவிடலாம்.

"தம்பியை இன்னமும் காணவில்லை. நேரம் பத்து மணிக்கு மேல இருக்கும். எங்கையாவது போறன் எண்டு சொன்னவனே பிள்ளை"?

தவமணி எதுவும் கூறாமல் அவரைப் பார்த்தாள். அவள் விழிகளில் அப்பிக் கிடந்த சங்கதியை அவர் புரிந்துகொண்டார்.

"உண்மையைச் சொல்லு, பிள்ளை. எனக்கு மறைக்காதை...".



அதற்குப் பின்னரும் அவளால் அவரிடம் மறைக்க முடியவில்லை.

"இயக்கத்திற்குப் போட்டான், மாமா...".

வேலுப்பிள்ளையர் அப்படியே நிலைகுலைந்து திண்ணையில் அமர்ந்துவிட்டார். எதுவித கலக்கமுமின்றி, இயக்கத்திற்குப் போட்டான், என்று கூறிய மருமகளை ஏறிட்டுப் பார்த்தார். இவளுக்குக் கவலைப்படவே தெரியாதா?

"கொழும்பில பாராளுமன்றத்துக்கு முன்னால் சத்தியாக்கிரகம் இருந்தவைக்குச் சரியான அடியுதையாம்...

தொடர்ச்சி 12ம் பக்கம் ....

# சமாதானம் ஏன் பிறக்கவில்லை!?

தென் மாகாண சபையில் ஆளும் கட்சி தோல்வியடைந்ததைத் தொடர்ந்து, உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பெரும் நம்பிக்கையுடன் வீசத்தொடங்கிய சமாதானக் காற்று நாளடைவில் சந்தடியில்லாமலேயே மறைந்துவிட்டது. இப்போது பெரும் போர்ப்புயல் வீசுவதற்குரிய சாத்தியக் கூறுகளே பெரும்பாலும் காணப்படுகிறது.

இது ஏன்? இதற்கு என்ன காரணம்?

கடந்த 17 வருடங்களாக தொடர்ச்சியாக ஆட்சிப் பீடத்திலிருக்கும் ஐ. தே. க. அரசாங்கம் இந்தத்தீவிற்கு பெரும் அழிவுகளையும், சமூக பொருளாதார பின்னடைவுகளையுமே பெற்றுக் கொடுத்துள்ளது என்ற உண்மை, இப்போது சிங்கள மக்கள் மத்தியிலும் ஏற்படத் தொடங்கியுள்ளது. குறிப்பாக, இனப்பிரச்சினையை ஐ. தே. க. ஆட்சி தீர்க்கத் தவறியதால் தீவிரமடைந்த இப்போர் சிங்கள மக்களது வாழ்வின் ஒவ்வொரு அம்சத்தையும் பெருமளவு பாதித்துள்ளது.

அபிவிருத்தி மற்றும் சமூக நலத் திட்டங்களை நிறுத்திவிட்டு, அப்பணத்தைப் போரில் செலவிட்டும்கூட, அரசினால் போரில் வெல்லமுடியவில்லை. அத்துடன் பல்லாயிரம் சிங்கள இளைஞர்களும் பலியிடப்பட்டு விட்டனர். இதனால் போர்மீதும், இனப்பிரச்சினை தொடர்பான அரசின் அணுகுமுறை மீதும் சிங்கள மக்கள் வெறுப்படைந்துள்ளனர்.

ஐ. தே. க. கட்சி அரசு மீதான இந்த வெறுப்பை-கோபத்தை தென்மாகாணசபைத் தேர்தலில் சிங்கள மக்கள் நிரூபித்து விட்டனர். தென்மாகாண சபைத் தேர்தலில் ஐ. தே. கட்சி அடைந்த தோல்வியைத் தொடர்ந்து, இனப்பிரச்சினை தொடர்பான அணுகுமுறையில் மாற்றத்தை ஏற்படுத்தும்படி அரசு மீது நிர்ப்பந்தம் செய்யப்பட்டபோதும், போரைத் தொடர்வதென்றே விஜேதுங்க அரசு முடிவெடுத்துள்ளது.

சிங்கள அரசு போர்வழியையே தொடர்ந்தும் நாடி நிற்பதற்கு பல காரணிகள் உண்டு.

புலிகள் இயக்கம் பெற்றுள்ள இராணுவ மேல்நிலை அதில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

குறிப்பாக, கடந்த ஆண்டு (1993) புலிகள் அடுத்தடுத்துப் பெற்றுக் கொண்டுள்ள தொடர் இராணுவ வெற்றிகள், புலிகளின் இராணுவ பலத்தை உயர்நிலைக்கு எடுத்துச் சென்றன. பூநகரி கூட்டுத் தள அழிப்பு வெளிப்படையாகவே புலிகளின் பலத்தை உலகிற்கு உணர்த்தியது. அத்துடன் பூநகரிப் பெருவெற்றியுடன் யாழ் குடாநாடு மீதான அரசின் முற்றுகைப்போர் முறையும் முறியடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. தமிழீழ போராட்ட வரலாற்றில் நிரந்தர இடத்தைப் பிடித்து விட்ட பூநகரி இராணுவ வெற்றியுடன், புலிகள் இயக்கத்தின் இராணுவ -அரசியல் பலம் என்றுமில்லாத வகையில் உயர்நிலைக்கு சென்றுள்ளது.

புலிகள் இயக்கம் இராணுவ பலத்துடன் இருக்கும்போது, பேச்சுவார்த்தைகளை நடாத்துவது தமிழினத்துக்குச் சார்பாக அமைந்துவிடும் என்றொரு அச்சம், அரசிடம் உண்டு. இதே வேளை இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு தொடர்பாக புலிகள் சில அடிப்படைக் கோரிக்கைகளை வலியுறுத்துகின்றனர். தமிழரின் தாயகப் பகுதியாக வட -கிழக்கை அரசு அங்கீகரிக்க வேண்டும் என்பது அதில் ஒன்று. ஆனால் இந்தக் கோரிக்கையை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளக் கூட அரசு தயாரில்லை. புலிகள் பலமான நிலையில் இருக்கும்போது பேசப்போனால், இந்தக் கோரிக்கைகள் பற்றிப் பேசவேண்டிய தர்மசங்கட நிலைக்கு அரசு ஆளாகிவிடும். எனவே புலிகள் பலமான நிலையில் இருக்கும் போது பேச்சுவார்த்தைகளுக்குச் செல்லாது, அவர்களை இராணுவ ரீதியாக பலவீனப்படுத்தி விட்டே பேச்சுக்குப் போகவேண்டும் என்று அரசு விரும்புகின்றது.

இத்துடன், சிங்கள இராணுவத் தளபதிகளும் சமாதானப் பேச்சுக்களை விரும்பவில்லை. சமாதான முயற்சி இராணுவத்திற்குப் பாதகமான விளைவுகளைக் கொடுக்கும் என்பது அவர்களது வாதம். பூநகரித் தோல்வியுடன் படையினர் குழப்ப நிலையில் உள்ளனர். அவர்களின் போரிடும் உறுதி -போர் ஆர்வம் பெருமளவு பாதிக்கப்பட்டு விட்டது. இதனால் இராணுவத்தினர் மனத் தளர்ச்சி அடைந்தவர்களாகக் காணப்படுகின்றனர். இந்த நிலையில் சமாதானத்தை ஏற்படுத்தி போரை நிறுத்துவது, மேலும் படையினரது மன வீழ்ச்சிக்குக் காரணியாக அமைந்துவிடும்.

ஆகவே இராணுவத்தை மீண்டும் தட்டிநிறுத்தி உற்சாக மூட்ட ஒரு பெரும் போர் சிங்களத் தளபதிகளுக்குத் தேவைப்படுகிறது.

அத்துடன், புலிகளை அழித்து இறுதி வெற்றி பெற முடியும் என்ற நம்பிக்கை, இன்னமும் சிங்களத் தளபதிகளிடம் குடிகொண்டிருக்கிறது. இதுவரை நாளும் போரில் இறுதி வெற்றி காணமுடியாமைக்கு நவீன போர்த் தளபாடங்கள் பற்றாக்குறைதான் காரணம் என்பது அவர்களது கருத்து. தாம் கோரிய போர்த் தளபாடங்களை அரசு கொள்வனவு செய்து தருமானால், ஒரு குறித்த தவணைக்குள் புலிகளை அழித்து போரை வென்றுகாட்டுவோம் என்று சிங்களத் தளபதிகள் தம்பட்டம் அடித்துள்ளனர். இராணுவத் தளபதிகளது விருப்பத்தைப் பூர்த்தி செய்து போரை வெல்வதில் விஜேதுங்கா பேராவலுடன் உள்ளார். இன்னும் சில நாட்களில் சிங்களத் தளதிகள் கோரிய போர் ஆயுதங்கள் முழுமையாகக் கொழும்பு வந்து விடும். அதற்குரிய முயற்சிகளை ஏற்கனவே பாதுகாப்பு அமைச்சு எடுத்து விட்டது.

இவையெல்லாவற்றுக்கும் மேலாக சிங்கள தேசத்து அரசியலின் போக்கை நிர்ணயிக்கும் பேரினவாதசக்திகளும், சிங்களப் பத்திரிகை, பௌத்த மதபீடமும் சமாதான முயற்சிகளை விரும்பவில்லை. இது விஜேதுங்க அரசுக்கு சார்பானதும், உலகமும் அதேநேரம் அதற்கு உற்சாகம் கொடுக்கும் விடயமும் ஆகும்.

டி. பி. விஜேதுங்காவைப் பொறுத்தவரை, அடுத்த ஜனாதிபதித் தேர்தலை எப்படியாவது வெல்ல வேண்டும் என்பதுதான் அவரது பிரதான குறி. இதற்குப் போர் அரசியலே வசதியானதும் -சுலபமானதும் என்பது அவரது நிலைப்பாடு. இவ்விதம் பல்வேறு காரணங்களுக்காகச் சமாதானப் பேச்சுக்களுக்கான கோரிக்கைகளைப் புறந்தள்ளி விட்டு விஜேதுங்க போருக்கு ஆயத்தப்படுத்துகிறார். சுருக்கமாகச் சொன்னால், இவ்வருட இறுதியில் நடைபெற இருக்கும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் ஒரு பெரிய இராணுவவெற்றியைப் பெற்றுவிட்டு, அதை மூலதனமாகக் கொண்டு ஜனாதிபதித் தேர்தலைச் சந்திக்கும் ஆசையுடன் விஜேதுங்க இருக்கின்றார்.

விஜேதுங்காவின் எதிர்பார்ப்பும் -நம்பிக்கையும் எப்படியிருந்த பொழுதிலும், நடைபெறப் போகும் பாரிய படையெடுப்பின் முடிவில்தான் விஜேதுங்காவின் அரசியல் எதிர்காலம் தங்கியுள்ளது.

கடைசிப்பணயப் பொருளாக திரௌபதியை வைத்து தர்மன் ஆடிய சூதைப் போல, நடைபெற இருக்கும் படையெடுப்பு விஜேதுங்காவுக்கு அமையும் என்பது உறுதி.

வென்றால் நாடு; தோற்றால் காடு (வீடு). ■

**நன்றி: விடுதலைப்புலிகள்**

# சிறுபிள்ளை வேளாண்மை...

சுப்பிரமணியத்திற்கு மண்டையும் உடைந்து கையும் கழண்டு போச்சுதாம். பெயிரா ஏரியில தூக்கி எறிஞ்சிட்டாங்களாம்...”.

இப்படிச்செய்தி வந்த போதுகூட தவமணி கலங்காதிருந்தாள்.

'என்ன பிறப்போ என்று கிழவர் எண்ணிக்கொண்டார். இன்று எவ்வளவு பெரியவிசயம் இந்தக் குடும்பத்தில் நடந்திருக்கிறது. ஆசையாக அன்னை பக்கொட்டி வளர்த்த அவரின் பேரன் இயக்கத்திற்குப் போட்டான்.

அவரின் மனதில் பல்வேறு நிகழ்ச்சிகள் பயங்கரமாக விசுவரூபமெடுத்தன. தினசரிப் பத்திரிகைகளில் வருகின்ற வீரமரணப்படங்கள்... செய்திகள்....

”எனக்குத் தெரியும். எதிர்பார்த்தன்...” என்றார் கிழவர், நீண்ட மௌனத்தின் கழிவில்: ”அவற்றை போக்கு எனக்குத் தெரிந்திருந்தது. அதுதான் கவனமாகப் பொத்திப் பொத்தி வளர்த்தன்... தகப்பனைப் போல இவனும் ஊருக்கு உழைக்கப் போட்டான்...”.

”அப்படியில்லை மாமா...” என்றாள், தவமணி. அவர் பேச்சினை ஒருபோதும் எதிர்த்து ஒரு வார்த்தை பேசாதவள். இன்று 'அப்படியில்லை' என்கிறாள். விழிகளில் தேங்கிய கண்ணீர் ஊடாக அவளை அவர் நிமிர்ந்து ஆழமாக ஏறிட்டுப் பார்த்தார். அவளுக்கு அதற்குமேல் பேசத்தெரியவில்லை.

விம்மலை மறைக்க முகத்தைத் திருப்பிக்கொண்டாள்.

'எங்களை ஓட ஓட விரட்டியடித்தான்கள். எத்தனை பேரைச் சுட்டுத்தள்ளினாங்கள். எத்தனை பேரை வெட்டிக் குவித்தான்கள். எத்தனை வீடுகள் அழிந்தன. எத்தனை பிஞ்சுகள் இன்று எவருமின்றி அநாதைகளாகத் தவிக்கின்றன. இவற்றை யார் கேட்பது? குட்டக்குட்டக் குனியக்கூடாது'.

கிழவர் அதற்குப் பின்னர் அதிகம் பேசவில்லை. முகாம் முகாமாக நான்கு மாதங்களாகத் தன் பேரனைத் தேடி அலைந்தார்.

”அப்பு அவன் இங்க இல்லையணை...” -ஒரு நாள்.
”அப்பு அவன் பயிற்சிக்குப் போட்டான்...” -இன்னொரு நாள்.

”அப்பு அவன் இப்ப உங்களைப் பார்க்கமாட்டானாம்...”.

கிழவர் துடித்துப் போய்விட்டார். 'நான் தூக்கி வளர்த்தபிள்ளை... என்ர மார்பிலும் முகத்திலும் பிஞ்சுக் கால்களால் உதைத்த பிள்ளை... இண்டைக்கு என்ர நெஞ்சில மெய்யாகவே உதைச்சிட்டான்'.

அப்படியே திரும்பி வந்து வாங்கில் சாய்ந்துகொண்டார். கண்கள் இருண்டுகொண்டு வந்தன. அப்படியே மயங்கிப் போனார்.

அவருக்கு மயக்கம் தெளிந்தபோது அவர் அருகில் பேரன் அமர்ந்திருந்தான், அவர் வியப்புடன் அவனைப் பார்த்தார். அவன் தான். சரவணன் தான். எப்ப வந்தான்?

”தம்பி!... பேரா!...” அவர் வலக்கரம் வாஞ்சையுடன் அவனைத் தடவிக்கொடுத்தது. அவன், அவர் கரத்தைப் பாசத்துடன் பற்றிக்கொண்டான்.

அவன் கரம் கல்போல இருந்தது. மென்மையான அக்கரத்திற்கு இப்படியொரு வன்மை எப்படி வந்தது? உடல் சற்று முறுக்கேறிப் பருத்திருந்தது.

”அப்பு...”.

”எப்ப வந்தனி, ராசா”?

”ஒரு வாரமாகுது...”

”ஒரு வாரமோ...”?

”ஓமோம்... நீங்கள் அறிவு நினைவில்லாமல் கிடந்தியள். ஒரே பிசத்தல் தான் அப்பு... வாடியடி... பூநகரி... கொத்தாவில் வயல்... ஆச்சியின்ர தோட்டம் என்று ஒரே பிசத்தல், அப்பு...” என்று அவன் சிரித்தான்.

கிழவருக்கு அப்பொழுது தான் தனது நிலை புரிந்தது. ஒரு வாரமாகப் படுக்கையில் கிடக்கிறேனா?

”அப்பு...” என்றான் சரவணன்: ”என்னவேணும் அப்பு...”?

அவர் கண்கள் மீண்டும் கலங்கித்தவித்தன. அவனுடைய முகத்தை வாஞ்சையுடன் தடவிக்கொடுக்க முயன்றார். அவன் குனிந்து கிழவரின் கரத்தைத் தூக்கி தன் கன்னத்தில் பதியவைத்தான்.
”எனக்கு ஒண்டும் வேண்டாம், ராசா. நீ நல்லா இருக்க வேணும்...”.
”நாங்க நல்லா இருக்கிறம், அப்பு உங்களுக்கு என்ன வேணும்...”?

”எனக்கு என்ன வேணும்...” அவருடைய விழிகள் எங்கோ வெறித்துப் பார்த்தன. ”ஆச்சியின்ரை தோட்டத்தில காலாற நடந்து, கொத்தியாத்தை வயல் வரம்பில நிம்மதியாகச் சற்று நேரம் இருந்து இளைப்பாறி... என்ரை வீட்டுத் தலைவாசல் வாங்கில நிம்மதியாகப் படுக்க வேணும்... பேரா, ஒரு வரிசமா நான் இங்க நிம்மதியாகத் தூங்கவேயில்லை...” என அவர் விம்மினார். உடல் குலுங்கியது.

”மாமா...” என்றபடி தவமணி அருகில் வந்து அவர் மார்பைத் தடவிவிட்டாள். ”இனி நாங்கள் அங்கை போகலாம்... மாமா”.

”அப்பு...” என்றான் சரவணன்: ”அவங்களைத் துரத்திப்போட்டம். இனி நீங்கள் விரும்பியபடி அங்கேயே போகலாம். ஆசைப்பட்டபடி...”.

அவர் வியப்புடன் பேரனின் கரத்தை அழுத்திப் பற்றிக்கொண்டு எழுந்திருக்க முயன்றார். அவரால் அவன் சொல்வதை நம்பவே முடியவில்லை.

”நீங்கள் அவங்களைத் துரத்திப்போட்டியளோ”?

”ஓமணை அப்பு...”

”உண்மைதான் மாமா...” என்றாள் தவமணி.
கிழவரின் முகத்தில் மலர்ச்சி பரவியது. நிறைவுடன் சிரிக்க முயன்றார்.

”நான் தான் உங்களைப் புரிந்துகொள்ளவில்லை...”.

கொத்தாவில் வயல்வெளியில் சுதந்திரக் காற்றைச் சுவாசித்தபடி நடப்பது போன்ற நிம்மதி கொப்பளிக்கிறது. ■

# சீனாவின் ஆயுத வர்த்தகம்: தென்னாசிய அரசியற் சூழலை பாதிக்குமா ?

சிறீலங்காவின் இன்றைய பிரதான ஆயுத விநியோகத்தராக சீனா மாறியுள்ளது. அதிலும், இவ்வருடத்தின் ஆரம்பத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 500 கோடி ரூபா ஆயுதத்துடனும், அண்மையில் கைச்சாத்தாகிய நான்கு போர்க் கப்பலுக்கான உடன்பாட்டுடனும் இது தெளிவாக வரையறுக்கப்பட்டதாக வெளிவந்துள்ளது.

மேலும் சிறீலங்காவின்' முப்படைகளும் இன்று சீன தயாரிப்பு ஆயுதங்களினாலேயே நவீனப்படுத்தப்பட்டுள்ளன. இதற்கு உதாரணங்களாக சிறீலங்கா விமானப்படை கொண்டுள்ள சுப்பர் சொனிக் குண்டுவீச்சு விமானங்களையும், இராணுவம் பயன்படுத்தும் ·ரி-55 ரக டாங்கிகளையும் சிறீலங்காக் கடற்படைக்கு வந்துசேரவுள்ள நான்கு யுத்தக் கப்பல்களையும் குறிப்பிடலாம்.

சிலவேளை, சிறீலங்கா ஆயுதப் படைக்கு தேவைக்கதிகமாகவே சீனா ஆயுதங்களை வழங்கியுள்ளது; வழங்க முன்வந்துமுள்ளது என்று கூடக்கூறலாம். இதில் உள்நாட்டுப் போர் ஒன்றிற்கு சுப்பர்சொனிக் விமானங்களை வழங்கியுள்ளமையும், சிறிய அளவினதான விசைப்படகுகளைப் பயன்படுத்தும் போராளிகளுக்கு எதிராக நீர்மூழ்கி எதிர்ப்பு பீரங்கிக் கப்பல்களையும் வழங்க முன்வந்துள்ளமையும் சுட்டிக் காட்டப்படக் கூடியதாகும்.

மறுவழமாக நவீனகனரக ஆயுதங்கள் என்பதில் மட்டமல்ல, துருப்பினரின் தனிப்பட்ட தானியங்கி ஆயுதங்களையும் சீனாவே பெருமளவில் விநியோகம் செய்கிறது. சீனத்தயாரிப்பான ரி-56, ரி-81, ரி-82 ரகத் தானியங்கித் துப்பாக்கிகளே சிறீலங்கா இராணுவத்தின் பிரதான தனிநபர் சுடுகலன்கள் ஆகும். இதுவே அவர்கள் மத்தியில் பிரபல்யம் பெற்றவையாகவும் விரும்பப்படுபவையாகவும் உள்ளன.

இதேவேளை தனது பிரதான ஆயுத விநியோகத்தராக சீனாவை, சிறீலங்கா அரசு தெரிவு செய்துள்ளமைக்குப் பல காரணங்கள் உண்டு. இதில் மலிவு விலையில் ஆயுதங்களை விற்பனை செய்வதற்கு சீன நிறுவனங்கள் தயாராக இருந்து வருகின்றமையே முக்கிய காரணமாகும்.

சீனாவில் உள்ள பல நிறுவனங்கள் இன்று போட்டி போட்டுக் கொண்டு ஆயுதங்களை விற்பனை செய்வதற்குத் தயாராக உள்ளன. இந்நிறுவனங்கள் யாருக்கு ஆயுதம் விற்பனை செய்கிறோம் என்பதைவிட, எவ்வளவு தொகைக்கு ஆயுதங்களை விற்பனை செய்கிறோம் என்பதிலேயே கண்ணும் கருத்துமாக உள்ளன. அத்தோடு பல நிறுவனங்கள் ஆயுத உற்பத்தியில் ஈடுபடுவதினால், அவற்றின் மத்தியில் உள்ள போட்டி காரணமாக மலிவு விலையில் விற்பனை செய்கின்றன. இந்தவகையில் மூன்றாம் உலக நாடுகளுக்குப் பொருத்தமான ஆயுதங்களை சப்ளைசெய்யும் நாடு என்ற பெயரையும் சீனா பெற்றுள்ளது.

அடுத்ததாக, சீனா ஆயுதங்களை நீண்டகாலக் கடன் அடிப்படையிலும் வழங்கத் தயாராக இருக்கின்றது. சிறீலங்கா அரசுக்கு நான்கு போர்க் கப்பல்களை வழங்க முன்வந்துள்ள சீனா, இதனை 8 முதல் 10 வருட கடன் அடிப்படையில் வழங்க முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவை யாவற்றிற்கும் மேலாகச் சீன ஆயுதக் கொள்வனவில் சிறீலங்காவிற்கு அனுகூலமாக இருப்பது, எதுவித கேள்வியும் இன்றி தேவையான ஆயுதங்களை வழங்குவதற்கு சீனா தயாராக இருப்பதாகும். ஆரம்ப காலத்தில் சிறீலங்கா அரசாங்கம் ஆயுதக் கொள்வனவிற்கென மேற்கை நம்பியிருந்தாலும், மனித உரிமைப் பிரச்சினைகள் ஆயுதம் எதற்காகப் பயன்படுகிறது போன்றன தொடர்பான கேள்விகளுக்கு பதில் அளிக்க வேண்டியிருந்தது. ஆனால் சிறீலங்காவைப் பொறுத்து அது பெரிதும் தர்மசங்கடமான நிலையை உருவாக்குவதாகவும் இருந்தது. இந்நிலையில் கேள்வி இன்றி ஆயுதம் வழங்க சீனா தயாராக இருந்தது. சிறீலங்காவைப் பொறுத்தவரையில் பெரியதொரு பாரத்தைக் குறைப்பதாக இது அமைந்தது.


இதேவேளை, சிறீலங்காவிற்கு ஆயுத விநியோகத்தைச் செய்துவந்த சீன நிறுவனங்கள் சிறீலங்காவின் ஆயுத விநியோகத்தில் ஏகபோக உரிமையையும் அனுபவிக்க முற்பட்டன. இதில் வடசீன நிறுவனமான நொறிக்கோ நிறுவனம் சிறீலங்காவில் ஒரு ஆயுதக் களஞ்சியத்தை அமைக்கும் முயற்சியில் ஈடுபடும் அளவிற்கு இந்நிலை சென்றுள்ளது.

ஆயுத வர்த்தகத்தில் இவ்வாறாக நெருங்கிவந்ததன் விளைவாக, சீனாவுடனான சிறீலங்காவின் இராஜதந்திர உறவும் வலுவாக நெருக்கம் அடைந்தது. இதனை ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர், டி. பி. விஜேதுங்க ' மேற்கொள்ளவிருந்த முதலாவது வெளிநாட்டுப் பயணம் சீனாவிற்கு என்பதில் இருந்து புரிந்துகொள்ள முடிகிறது. அதேவேளை சீனாவின் உதவிப் பிரதம மந்திரி ஒருவர், அண்மையில் கொழும்பு வந்து திரும்பியமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆனால், இராஜதந்திர உறவு எவ்வளவு நெருக்கமடைந்துவரினும் இருநாட்டுத் தலைவர்களும் தமது சந்திப்பின்போது ஆயுதக் கொள்வனவு தொடர்பாகவே பேசினார்கள், பேசவுள்ளார்கள் என்றே தகவல்கள் தெரிவிக்கின்றன. அதாவது, இன்று சிறீலங்கா -சீன உறவின் மையமாக இருப்பது ஆயுத விற்பனையேயாகும்.

ஆனால், சீனாவின் இவ் ஆயுத வர்த்தகம் தென்னாசியப் பிராந்தியத்தில் சிறீலங்காவுடன் மட்டுமானதல்ல. தென்னாசியாவில், சீனாவின் பிரதான ஆயுதக் கொள்வனவாளராக பாகிஸ்தானே உள்ளது. பாகிஸ்தானுடனான சீனாவின் ஆயுத விற்பனையானது தரத்திலும் பெறுமதியிலும் சிறீலங்காவுடனானதைவிட எத்தனையோ மடங்கு அதிகமாகும். அதாவது பாகிஸ்தானுக்கான ஆயுத விநியோகத்தில் அமெரிக்காவிட்ட இடத்தை சீனா நிரப்பியுள்ளது. நெருக்கடி வேளையில் சீனாவையே பாகிஸ்தான் நம்பியுமுள்ளது.

அத்தோடு, பாகிஸ்தான் அணுகுண்டு தயாரிப்பதற்குப் பிரதானமாக உதவிய நாடு சீனா என்றே இன்று உலகத்தாரால் நம்பப்படுகிறது. அணு ஆயுதத் தயாரிப்புக்கான தொழில் நுட்பத்தை மட்டுமல்ல, விஞ்ஞானிகளைக் கொடுத்து உதவியதாகக் கூட அமெரிக்காவின் புலனாய்வு அறிக்கைகள் குறிப்பிடுகின்றன. அத்தோடு, அணுகுண்டுகளைக்




சீனாவும், அதன் ஆயுத- இராணுவ இராஜதந்திர அழுத்தங்களுக்கு உட்பட்டுவரும், தென்னாசிய பிராந்திய ஒத்துழைப்புக்கான கூட்டமைப்பு நாடுகளும்.

காவிச் செல்லக்கூடிய விமானங்களையும் ஏவுகணைகளையும் பாகிஸ்தானுக்கு சீனா விநியோகித்ததாக அறிய வருகின்றது.

இதேவேளை, தென்னாசியப் பிராந்தியத்துக்குள் அடங்காதுவிடினும் அதன் அண்டை நாடான மியான்மாருக்கும் (பர்மா) பிரதான ஆயுத விநியோகத்தராக சீனாவே உள்ளது. இதேவேளை, பர்மாவுடனான உறவு இராணுவ உதவி என்பதைவிட, நெருக்கமான பொருளாதார உறவையும் கொண்டுள்ளது. தற்சமயம் மியான்மாருடன் தன் எல்லையைத் திறந்துவிட்டு வியாபாரம் செய்யும் ஒரே நாடு சீனாவேயாகும்.

இவ்வாறாகச் சீனாவின் ஆயுத வர்த்தகம் தென்னாசியாவிலும், அதன் அண்டை நாடுகளிலும் வளர்ந்து வருகின்றமையானது, இப்பிராந்தியத்தில் சீனாவின் செல்வாக்கை அதிகரிப்பதோடு, இப்பிராந்தியத்தின் இராணுவச் சமநிலையை பாதிக்குமா என்பது பற்றி இன்று பலத்ததொரு கேள்வி எழுந்துள்ளது. ஆனால் கெடுபிடிப்போர், உலகில் நிலவிய காலத்தில் இவ்வாறான சூழ்நிலையில் பார்த்த கோணத்தில் இன்று இதனைப் பார்க்க முடியுமா என்பதில் பல சந்தேகங்கள் இருக்கத்தான் செய்கின்றன. ஏனெனில் கெடுபிடிப்போர் காலத்தில் பேணப்பட்ட ஆயுத சமநிலையோ அன்றி வலுச்சமநிலையோ இன்றைய புதிய உலக ஒழுங்கில் அர்த்தமற்றவையாகவே மாறிவருகின்றன.

இன்று ஆயுதச் சமநிலையில் கவனம் கொள்வதிலும் விட, பொருளாதாரப் போட்டியிலும் பொருளாதார வளத்திலுமே அரசுகள் ஆர்வம் கொண்டுள்ளன. எனவே இவ்விடயங்களையும் பொருளாதார நோக்கில் பார்ப்பதில், சற்று அர்த்தங்கள் இருப்பதாகவே படுகின்றது.

தென்னாசியப் பிராந்தியத்தில் சீனாவின் ஆதிக்க வளர்ச்சியானது வெளிப்படையான பார்வையில் இந்தியாவின் ஆதிக்கத்துக்கு முட்டுக்கட்டையானது என்றே கணிக்கப்படுதல் வேண்டும். அதிலும் எல்லைக்கோட்டு விவகாரத்தில் போரிட்டுக் கொண்ட இந்நாடுகளில், ஒன்றின் பிராந்தியத்துக்குள் மற்றதொன்று பிரவேசிப்பது என்பது சந்தேகத்தை ஏற்படுத்துவது நியாயமானதே.

ஆனால், உலகில் புதிய பொருளாதார ஒழுங்கு ஒன்று அறிமுகமாக்கப்பட்ட பிறகு, இந்நாடுகளின் உறவுகளில் ஏற்பட்ட புதிய பரிணாமங்களைக் கொண்டு இப்பிரச்சினையை அவ்வாறுதான் பார்க்க வேண்டுமா என்ற கேள்வியை எழுப்பியுள்ளன. எடுத்துக்காட்டாக கடந்த வருட இறுதியில் இந்தியப் பிரதமர் நரசிம்மராவும், சீனப் பிரதமர் லீபெங்கும் செய்துகொண்ட மூன்று முக்கிய ஒப்பந்தங்களைக் கூறலாம். இவ் ஒப்பந்தங்கள் சீன -இந்திய எல்லைப் பதற்றத்தைத் தணித்துள்ளதோடு அப்பிராந்தியத்தில் படைக் குறைப்புக்கும் புதிய பொருளாதார உறவுகளுக்கும் வழி வகுத்துள்ளன எனலாம்.

இதைவிட அடுத்த முக்கிய விடயமாக அமைந்தது, அண்மையில் ஜெனிவாவில் நடைபெற்ற மனித உரிமைகள் மகாநாட்டில் சீனா, பாகிஸ்தானை நட்டாற்றில் கைவிட்டு இந்தியாவுக்கு உதவியமையாகும். காஸ்மீர் விவகாரத்தை சர்வதேச பிரச்சினையாக்கும் நடவடிக்கையாக, இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தான் கொண்டு வந்த தீர்மானத்தைக் கைவிடுமாறு பாகிஸ்தானை ஈரானுடன் சேர்ந்து சீனா நிர்ப்பந்தித்து வெற்றியும் கண்டது.

இவ்விரு சம்பவங்களும் உலகம் கெடுபிடிப்போர் காலத்தில் இருந்த வெளியுறவுக் கொள்கையில் இருந்து முற்றாக மாற்றமான வெளியுறவுக் கொள்கையை கடைப்பிடிக்கத் தொடங்கியுள்ளமையைக் காட்டுவதாகவே உள்ளது. இதில் முன்னர்போல் அணி சேர்ந்துகொண்டு ஒரு அணியை எதிர்ப்பதை விட்டுவிட்டு தற்பொழுது முக்கியமாகப் பொருளாதார நலனைக் குறியாகக் கொண்டு செயற்படுவதையே காணக்கூடியதாக உள்ளது.

ஆனால், எது எவ்வாறாக இருப்பினும் தென்னாசியாவில் சீனாவின் இராணுவ உறவுகள், இராஜதந்திர உறவுகள் இப்பிராந்தியத்தின் அரசியலைப் பாதிப்படையச் செய்வதை தவிர்க்க முடியாது போகும் என்றே அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். ஏற்கனவே யப்பானுடன் கிழக்கு ஆசியாவிலும் தென்கிழக்காசியாவிலும் பெரும் வர்த்தகப் போட்டியில் ஈடுபட்டுள்ள சீனா, தென்னாசியாவிலும் அப்போட்டியில் ஈடுபடுதல் தவிர்க்க முடியாது போகலாம்.

ஆனால், தென்னாசியாவிற்கு ஏற்றுமதியாகும் மின்சார இலத்திரனியல் பாவனைப் பொருட்கள் உற்பத்தியில் தற்போது யப்பானுடன் சீனாவினால் போட்டியிட முடியாது. இந்நிலையில் இராணுவ ரீதியான பெரும் பணம் புரளும் வர்த்தகத்தில் சீனா ஈடுபடுகின்றது. இந்நிலையானது முழுமையான வர்த்தகம் என்ற ரீதியில் நோக்கப்படினும் அதன் அழுத்தங்கள் அரசியலிலும் பொருளாதாரத்திலும் பதியாமல் இருப்பதென்பது சாத்தியமாகப் போவதில்லை. இதற்கு மியாமாரில் இன்று சிறப்பானதொரு உதாரணமாகும்.

இவ்வாறானதொரு நிலை சிறீலங்கா அரசியலிலும் சற்று வெளிப்படையாகவே தெரியத் தொடங்கியுள்ளது. அண்மையில் கைச்சாத்தாகிய 115 கோடி ரூபா பெறுமதியான யுத்தக் கப்பல் கொள்வனவு தொடர்பான பேச்சுக்கள், ஒரு சமயம் குழப்பம் அடையும் நிலையை எட்டிய போது இந்நிலை தென்பட்டது. இவ் ஒப்பந்தம் கைச்சாத்தான நிலையில் சீனாவுக்கு மேற்கொள்ளவிருந்த சிறீலங்கா ஜனாதிபதியின் விஜயம் பாதிக்கப்படலாம் என்ற நிலையும் உருவானது. அதாவது இவ் ஆயுதக் கொள்வனவில் சீனா மறைமுகமாக நிர்ப்பந்தித்தது என்றே கொள்ள முடியும்.

இந்நிலையில் தென்னாசியப் பிராந்தியத்தில் சீனாவின் இராணுவ -இராஜதந்திர அழுத்தங்கள் எழும் நிலையில், தென்னாசிய நாடுகளுக்கு இடையில் அரசியல் சூழ்நிலை மாற்றங்களுக்கும் வாய்ப்புக்கள் அதிகரிப்பது தவிர்க்க முடியாது போகலாம். அதிலும் பல முரண்பாடுகளைக் கொண்டுள்ள இப்பிராந்திய நாடுகளின் உறவில் இது மறைமுகமாகவாவது தாக்கத்தை விளைவிக்கக் கூடும். ஏனென்றால், சீனாவின் இப்பிரவேசம் இந்நாடுகளின் இராணுவ சமநிலையை மாற்றி அமைக்கும் என்பதில் எதுவித சந்தேகமில்லை என்பதினால் ஆகும். ■

# பெருமெடுப்பிலான படைக்கலக் கொள்வனவு

## பெரும் போருக்காகச் செய்யப்படும் முன்னேற்பாடுகள்

படைத்துறையின் உயர்மட்டக் குழுவொன்று சிங்களப் படைகளுக்குத் தேவையான போராயுதங்களைக் கொள்வனவு செய்வதற்காக அண்மையில் ரஷ்யா, சீனா, இஸ்ரேல், தென்னாபிரிக்கா போன்ற நாடுகளுக்குச் சென்றுவந்துள்ளதாக, சிறீலங்காவின் பாதுகாப்பு அமைச்சின் செய்திகள் தெரிவித்திருந்தன.

டாங்கிகள், கவசவாகனங்கள் மற்றும் கடற்படைப் போர்க் கலங்கள் என்பன இந்த ஆயுதக் கொள்வனவில் பிரதான இடத்தை வகித்துள்ளன. இதிலும் கடற்படைக்குத் தேவையான போராயுதங்களைக் கொள்வனவு செய்வதிலேயே பாதுகாப்பு அமைச்சு அதிக அக்கறை காட்டியுள்ளது. கடற்படைக்கான ஆயுதக் கொள்வனவுக்கென சீனா சென்ற குழு, அதன் பிரதம தளபதியான வைஸ் அட்மிரல் மொகான் சமரசேகராவின் தலைமையிலேயே சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. கடற்படைக்குத் தேவையான போராயுதங்களுக்கு கொள்வனவு செய்வதற்கு மட்டும் 100 கோடி ரூபாவுக்கு மேல் பணம் ஒதுக்கப்பட்டிருந்ததாக பத்திரிகைகள் செய்தி தெரிவித்திருந்தன. இந்தப் பணத்தில் நான்கு சக்தி வாய்ந்த போர்க்கலங்களின் கொள்வனவும் அடங்கியுள்ளது. (போர்க்கப்பல் ஒன்று, பீரங்கிப் படகுகள் இரண்டு, தரையிறக்கும் படகு ஒன்று) இதுதவிர, இஸ்ரேலின் உதவியுடன் கொழும்பில் வைத்து விசைப்படகுகள் கட்டும் திட்டம் ஒன்றிலும் பாதுகாப்பு அமைச்சு உடன்பாடு கண்டுள்ளது. இந்த உடன்படிக்கையின்படி, நான்கு விசைப் படகுகள் உடனடியாகக் கட்டப்பட இருக்கின்றன. இந்த விசைப்படகு ஒன்றுக்கான செலவு ஒரு கோடியே அறுபது இலட்சம் என, கொழும்புப் பத்திரிகைகள் செய்தி தெரிவிக்கின்றன. இந்த வகையில் சுமார் ஏழு கோடி ரூபா செலவில் நான்கு விசைப் படகுகளையும் விரைவில் கட்டிமுடிக்கப் பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

இது தவிர ரஷ்யா மற்றும் தென்னாபிரிக்காவுக்கு அண்மையில் சென்றுவந்த குழுக்கள், தரைப் படைக்குத் தேவையான போர் ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதில் ஈடுபட்டிருந்தன.

முன்னாள், செக்கோசிலவாக்கியாவிலிருந்து வாங்கப்பட்டிருந்த T 55 ரக டாங்கிகள் இரண்டை 'யாழ்தேவி இராணுவ நடவடிக்கை'யின்போது சிங்களப் படை இழந்ததை வைத்துக் கொண்டு அந்த டாங்கிகள் போருக்குச் சிறந்தவை அல்ல என்ற ஒரு மனநிலை படையினரிடையே உருவாகியுள்ளது. இந்த T 55 மீதுள்ள அவநம்பிக்கையைப் போக்கி படையினருக்குப் புத்துணர்ச்சி அளிக்கும் நோக்குடனும், படைபலத்தை அதிகரிக்கும் நோக்குடனும் B. M. P. எனப்படும் ரஷ்யத் தயாரிப்பான 100 டாங்கிகளைக் கொள்வனவு செய்ய பாதுகாப்பு அமைச்சகம் நடவடிக்கை எடுத்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால் T 55 டாங்கிகளை விட B. M. P. ரக டாங்கிகள் எந்தவிதத்திலும் சிறந்தவையல்ல. T 55 ரக டாங்கிகளை பிரதான சமர் டாங்கிகள் (Main Battle Tank) என்றே அழைப்பர். B. M. P. ரக டாங்கிகள் துருப்புக்களை ஏற்றிச் செல்லும் கவச வாகனமாகவே பயன்படுத்தக் கூடியவை. ஒரு தடவையில் 11 பேர் இதில் பயணம் செய்ய முடியும். இதில் மூவர் டாங்கி இயக்குனராக இருப்பர். அதேவேளை B. M. P. டாங்கிகள் சிறந்த கவசத்தடுப்பைக் கொண்டவை மட்டுமல்ல, சாதாரண ரக சுரிகுழல் துப்பாக்கிச் சூடுகளையும் -எறிகணைச் சிதறல்களையும் தாங்கக் கூடிய B. M. P. யின் பக்கவாட்டுக் கவசத்தடுப்பானது, 50 கலிபர் துப்பாக்கிச் சூடுகளுக்கு ஈடுகொடுக்க மாட்டாது. அத்துடன் B.-M. P. க்கு மேலே பொருத்தப்பட்டுள்ள இயந்திரத் துப்பாக்கியைப் பயன்படுத்தி, டாங்கி ஓடிக்கொண்டிருக்கும்போது குறிபார்த்துச் சுடமுடியாது. (ஆனால் T 55 இல் அவ்வித வசதியுண்டு.) இவ்விதம் ஒரு பலவீனமான டாங்கியைக் கொள்வனவு செய்து சாதாரண சிப்பாய்களுக்கு போலி நம்பிக்கையூட்டவும் சிங்கள மக்களுக்கு 'வெள்ளி' காட்டவும் பாதுகாப்பு அமைச்சு முயன்றுள்ளது. இதேவேளை தென்னாபிரிக்காவில் இருந்து பவள் ரக கவச வாகனங்களை வாங்கவும் பாதுகாப்பு அமைச்சு முயன்றபடி உள்ளது. 200 பவள் கவச வாகனங்களை அரசு வாங்கவிருப்பதாக அப்பத்திரிகை தெரிவித்துள்ளது. இத்துடன் சிறீலங்கா வான்படையின் பலத்தை அதிகரிக்கும் எண்ணத்துடன், மேலதிகமாக மிக் 8 ரக வானூர்திகளையும் ரஷ்யாவில் இருந்து சிறீலங்கா கொள்வனவு செய்ய இருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.



ரஷ்யத் தயாரிப்பான B.M.P. டாங்கி
புத்தூக்கமா? போலி நம்பிக்கையா?

ஆயுதக் கொள்வனவு ஒருபுறம் இருக்க, சிங்களப் படைகள் தமது ஆளணியிலும் எண்ணிக்கையை அதிகரிக்க முடிவெடுத்துள்ளன. பத்தாயிரம் சிங்கள இளைஞர்களைப் படைக்குச் சேர்க்கும் திட்டத்தை இப்போது அரசு தீவிரமாக நடைமுறைப்படுத்தி வருகின்றது,

சிறீலங்கா அரசு செய்யும் பெருந்தொகையிலான இந்த ஆயுதக் கொள்வனவும் படைபல அதிகரிப்பும் 'ஒருபெரும் போருக்கான முன்னேற்பாடுகள்தான்' என்பது சாதாரண குடிமகனுக்குமே விளங்கும்.

சிங்கள அரசின் இந்த போர் முஸ்தீபை, சபாநாயகர் முகமதுவின் யாழ். விஜயம் கெடுத்துவிடலாம் என்ற அச்சத்தின் விளைவாகவே, அவரது யாழ் விஜயத்துக்கு அரசு தடைபோட்டது என்பது சொல்லாமலே விளங்கக்கூடியது.

சிங்களப் படைகள் நடத்தத் திட்டமிட்டுள்ள இந்த இராணுவப் படையெடுப்பு, பெரும்பாலும் ஈருடகத் தாக்குதல் முறையில் நடைபெற வாய்ப்புக்கள் உண்டு. புலிகளிடம் உள்ள பிரதேசங்களை ஆக்கிரமிப்பதுடன், சிங்களப் படைத்துறைக்கு சிம்ம சொப்பனமாக மாறிவரும் கடற்புலிகளின் பலத்தையும் சிதைத்துவிட, அப்படையெடுப்பை சிங்கள அரசு பயன்படுத்தலாம் என அவதானிகள் எதிர்பார்க்கின்றனர். சிங்களக் கடற்படைக்கென அண்மையில் கொள்வனவு செய்யப்பட்டுள்ள சக்தி வாய்ந்த பெருந்தொகை ஆயுதங்கள், இதனை உறுதிப்படுத்துபவையாகவே உள்ளன.

### B. M. P. டாங்கி

| | | |
|---|---|---|
| | முழு நீளம் | – 6. 74 மீற்றர் |
| | முழு அகலம் | – 2. 94 மீற்றர் |
| | முழு உயரம் | – 2. 15 மீற்றர் |
| இதன் வேகம்: | நல்ல பாதையில் | – 80 கி. மீ. (மணிக்கு) |
| | தண்ணீரிலாயின் | – 6 – 8 கி. மீ. (மணிக்கு) |
| | 2.2 மீற்றர் அகழியை இது கடக்கும் | |
| கவசத் தடுப்பு: | உடற் பகுதி | – 19 மி. மீ. |
| | சுழல் மேடை | – 23 மி. மீ. |
| ஆயுதம்: | 73 மி. மீ. பீரங்கி (40 எறிகணைகளுடன்) | |
| | 7. 62 மி. மீ. P. K.,T. ஆயுதம் (2000 ரவைகளுடன்) | |

புதிதாக சக்திவாய்ந்த தாங்கிகளை, கப்பல்களை, போர் ஆயுதங்களை வாங்கிக் குவிப்பதன் மூலம் போரை வென்றுவிடலாம் என்ற நப்பாசையுடனேயே சிங்கள ஆளும் வர்க்கம் இப்போதும் உள்ளது. இந்தச் சித்தாந்தத்தையே கடந்த நான்கு வருடப் போரிலும் அது பிரயோகித்துத் தோல்வி கண்டதை ஒரு பாடமாக எடுக்க அரசு தயாராகவில்லை.

நாம் ஏற்கனவே குறிப்பிட்டது போல சிங்களத் தளபதிகளும், சிங்கள ஆளும் வர்க்கமும் சூதாடிகளின் மனோபாவத்தில் தான் தொடர்ந்தும் வாழ்ந்து வருகின்றனர். 'எப்படியும் அடுத்ததில் வெற்றி காணலாம்' என்ற அசட்டு நம்பிக்கையில் தனது அனைத்துப் பணத்தையும் படிப்படியாக சூதில் இழந்து, இறுதியில் ஒட்டாண்டியாகும் ஒரு சூதாடியின் செயற்பாட்டைப் போலவே, சிங்கள ஆளும் வர்க்கத்தினதும் சிங்களத் தளபதிகளினதும் செயற்பாடுகள் உள்ளன.

இத்தகைய சூதாடி மனோநிலை மாறினால்தான், போர் நிறுத்தப்பட வாய்ப்புகள் இருக்கும். ஆனால் இத்தகைய மனமாற்றம் விஜேதுங்காவின் ஆட்சியில் ஏற்பட வாய்ப்புகள் இருக்குமா? ■

**நன்றி: விடுதலைப்புலிகள்**

●●●●●●●●●●●

# சுதந்திரத்தைத் தேடி...

குழுவினருக்கு ஆணையிடும் போது, கையும் ஆயுதத்தை இயக்கியபடி தான் இருக்கும். 1993-09-28 அன்று கிளாலியைக் கைப்பற்றும் நோக்குடனும், வெளிகொண்ட இடத்துக்குப் புலிகளை இழுத்து அழித்தொழிக்கும் எண்ணத்துடனும் சிங்கள வெறிப்படை பாரிய கவச வாகனங்கள் சகிதமும் விமானத்தின் துணையுடனும் கரையோரமாக முன்னேறிக்கொண்டிருந்தது.

28ம் திகதி சமருக்கான ஆயத்தங்கள் நடைபெறுகின்றன. யாழிசையின் அணியும் இதற்குத் தன்னைத் தயார் செய்கின்றது.

இரவு,

யாழிசையின் தலைமையின் கீழ், சமர் நடைபெறும் இடம் நோக்கி குழு நகர ஆரம்பிக்கின்றது. ஓர் இடத்தில் நிறுத்தப்பட்டு இருட்டுடனேயே நிலைகள் எடுக்கப்படுகின்றன. அதிகாலை ஐந்தரை மணிக்கு முன்னர் அனைத்து ஒழுங்குகளும் தயார் நிலையில்.

எதிரியிடமிருந்து விடியற்காலை 8 மணி வரை எதுவிதமான எதிர்ப்பும் இல்லை. சிறிது நேரத்தின் பின்னர் பெரும் ஓசையுடன் தீப்பிழம்பினைக் கக்கியபடி கவசவாகனமும், மேலே குண்டு வீச்சு விமானமும் பாதுகாப்பு வழங்க, சிங்களப்படை எமதணியை நோக்கி முன்னேற ஆரம்பித்தது. ஆனையிறவு யுத்தத்தின் பின்னர் கை கலக்கும் அளவுக்கு அருகருகே நின்று சண்டை பிடிக்கும் நிலை உருவாகியிருந்தது. அங்கு, எதிரியை புலிகளின் குழுக்கள் முன்னேற ஆரம்பித்தன. தனது குழுவினருக்கு கட்டளைகளைப் பிறப்பித்தபடி யாழிசையும்.

யுத்தம் மும்மரமாக நடைபெறுகிறது. பலமான எதிர்ப்புக்களுக்கு மத்தியில் பெரும் சமர் ஒன்று நடந்து கொண்டிருந்தது.

முன்னே இறங்கிய அணியை நோக்கி எதிரியின் கவசவாகனம் ஒன்று வேகமாக வரத்தொடங்கியது. அதை அடுத்து கடற்கரையோரமாகவும் சில வந்து கொண்டிருந்தன. குண்டுகள் நாலாபுறமும் மழையெனப் பொழிந்தன. முன்னேறிய யாழிசையின் அணியை இலக்காகக் கொண்டு எதிரியின் கவசவாகனம் தீயைக் கக்கியபடி. கட்டளை ஒன்று கிடைக்கப்பெறுகிறது. போராளி ஒருவரின் கையில் இருந்த ஆர். பி. ஜீ (R. P. G) முழங்குகிறது. குலுங்கியவண்ணம் அதிர்வுடன் நின்ற இரும்புப்பேய், தீப்பிடித்து எரிய ஆரம்பித்தது. தொடர்ந்து குண்டு மழை.

"கவனம், பிள்ளைகள் கவனம். கவர் எடுத்து அடி படுங்கோ". யாழிசையின் குரல் அப்பேரிரைச்சலூடும் கேட்டபடி இருந்தது.

சிங்களப்படைக்குப் பாதுகாப்பாக வந்த மற்றொரு கவசவாகனமும் போராளிகளினால் சிதைக்கப்படுகிறது. வெற்றிப் பெருமிதம்! புலியணி முன்னேறுகிறது. பாதுகாப்பை இழந்த அரசபடையோ தலைதெறிக்க ஓடுகிறது. திக்குத் திசை தெரியாது மழையெனச் சன்னங்களைப் பொழிந்துகொண்டிருந்தான் எதிரி.

"ஆமி ஓடுறான். துரத்தியடியுங்கோம்மா. அடியுங்கோ. கவர் பாத்து அடிபடுங்கோ" என்று யாழிசையின் குரல் சந்தோசத்துடன் எதிரொலித்தது.
எரிந்த வண்ணம் இருந்த இரும்புப் பேயையும் கடந்து முன்னேற முயன்ற வேளையில், ஓடிய எதிரி பொலிந்த குண்டுகள் யாழிசையின் வயிற்றைத் தாக்கியது. ஆயுதத்தை இயக்கியபடி ஓடியவள் தரையில் சாய்ந்துவிட்டாள். "மனோக்கா. மனோக்கா" என்று அழைத்தபடியே அருகில் இருந்த பெண்போராளி காயத்திற்கு வைத்தியம் செய்கின்றாள். மனோக்கா என்ற குரலுக்கு என்ன? என்ற பதிலே அவளின் வாய் உதிர்த்த கடைசிச் சொல்லாகும்.

அடிபட்டுத்தான் சாக வேணும் எனக்கூறும் வார்த்தையை உண்மையாக்கிவிட்டாள். அவளின் பிள்ளைகளோ. தாயை இழந்த நிலையில்!
இவளைப் பெறக் கொடுத்து வைக்கவில்லையே என ஏங்கும் தாய்மார்களோ, அந்நிகழ்வை நம்பமுடியாத நிலையில் அவளுக்கென்று ஒரு பங்கு உணவினை வைத்துக்கொண்டு காத்தவண்ணம் உள்ளனர். தனது சொந்த மகளை. சகோதரியை இழந்த தவிப்பில் ஒவ்வொரு குடும்பமும்!
"பேப்பரிலை வரும் படத்தை வெட்டி எடுத்து மாலை போடுங்கோ எண்டு சொன்னதை உண்மையாக்கிப் போட்டாள்" எனக் கூறிக் கண்ணீர் வடிப் போர் ஒரு புறம்! போராளிகள் வித்தியாசமானவர்கள்தான். இவளும் அப்படியே. அவளுடன் படித்த நாளை. பயிற்சி நாளை. சமர்க்களத்து நாளை அசை போட்டபடி சக போராளிகள்!
விடுதலை வேள்வியில் ஆகுதியான எத்தனையோ மாவீரர்களுடன் இவளும் இணைந்துவிட்டாள். அணையாத ஜோதியாகி விட்டாள். நிச்சயம் விடுதலைப் பூ, பூக்கும் என்ற நம்பிக்கையில். ■

■ **பொன்னிலா**

# தமிழ் அகதிகளை வலுக்கட்டாயமாக திருப்பி அனுப்ப தமிழக அரசு முயற்சி

## நூற்றுக்கணக்கான அகதிகள் யூ.என்.எச்.சி. ஆரிடம் முறையீடு

இலங்கைத் தமிழ் அகதிகளை வலுக்கட்டாயமாகத் திருப்பி அனுப்பும் நடவடிக்கையில், தமிழக அதிகாரிகள் இறங்கியுள்ளனர். இதற்கென அவர்கள் அகதிகளுக்கு பெரும் நெருக்கடிகளைக் கொடுத்து வருகின்றனர். இது குறித்து அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயத்தில் முறைப்பாடும் செய்யப்பட்டுள்ளது.

தமிழக அதிகாரிகளின் இந்நெருக்குதல்கள் அகதிகளை உடன் திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்கும்படி தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா கோரிக்கை விடுத்ததைத் தொடர்ந்தே, எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரியவருகின்றது.

இலங்கைத் தமிழ் அகதிகள் அனைவரையும் உடன் திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்கும்படி முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து, அதிகாரிகள் முகாம்களுக்குச் சென்று நாடு திரும்ப விரும்புவதாக எழுத்தில் தரும்படி அகதிகளை வற்புறுத்தி வருகின்றனர்.

இலங்கைக்குத் திருப்பி அனுப்ப ஒப்புதல் தரும் படிவத்தில் கைச்சாத்திடும்படி தமக்குத்தரும் நெருக்கடி பற்றி, நூற்றுக்கணக்கான அகதிகள் எழுதிய மனுக்கள் அகதிகளுக்கான ஐக்கிநாடுகள் ஸ்தாபனத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன.

சில முகாம்களில் அகதிகள் நாடு திரும்ப ஒப்புதல் வழங்கும் வரை அவர்களுக்குக் கொடுக்கப்படும் உதவிப்பணமும், உணவுப் பொருள் வழங்குதலும் நிறுத்தப்பட்டன. அன்றாட உணவுக்காக இலங்கைத் தமிழ் அகதிகள் வெளியில் வேலைகளுக்குச் செல்லவும் அனுமதிக்கப்படவில்லை. இறுதியாண்டு தவணைப் பரீட்சையின்போது முகாம்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டதாகவும் பெரியார் மாவட்டத்தில் உள்ள முகாம்களில் உள்ளவர்கள் கலக்டரிடம் முறையிட்டுள்ளனர்.

திருப்பி அனுப்பப்பட்டவர்கள் எழுதும் கடிதங்களும் ஊக்கமளிப்பதாக இல்லை. வவுனியாவில் உள்ள முகாமில் இப்போது தங்கவைக்கப்பட்டிருக்கும் அகதி ஒருவர், பவானி சடாக் முகாமில் வாழும் தனது உறவினர் ஒருவருக்கு எழுதிய கடிதத்தில் தானும் தன்னுடன் வந்தவர்களும் இன்னமும் முகாம்களில் வாழ்வதாகவும், தமது காணி பூமிகளையோ, வீட்டையோ சென்று பார்க்க முடியவில்லை என்றும், பொருள்களின் விலை எக்கச்சக்கமாக அதிகரித்திருப்பதாகவும், வாழ்க்கை தமிழ் நாட்டு முகாம்களைவிடக் கடினம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் நாட்டின் ஆளும் கட்சியான அனைத்து இந்திய அ.-தி.மு.க. தவிர மற்றக் கட்சிகள் அனைத்தும் இலங்கைத் தமிழ் அகதிகள் திருப்பி அனுப்பப்படுவதை எதிர்க்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. ■

# தமிழ்நாட்டில் அகதிகள் வெளியேற்றப்படுவது குறித்துப் பேச இந்தியத்தூதரகம் மறுப்பு

■ *பிரிட்டிஸ் அகதிகள் கவுன்சில் இயக்குனர் தகவல்*

"தமிழ்நாட்டில், இலங்கைத் தீவில் சுமுகநிலை திரும்பு முன்பே அகதிகளைத் திருப்பியனுப்பும் செயற்பாடுகள் நடைபெறுகின்றன. இது ஐரோப்பா உட்பட வெளிநாடுகளில் உள்ள தமிழ் அகதிகளை திருப்பியனுப்ப முற்படும் சக்திகளுக்கு ஊக்கமும் ஆக்கமும் அளிக்கின்றன. எனவே இது தொடர்பாக பிரிட்டனில் உள்ள இந்தியத் தூதரகத்துடன் தொடர்பு கொண்டு சூழ்நிலை குறித்து விவாதிக்கவும் கருத்துக்களை கேட்டறியவும் முயன்றோம். இதற்கான சந்திப்புக்கு நாம் நேரம் ஒதுக்கும்படி இருமுறை இந்தியத் தூதரகத்தை கேட்டிருந்தோம். ஆயினும் இன்றுவரை அவர்கள் எவ்வித பதிலும் தரவில்லை" என பிரிட்டன் அகதிகள் கவுன்சில் இயக்குனர் திரு. அல்வ்டூப்ஸ் (Mr. Alfdubs) தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் இது குறித்து பேசுகையில், "இன்று ஐரோப்பிய நாடுகள் அகதிகளை தேவையற்ற மனிதர்களாகக் கருதுகின்றன. இதனாலேயே அவர்களுக்கு எதிரான செயற்பாடுகள் அதிகரிக்கின்றன. பிரேசிலில் நடைபெற்ற ஐரோப்பிய நாடுகளுக்கிடையான கூட்டத்தில், அகதிகளைத் தேவையற்ற மனிதர்களாக்கக் கூடிய வகையில் முடிவுகளும் மேற்கொள்ளப்பட்டு விட்டதாகத் தெரிகிறது. இந்நிலையில் தமிழ் அகதிகளை துன்புறும் வர்க்கத்தை சார்ந்தவர்களாக கருத இந்நாடுகள் இடம்கொடுக்காததில் ஆச்சரியமில்லை. ஆயினும் தமிழ் மக்கள் தொடர்ந்தும் தங்களுக்கு சிறீலங்கா அரசால் அங்கு வாழமுடியாதவாறு ஏற்படுத்தப்படும் துன்புறுத்தல்களை வெளிப்படுத்தி வரவேண்டும்" என்றார். ■

# தமிழகத்திலிருந்து அகதிகளை திருப்பி அனுப்புவதை நிறுத்துக !

## □ அகதிகளுக்கான ஐ.நா.உயர் ஸ்தானிகராலயம் இந்திய அரசிடம் கோரிக்கை

தமிழ்நாடு அகதிமுகாம்களில் தங்கியுள்ள வடக்கு -கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த இலங்கைத் தமிழ் அகதிகளை இலங்கைக்கு திருப்பியனுப்புவதை நிறுத்த வேண்டும் என்று கோரி அகதிகளுக்கான ஐ. நா. தூதுவராலயம் இந்திய மத்திய அரசை கேட்டுள்ளது. வடக்கு -கிழக்கு மாகாணங்களில் இன்னமும் சுமூக நிலைமை தோன்றவில்லை என்பதனாலேயே, இக்கோரிக்கை விடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் ஒரு லட்சம் மக்கள் தமிழ்நாட்டு அகதிமுகாம்களில் தங்கியிருக்கிறார்கள் என்பதும் சுமார் 30 ஆயிரம் மக்கள் கப்பல் மூலம் வடக்கு -கிழக்கு மாகாணங்களை வந்தடைந்துள்ளார்கள் என்பதும் தெரிந்ததே.

வடக்கு -கிழக்கு மாகாணங்களில் சுமூக நிலை நிலவவில்லை. இங்கு தொடர்ந்தும் யுத்தம் நடைபெறுகிறது. இதனால் திரும்பிவரும் அகதிமக்கள் மீளத் தங்கும் போது பாதிக்கப்பட நேரிடுகிறது. இது தவிர்க்க முடியாதது.

இதன் காரணமாக தமிழ்நாட்டு அகதி முகாம்களில் உள்ள ஈழத் தமிழ் அகதி மக்களை அனுப்பி வைப்பதை உடன் நிறுத்துமாறும் அகதிகளுக்கான ஐ. நா உயர்ஸ்தானிகராலயத்தின் ஜெனிவா தலைமையகம் இந்திய அரசாங்கத்திற்கு கோரிக்கை விடுத்துள்ளது.

வடக்கு - கிழக்கில் யுத்தம் நடைபெறாத பகுதியென்று எதுவுமில்லை. மீளச்சென்று குடியேறிய அகதி மக்களும் அகதிமுகாம்களில் தங்கியுள்ள அகதி மக்களும் பெரும் கஸ்டத்தை அனுபவிக்கின்றனர்.

யாழ் குடாநாட்டிற்கு கப்பல் மூலம் பல அகதிமக்கள் வந்து சேர்ந்துள்ளனர். இவ்வாறு வந்து சேர்ந்த மக்களில் பலர் சிறீலங்கா படையினரால் பாதிக்கப்படும் குருநகர் பகுதியிலேயே தங்கியுள்ளனர். இப்பகுதி இராணுவத்தின், கடற்படையின் தாக்குதலுக்குள் உட்படுகின்றது.

சமீபத்தில் இந்தியாவிலிருந்து மீளத்திரும்பிவந்த குடும்பஸ்த்தர் ஒருவர், கடற்படையின் தாக்குதலுக்குள்ளாகி இறந்துள்ளார். இப்குதியைச் சேர்ந்த பலர் காயமடைந்துமுள்ளனர்.

ஜோசப் அன்ரனி பிரான்சிஸ் என்ற இந்த நபர் கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் யாழ்ப்பாணம் திரும்பி வந்தவர்.

இவர் கடந்த டிசம்பர் மாதம் மண்டைதீவு கடற் பரப்பில் வைத்து சிறீலங்கா கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். குருநகரைச் சேர்ந்த இவரின் மரணம் குறித்து ஐ. நா உயர்ஸ்தானிகராலயம் இந்திய அரசுக்கு அறிவித்துள்ளது. அகதிகளுக்கான ஐ. நா. உயர்ஸ்தானிகராலயத்தின் யாழ் கிளை ஜெனிவா தலைமையகத்திற்கு இத்தகவலைத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டு அகதிமுகாம்களில் உள்ள அகதி மக்களை தமிழ்நாடு முதலமைச்சர் வலிந்து அனுப்புவதை நிறுத்த வேண்டுமென்பதை, ஜெனிவாவில் உள்ள ஐ. நா தூதுவராலயம் இந்திய மத்திய அரசுக்கு விடுத்த கோரிக்கையில் சுட்டிக்காட்டியிருப்பதாகத் தெரியவருகிறது. ■

# குடாநாடு மீது...

நிலைகளில் இருந்து தரைநகர முயன்ற இராணுவத்தினர் மேல் விடுதலைப் புலிகள் நடாத்திய எதிர்த் தாக்குதலில், சிறீலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டும் காயமடைந்தும் பின்வாங்கிச் சென்றனர் என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பருத்தித்துறை மணற்காட்டுப் பகுதியில் சிறீலங்காக் கடற்படையினர் தரையிறங்க எடுத்த முயற்சி விடுதலைப் புலிகளினால் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டது. கப்பல்மூலம் சிறீலங்காக் கடற்படையினர் தரையிறங்க முயன்று முடியாமல் பின்னடித்ததும், கடலிலிருந்து செம்பியன்பற்று, தாளையடி, நாகர் கோயில் கரையோரப் பகுதிகள் மீது பீரங்கித் தாக்குதல்கள் பரவலாக நடத்தப்பட்டுள்ளதாகவும் செய்திகள் கூறுகின்றன.

### கடற்புலிகளின் பாதுகாப்பு படகுச் சேவை

இது ஒருபுறம் இருக்க இத்தாக்குதலுக்கு மத்தியிலும் தமிழீழ விடுதலைப் புலிகளினது கடற்புலிகளின் பாதுகாப்போடு 130 படகுகள், கிளாலிக் கடலேரியூடாகப் பிரயாணிகளை கொண்டு சென்று கரைசேர்த்துள்ளன.

### 35 பொதுமக்கள் பலி

சிறீலங்காவின் இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள வடபகுதிப் பிரதேசங்கள் மீது, சிறீலங்கா இராணுவம் மிகமோசமான இனஅழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிகிறது.

கடந்த 30 தினங்களுக்குள் இப்பகுதி மக்கள் மீது நடாத்தப்பட்ட 9 சுற்றிவளைப்பு இராணுவ நடவடிக்கைகளில் 35 பொதுமக்கள் கொலை செய்யப்பட்டும் நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்பட்டும் உள்ளனர். இவர்களில் 25 பேரை பயங்கரவாத தடைச் சட்டக் கைதிகளாக மாற்றியுள்ளதாகவும் தெரிகிறது.

இதற்கிடை தலைமன்னாரில் 9 பொதுமக்கள் சிறீலங்காக் கடற்படையினரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது. ■

# பொலிசாரும் சிங்களவரும்...

மதிப்பதாகவும் இரவும் பகலும் சிங்களவர்களை மீன் பிடிக்க அனுமதிப்பதாகவும் தெரியவருகிறது.

### நிந்தாவூரில் சூடு

நிந்தாவூரில் சிங்கள ஊர்காவல் படையினர் இருவர் பூட்டப்பட்டிருந்த தேனீர்க் கடையைத் திறந்து தேநீர் தரும்படி கேட்டு சச்சரவு செய்ததாகவும், சத்தம் கேட்டு வெளியே வந்த அபூபக்கர் என்பவர் மேல் துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு ஓடிவிட்டார்கள் எனவும் காயப்பட்டவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. ■

# கிழக்கில் பெரும்...

டும் என்பதையும் வலியுறுத்துவேன்"

இவ்வாறு முஸ்லீம் காங்கிரசின் சிறீலங்கா எம். பி. யாக நியமிக்கப்பட்டுள்ள யூ. எல். முகையதீன் கூறியுள்ளார்.

### புலிகளுக்கு வரவேற்பு

அவர் மேலும் பேசுகையில், "விடுதலைப் புலிகளைப் பொறுத்தமட்டில் முஸ்லீம்கள் விடயத்தில், கடந்த இரண்டு வருடகாலமாக கொள்கை மாற்றத்தை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இம்மாற்றத்தை நான் வரவேற்கிறேன். முஸ்லீம்கள் எவ்வித அச்சமுமின்றி புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களூடாகப் பயணம் செய்து வருவது உண்மையான சூழ்நிலையை வெளிப்படுத்துகிறது. சிறீலங்காப் படையினரின் பாதுகாப்பின்றியே எவ்வித அச்சமும் இன்றி முஸ்லீம்கள் நெடுந்தூரம் பயணம் செய்கின்றார்கள்" என்றார். ■

# தமிழீழத்தில் செயற்படும்...

மேலும் இந்த நிறுவனங்களினால் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள் எதுவும் குறிப்பிட்ட பகுதியில் வாழும் மக்களின் ஆலோசனைகளின்றித் தீட்டப்பட்டவையாகவே உள்ளன. குறிப்பிட்ட நிறுவனம் தனக்குக் கிடைக்கின்ற நிதி உதவியின் உச்ச எல்லையை மட்டும் கருத்தில் எடுத்து தன்னிச்சையாகத் தயாரிக்கும் திட்டத்தை பாதிக்கப்பட்ட மக்களின் மீது திணிக்கும் நிலைமையைத் தெளிவாக அவதானிக்க முடிகிறது.

இவற்றைவிட சில நிறுவனங்கள் தமது திட்டங்களின் ஊடாக பல வெளிநாட்டு, உள்நாட்டு வர்த்தக நிறுவனங்களின் முகவர்களாகவும் செயற்படுவதுண்டு.

**அரசின் அராஜகச் செயல்களால் அவல வாழ்வுக்கு அடித்துச் செல்லப்பட்ட மீன்பிடித் தொழிலாளி ஒருவனுக்கு மீன்பிடி வலையைக் கொடுப்பதற்குப் பதிலாக, பிடிக்கப்பட்ட மீனை நிவாரணமாக வழங்கும் கொள்கையுடைய தொண்டர் நிறுவனங்கள் தமது கொள்கையை மறுசீரமைப்புச் செய்ய வேண்டும். பாதிக்கப்பட்ட மக்கள் சமூகத்தின் எதிர்கால நலன்களை அடிப்படையாக வைத்து சமூக விழிப்புணர்ச்சியும், அதன் மூலம் நவீன உலக ஓட்டத்திற்கு இசைவான சமூக மாற்றத்தையும் உருவாக்குவதில் இவ்வாறான தொண்டர் நிறுவனங்கள் கணிசமான பங்கை வகிக்க முடியும். தமது வளங்களை இந்தத் திசையை நோக்கித் திருப்புவதற்கு இந்த நிறுவனங்கள் முயற்சிக்க வேண்டும்.**

ஆனால், தூய்மையான சமூக உணர்வுடனும், மற்றும் மனிதநேய அடிப்படையிலும் அரசசார்பற்ற நிறுவனங்கள் செயற்படாதவரையிலும், இவ்வாறான நிறுவனங்கள் குறிப்பிட்ட பகுதி மக்களின் உண்மையான தேவைகளை உணர்ந்தும் தமது சுயலாபத்தை மறந்தும் உணர்வுபூர்வமாக சேவையாற்றாத வரையிலும் குறுகிய, மற்றும் நீண்டகால அடிப்படையில் நோக்கும்போது இவ்வாறான அரசசார்பற்ற நிறுவனங்களின் சேவைகள் யாவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர நிவாரணியாக அமைவதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்றே கூற முடியும். ■

# புலிகள் மீதான தடைவிதிப்பு எனக்கு கிடைத்த வெற்றியாகும்


**- ஜெயலலிதா**

"தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடைசெய்வதற்கு மத்திய அரசினால் அனுமதி வழங்கப்பட்டிருப்பது, தமிழக அரசுக்கும் எனக்கும் கிடைத்த வெற்றியாகும். தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடையை நீடிக்க வேண்டுமென நான் விரும்பினேன். ஆனால் நான் திரும்பத் திரும்பக் கோரிக்கைகளை விடுத்தபோதிலும் மத்திய அரசாங்கம் அதனைத் தாமதப்படுத்தியது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடைசெய்யக் கோரி தமிழக மாநில அரசு தீர்மானம் நிறைவேற்றியபோது, இவ்வாறான தீர்மானங்கள் தேவையற்றதென மத்திய அமைச்சர் சவான் கூறினார். கடைசியாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு தடைவிதிக்கப்பட்டுவிட்டது. நான் விடுதலைப் புலிகளை களைந்து எறிந்துவிட்டு ஸ்திரமான அரசைப் பேணுகிறேன்."

இவ்வாறு தமிழக மாநில முதலமைச்சர் ஜெயலலிதா பெருந்துறைக் கூட்டமொன்றில் பேசுகையில் கூறியுள்ளார். ■

# பிடிப்பதற்கு ஒரு துப்பாக்கி வேண்டும்



பூ பாளம் பாடி
பூத்த ஒரு காலையில்
நீலவானம் கணத்தில் நிறம் மாறியது.
கருமுகில்கள் திரள்வதைக்
கவனிக்க நிமிர்ந்தோம்.
நீர்த்துளிகளுக்குப் பதிலாக
குண்டுமழை பொழிந்துவிட்டு
தெற்கே விரையும் விமானங்கள்.
கூற்றுவன் வேறிடம் கடுகிவிரைந்ததும்,
எழுந்து தேடி.....
சதைக் குவியல் கண்டு
விழுந்து புரண்டு ...... ஓ!
எல்லோரும் எங்கே?

நொடிப் பொழுதில்
உதிர்ந்து போயின உறவுப்பூக்கள்.

அச்சத்துடன் நிமிர்ந்த விழிகள்
வானோக்கியபடியே
விறைத்துப் போயின.
நான்கு முண்டங்களும்
மூன்று தலைகளும் .....
எண்ணிப் பார்த்து,
பொருத்திப் பிடித்து,
களைத்து விழும்போது
மீண்டும் வரும்
அந்தச் சண்டைப் பறவைகள்.
மீதமுள்ள குண்டுகளையும்
உதிர்த்துவிட்டுப் போகும்.
கணக்குப் பாருங்கள்
எத்தனை ஆயிரம் தலைகள்
தொலைந்து போனதென்று.
நினைத்துப் பாருங்கள்
எத்தனை ஆயிரம் வீடுகள்,
பாடசாலைகள், கோயில்கள்
எரிந்து போனதென்று.

அம்மாவும் அப்பாவும்
எரிந்து கருகிய சாம்பலை எடுத்து
'மண்வீடு' கட்டி விளையாடும்
குழந்தையைப் பாருங்கள்.
இந்தப் பிஞ்சு நாளை வளர்ந்ததும்
படிப்பதற்கு
புத்தகமா கேட்கும்?
பிடிப்பதற்குத் துப்பாக்கிதான் கேட்கும்.

**- வினோதினி**

**நன்றி:**
**'சுதந்திரப் பறவைகள்'**

U.T.O
211 Katherine Road
London E6 1BU, UK
T/F 081-470 8593

L.T.T.E
Postbox 47, 7600 Struer
Denmark. Tel/Fax
97-841231

W.T.C.C
HOF JECKLIN, 7415 RODELS
SWITZERLAND
Tel/Fax: 081-831797

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

T.C.C
Via Mariano Stabile - 34
90139 Palermo, Italy
T/F091-611 3179

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel 435 81142 F435 81191

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo - 1, Norway
Tel 022-191260 F-190114

T.C.C
Groot Hertoginnelaan 106
2517 BL Den Haag, Nederland
Tel 070-346 1963 F-384 0683

T.C.C
Glomminge Grand-29
16362 Spanga, Sweden
Tel 08-7612943

Printed by Observer Group Newspapers,